
கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



குஜராத் டுடே *Exclusive*

KALKI 13.4.2008 ரூ.10.00 96 பக்கங்கள்





கண்ணும் கண்ணும்

'கண்ணும் கண்ணும்'னு டைட்டில் வச்சாலும் வச்சாங்க. பார்க்கறவங்க கண்கள்லாம் கலங்கிப் போயிடுது. கவர்ச்சியில்லாத காதல், தூய்மையான நட்புன்னு ரொம்ப நாளைக்கு அப்புறமா நல்ல தரமான படம். இயக்குநர் மாரிமுத்து வாழ்க!


கதை நாயகன் பிரசன்னா காதலனாகவும் நண்பனாகவும் நடிப்பில் முத்திரை பதிக்கிறார். அறிமுக நாயகி உதயதாரா அழகு சிற்பம்! சிரிக்கும்போது கன்னத்தில் குழி; நம் மனத்துக்குள் பனித்துளி! நடிப்பிலும் பக்குவம் தெரிகிறது.

வடிவேல் காமெடி கான்சப்டும் புதுமையான முயற்சி, சிரிப்பதோடு சிந்திக்கவும் வைக்கிறது. விஜய்குமார் - நிஜ அப்பாவை ஞாபகப்படுத்தும் தத்ரூபமான நடிப்பு.

குற்றாலம், செங்கோட்டை சுற்றியுள்ள கிராமங்களின் அழகைப் படம் பிடித்துக் காட்டிய விதம் அருமை. பன்னீர்செல்வத்தோட கேமராவுக்கு திருஷ்டி சுத்திப் போடணும். அடிதடி ஆக்ஷன் எதுவும் இல்லை; மென்மையான திரைக்கதையில் ஆபாசமில்லாத வசனம். கேட்க இனிமை! வைரமுத்துவின் வருடும் வரிகளுக்கு தீனாவோட இசை தேனருவி. திரைக்கதையில் கொஞ்சம் தொய்வு இருக்கறதுனால சுவாரஸ்யம் குறையுது! ஆனால், கிளைமாக்ஸ் புதுமை. தரமான கதையைச் சொல்லி ஜெயிச்சிருக்காங்க.

கண்ணும் கண்ணும், காதலர்களுக்குப் பாடப் புத்தகம்!

- முத்து



சமுதாயப் பிரச்னைகளை மக்களின் பிரச்னைகளாக அணுகாததன் வருத்தத்தை வெளிப்படுத்தியது சாய்நாத் கட்டுரை.

- எஸ்.சுந்தரேசன், கோவை - 38

வேலை தேடும் இளைஞர்கள், கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய பத்துக் கட்டளைப் பட்டியல் தற்கால அவசியம்.

- சி.மகேஷ், திருச்சி - 17

முதலிடத்தில் இருந்த ஹாக்கி அணியை, கடைசி இடத்துக்குத் தள்ளி விட்டதில் சந்தர்ப்பவாத அரசியல்வாதி களுக்கும் பெரும் பங்கு உண்டு!

- த.அசாருதீன், பள்ளிப்பட்டி

'குஜராத் டுடே' கட்டுரைகள் மிகவும் பிரமாதம்! அந்தப் பக்கங்களைத் தனியே எடுத்துச் சேகரித்து வருகிறேன்.

- உஷா, சென்னை - 4

'மேன்ஷன் குளியல்' என்ற கே.சி.பிரபாகரன் கவிதையும், வடி வமைப்பும் வெகு கலக்கல்!

- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், நாகர்கோவில்

சுத்தம் சிறுகதை அருமை. காந்திய சிந்தனையை உள்ளடக்கி ஜொலித்தது.

- இந்திரன், நாகர்கோவில்

குஜராத் மக்கள் மதவெறியர்கள் அல்ல! அரசியல்தான் அவர்களைப் பிளவு படுத்துகிறது என்னும் கூற்று முற்றிலும் உண்மை.

- ஏ.பி.எஸ். ரவீந்திரன், வள்ளியூர்

குஜராத்தில், திக்கற்று நிற்கின்ற பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு, ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் சேவை போற்றத்தக்கது.

- கதீஜா, சென்னை

'எதிர்பார்ப்பு' சிறுகதை எழுத்தாளர் களின் எதிர்பார்ப்பு மட்டுமல்ல; அனைத்து வாசகர்களின் எதிர்பார்ப்பும்தான்.

- சுதா நாராயணன், ஸ்ரீரங்கம்

கலவரங்களை எதிர்க்கின்ற சரத், கடைசிவரை உறுதியாக இருப்பாரா..?

- கே.பிரசன்னா, குடந்தை - 1

உறுதி?

நல்ல நிர்வாகத் திறமையுடன் அரசாட்சி நடத்தினால், களங்கமேற்படுத்திய சம்பவங்களும் அடிபட்டுப்போகும் என்பதை உணர்த்திவிட்டார் நரேந்திர மோடி.

- எம்.காயத்ரி, திருச்சி - 17

ஸ்வீட் போஸ்ட்

கல்கிக்கு குஜராத் மீது இவ்வளவு அக்கறை ஏன் என்று கேள்வி கேட்பவர்களுக்கு, நல்ல பதிலடி தமிழக ஐ.ஏ.எஸ்.களின் திறமையை வெளிச்சம் போட்டுக் காட்டிய கட்டுரை.

- ஆர்.நாகராஜன், சென்னை - 117

சர்தார் சரோவர் அணை திட்டம், மேதா பட்கரால் தடைப்பட்டாலும் அரசின் சாதுர்யத்தால் மக்கள் தாகம் தணிந்தது பாராட்டுக்குரியது.

- டி.ரவி, ஈரோடு - 1

6.4.08 இதழின் கவர் ஸ்டோரியில், ஷரீபா படத்துக்குப் பதிலாக பதர் சயீத் படத்தை வெளியிட்டுள்ளீர்களே...?

- கஜீர், சென்னை - 114

ஸாரி! இதோ ஷரீபா படம் :

- ஆர்.



கல்கி

பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பாரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
4343 8888, 2225 1522,
2225 0623, 2225 1324,

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 68 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

புஷ்பவனம் குப்புசாமி - அனிதா குப்புசாமி

எங்க வீட்டுல அழுக்கில்லாம அயர்ன் பண்ணி சட்டை போட்ட முதல் ஆள் நான்தான். ஆனாலும் அந்த நிலைமை வர்றதுக்கு நாங்க பட்டபாடு கொஞ்ச நஞ்சமில்ல.

மண்ணை நம்பி ஏலேலங்கடி மரமிருக்க
மரத்தை நம்பி ஏலேலங்கடி இலையிருக்க
இலையை நம்பி ஏலேலங்கடி பூவிருக்க
பூவை நம்பி ஏலேலங்கடி பிஞ்சிருக்க
பிஞ்சை நம்பி ஏலேலங்கடி காயிருக்க
காயை நம்பி ஏலேலங்கடி கனியிருக்க
கனியை நம்பி ஏலேலங்கடி நீயிருக்க
உன்னை நம்பி ஏலேலங்கடி நானிருக்கேன்

என்று பாடிக்கொண்டே வறுமையில் தொலைத்த வாழ்க்கையை வயல் வரப்புகளில் தேடித் திரியும் விவசாய பூமிதான் புஷ்பவனம். வேதாரண்யம் வட்டத்திலிருக்



மனசெல்லாம் மண்வாசம் - 1

இது புதுசு

அவிச்ச மலர்!

கிற வானம் பார்த்த மண்ணு அது.

கூடவே வரும் நிழல் மாதிரி வறுமை என்னைத் துரத்துச்சு. வறுமைங்கறது ஒரு விதத்துல ஒரு மனோ பாவம். அதுல வாழ பழகிக்கிட்டா எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கற தைரியம் வந்துடும்.

எனக்கும் அப்படித்தான். வறுமையை நான் உணர்ந்ததாலோ என்னவோ, படிப்புதான் என்னைக் கரையேத்தும்னு முழுமையா நம்பினேன். எட்டாம் வகுப்பு வரைக்கும் புஷ்பவனத்துல படிச்சுட்டு, ஒன்பதாவது, பத்தாவது படிக்க வேதாரண்யத்துக்குப் போக வேண்டியிருந்தது. புஷ்பவனத்துக்கும் வேதாரண்யத்துக்கும் கிட்டத்தட்ட பதினாலு கிலோ மீட்டர் நடக்கணும்.

தோளில் மஞ்சப் பைக்கட்டு, உள்ளே பழஞ்சோறும் புத்தகங்களும்... காலுக்குச் செருப்பு என்பதே ஆடம்பரம்... செருப்பு வைத்திருக்கும் பிள்ளைகளும் அதைத் தூக்கி கையில் வைத்துக்கொள்வார்கள். சீக்கிரம் தேய்ஞ்சுடக் கூடாதில்லே!

பதினான்கு கி.மீ. நடந்தேனில்லையா? பள்ளிக்கூடம் வந்ததும் களைப்பில் உறக்கம் கண்ணைச் சொக்கும். பசி வேறு வயிற்றைக் கிள்ளும். உறக்கம் கலைவதற்காகப் பக்கத்திலிருப்பவனிடம் என் தலையில் ஓங்கி குட்டச் சொல்வேன். இப்படி ஒரு தடவை அவன் என்னைக் குட்டும்போது வாத்தியார் பார்த்துவிட்டார். பெரிய ரகளையாகிப் போச்சு.

இருந்தும் படிப்பு மேல இருந்த ஆர்வம் எனக்குக் குறையல.

ஒரு பக்கம் வறுமையோடும், மறு பக்கம் யதார்த்தத்தோடும் போராட வேண்டி இருந்துச்சு.

ஏதேதோ ஏக்கங்களோடு உயர்நிலைப் படிப்பை முடித்தபோது அடுத்து சங்கீதத்துக்குச் சம்பந்தமே இல்லாத கல்லூரிப் படிப்பில் பாட்டு என்னை வந்து பற்றிக் கொண்ட திருப்பம் நடந்தது.

தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசினர் கல்லூரியில் பி.எஸ்.சி. மேத்ஸ் சேர்ந்துவிட்டேன். கவிஞர்களுக்கு மட்டுமல்ல பாடகர்களுக்கும் கணக்கு என்றால் பிணக்குத்தான் என்று காலம் எனக்கு உணர்த்தியது.

கல்லூரி முத்தமிழ் விழா மேடையில் நண்பர்கள் என்னை ஏற்றி விட்டார்கள். நான் பாடப் பாட எல்லோரும் கைதட்டினார்கள். எனக்கோ, கேலி செய்கிறார்களா... பாராட்டுகிறார்களா என்று குழப்பம். அல்ஜிப்ரா கணக்கெல்லாம் சங்கீதக் கணக்காகி விட்டது.

சீதாராமன்னு தஞ்சாவூர்ல என்னோட நண்பர் ஒருத்தர் சங்கீதவித்வானிடம் அழைச்சுட்டுப் போனார். வித்வான் 'என்ன படிக்கிறே?'ன்னு கேட்டதும் ''பி.எஸ்ஸி. மேத்தமடிக்ஸ்'' என்றேன். ''மேற்கொண்டு படிச்சுச் சம்பாதிக்கிற வழியப்பாரு'' - அனுப்பிட்டார்!

'சரி, சினிமாப் பாட்டாவது பாடுவோம்' என்று

கீதா சாமி என்பவரின் இசைக் குழுவுக்குப் போய் நான் பாடும்போதே, ஆர்மோனியம், தபலாவை மூடி விட்டு ஓடிவிட்டார்கள்!

மிருதங்க வித்வான் வீரசாமிப் பிள்ளை முயற்சியால் அண்ணாமலை பல்கலைக் கழக இசைக் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கே நடந்த நகைச்சுவையை இப்ப நினைத்தாலும் சிரிப்பு வரும். என்னை தம்பூராவில் ஸபஸ பிடிக்கச் சொன்னாங்க. அன்னைக்கு வரை தம்பூரான்னா என்னன்னே தெரியாத நான், ஓடிப்போய் தம்பூராவைப் பிடிக்க, ஒரே வேடிக்கையாகிவிட்டது. ஆனாலும் முதல்வர் மதுரை சோமசுந்தரம் அவர்களும், இசை ஆசிரியர் சியாமளா கோபாலன் அவர்களும் எனக்கு இசையைப் பொறுமையாகப் புரிய வைத்தார்கள்.

சென்னை பல்கலைக் கழக இசைத் துறையில் சேர்ந்து இளங்கலை முடித்தாயிற்று. முதுகலை பட்டத்துக்காக கீழ்த் தஞ்சை மக்களிசைப் பாடல்களை, குறுகிய கால ஆராய்ச்சிக்காகச் சேகரிக்க ஆரம்பித்தபோதுதான் எனக்கு மக்கள் இசையின் மகத்துவம் புரிந்தது.

உண்ண உணவில்லாமல், உறங்க நல்ல இடமில்லாமல் எளிய மக்களின் இருப்பிடங்கள்தோறும் அலைந்து திரிந்து பாடல்கள் சேகரித்தேன். வயல்வேலை செய்பவர்கள் முன்னால், மைக்கை நீட்டி விட்டால் உடனே பாடிவிடமாட்டார்கள். மக்களோடு மக்களாக, சாதாரண உடையில் இயல்பாக அணுகிதான் பாட வைக்க முடிந்தது.

இப்படித்தான் சொம்போடைங்கிற கிராமத்தில் ஒரு பெண்ணிடம் ஒப்பாரிப் பாட்டொன்றைப் பதிவுசெய்து கொண்டிருந்தேன். அப்பெண்ணோ, சோகந் தாளாமல் அழ ஆரம்பித்துவிட்டார். அவர் கணவனை இழந்தவர். குடித்திருந்த அவரின் மகன் என்னைத் தாக்க வந்துவிட்டான். அங்க பிடித்த ஓட்டம்தான், பஸ் ஸ்டாண்டு வந்துதான் நின்னேன்.



திருச்சி வானொலியில் முதன் முதலாகப் பாடும் வாய்ப்புக் கிடைத்தபோது ஓர் உண்மையைத் தெரிந்துகொண்டேன். வாய்மொழிப் பாடல்கள், ஏழை எளியோரால் பாடப்படுவதால் அதற்கொரு சமூக மரியாதை கிடைக்கவில்லை. தொலைக்காட்சி வானொலியில் அதே பாடல்கள் பாடப்பட்டபோது சின்ன அங்கீகாரம் கிடைத்தது.

வயலும் வாழ்வும் நிகழ்ச்சி என் திறமையை மேலும் வெளிக்கொண்டு வந்தது. அப்போதைய நிகழ்ச்சிப் பொறுப்பாளர் தஞ்சைவாணன் புதிய சோதனைகள் செய்து பார்ப்பார். திடீரென, வேளாண்துறையில் அறிமுகமாகியுள்ள ஒரு கடலையைப் பற்றி பாடு என்பார்; நானும் பாடுவேன்.

தென்னிந்திய பல்கலைக்கழக மாண வர்கள் கலந்து கொள்ளும் 'யுனிபர்ஸிட்' என்னும் நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. சென்னை பல்கலைக் கழக இசைத் துறை சார்பாக, எதிர்பாராமல் கிடைத்த ஐந்து நிமிட இடைவெளியில் மேடை ஏறி னேன்.

வீணை வித்வான் சாம்பசிவ அய்யரின் பேரன், காரைக்குடி சுப்பிரமணியம் மேற் பார்வையில் அந்நிகழ்ச்சி நடந்தது. நான் மேடையேறிய நேரத்தில் தபேலா கலை ஞர் ஜெயராமன் மட்டும் மேடையில் இருந்தார். அதுவும் அடுத்து நடக்க விருக்கும் நிகழ்ச்சிக்காகத் தயாராகிக் கொண்டிருந்தவர் எனக்கும் வாசித்தார்.

தஞ்சாவூரு மண்ணெடுத்துத்
தாலிஒன்னு செய்யச் சொன்னேன்
தாலியிருக்கும் மட்டத்தில் - நான்
தங்கியிருப்பேன் ஒட்டம்போல
வாடாதே! - நீ
வாடாதே! வசந்த மல்லிக ரோசாவே!

- அந்த கருதியில் இந்தப் பாட்டை பாடி முடித்ததும் மொழி தெரிந்த, தெரியாத மாணவர்களின் கைதட்டலில் அரங்கம் அதிர்ந்தது. அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் கையால், பல்கலைக் கழக மாணவர்களின் கதாநாயகன் விருது கிடைத்தது. விருது வாங்கி வெளியே வந்தால் ஆனந்தவிகடன் பேட்டி எடுத்துப் போட்டார்கள். அதன் பின்புதான் யார் இந்த குப்புசாமி என்று அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

பல்கலைக் கழக இசைத் துறையில் டேப்ரிக்கார்டர் வாங்கித் தந்தார்கள். பாட மும் எடுக்கச் சொன்னார்கள். ஒரு பக்கம் வறுமை, இன்னொரு பக்கம் பாடிச் சாதிக்க வேண்டுமென்கிற வெறியோடு போராடிக் கொண்டிருந்தேன். இந்தச் சூழ்நிலையில் தான், என் வாழ்க்கையில் இனிய பிரளயத்தை ஏற்படுத்திய காதல் மனைவி அனிதா என்னும் அனிச்ச மலரைச் சந்தித்தேன்.

(அடுத்தவாரம் அனிதா குப்புசாமி)

அட்டை, படங்கள் : ஸ்ரீஹரி



நெஞ்சுக்கு

கல்கி வாசகர்களுக்கொரு மகிழ்ச்சியான செய்தி! உங்கள் அபிமான மங்கையர் மலர், கல்கி இதழ்கள் விருது பெற்றுள்ளன - UNFPA - LAADLI AWARD விருது 2007!

லாட்லி (Laadli) என்பது ஹிந்தியில் பெண் குழந்தையைக் குறிப்பிடும் ப்ரியமான சொல் - தமிழில் 'செல்லமே!' 'கண்ணம்மா!' போல! 'பாபுலேஷன் ஃபர்ஸ்ட்' என்கிற தன்னார்வத் தொண்டு நிறுவனமும் ஐ.நா.சபையின் அங்கமான யுனைடட் நேஷன்ஸ் பாபுலேஷன் ஃபண்ட் (UNFPA) பிரிவும் இணைந்து இவ்விருதை வழங்கி வருகின்றன. பொறுப்புடனும், நுண்ணுணர்வுடனும் பெண்களைச் சித்திரிக்கும் மீடியா நிறுவனங்களும் தனியார் படைப்புகளும் இவ்விருதுக்குப் பரிசீலிக்கப்படுகின்றன. தென்னிந்தியப் பிரிவில் (கல்கி-மங்கையர் மலர் பெற்றவை உள்பட) 18 விருதுகள் அறிவிக்கப்பட்டன. தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், மக்கள் டீ.வி.யும் இந்தப் பதினெட்டில் அடக்கம். விருதுபெற்ற சகாக்களை வாழ்த்துகிறோம். ஆதரித்த வாசகர்களுக்கு நன்றி சொல்கிறோம்.

கல்கி-மங்கையர் மலர் பெற்ற விருதுகளை, இனி இந்த உலகில் பூத்து மணம் பரப்பப்போகும் பெண் குழந்தைகளுக்குக் காணிக்கையாக்கு கிறோம்.

- ஆசிரியர்



* விருதுபெற்ற கவர்ஸ்டோரி



* நிர்மலா ராணி

கல்கி இதழ் பெண்கள் சித்திரிப்பைத் தொடர்ந்து பொறுப்புடன் செய்து வரு வதைச் சுட்டிக் காட்டியதுடன், குறிப்பாக ஆகஸ்ட் 19, 2007 இதழில் வெளியான கவர் ஸ்டோரியைப் பாராட்டியிருக்கிறது லாட்லி விருதுப் பத்திரம். 'எதிர்காலத்தின் அபூர்வ காட்சி' என்ற தலைப்புடன், பெண் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து வரு வதையும் பெண் சிசுக் கொலை பெருகி வருவதையும் சுட்டிக்காட்டித் தீர்வு தேட முயன்றது அக்கட்டுரை. அதனை எழுதிய எஸ்.சந்திரமௌலி மகிழ்ச்சியில் திளைக்



✱ விருது பெறும் அனுராதா சேகர்


நிருபர் ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு. ''நிர்மலா ராணி கூறிய புள்ளி விவரங்கள், எதிர்கால சமூகத்தை எண்ணிப் பெரிதும் கலங்க வைத்தன. பெண் சிசுக் கொலைகள் இச் சமூகத்தைப் பிடித்துள்ள மன நோய் என்பதை வெகு ஆழமாகப் பதிவு செய்தார்'' என்கிறார் திருநாவுக்கரசு.

உரமளித்த லாட்லி!

கிறார். ''25 ஆண்டு பத்திரிகை அனுபவத்தில் விருது பெற்றவர்களைப் பற்றி எழுதியதுண்டு; விருதுக்குரியவனாக இருப்பது சந்தோஷமாக இருக்கிறது'' என்கிறார்.

''இக்கட்டுரைக்காக நான் பேட்டி கண்ட வசந்தி தேவி (அன்னை தெரசா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்) இவ்விஷயம் குறித்து ஆழ்ந்த அறிவும் உரத்த சிந்தனையும் கொண்டவர். தர்மபுரி, சேலம் பகுதிகளில் களப் பணியாற்றி வந்த ஷ்யாமாவையும் இக்கட்டுரைக்காகப் பார்த்துப் பேசினேன். ஷ்யாமாவின் வீட்டில் யதேச்சையாக சந்தித்த கௌதமன், ஹோசூரில் சேவாபாரதி என்கிற அமைப்பு நடத்தி வருகிறார். இவர் ஆண்களின் பொறுப்பின்மை பற்றி பேசிய சொற்களின் அனல், நீண்ட நாட்களுக்குப் பிறகு நினைவுகூர்ந்தாலும் சுடுகிறது!'' என்கிறார் எஸ்.சந்திரமௌலி. தமது எழுத்துக்குத் தூண்டுகோல் மனைவி பாரதி என்று மகிழ்கிறார் இவர்.

திருச்சியில், ஜனநாயக மாதர் சங்க மாநில நிர்வாகி நிர்மலா ராணியை இதே கவர் ஸ்டோரிக்காகப் பேட்டி கண்டவர்



✱ சந்திரமௌலி குடும்பத்தினர்

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்கள் பாப்பா - உமாநாத் தம்பதியின் மகள் நிர்மலா ராணி. இவர் தினமணியில் எழுதிய புள்ளிவிவரக் கட்டுரையே கல்கியின் அட்டைப்படக் கட்டுரைக்கு ஆரம்ப வித்தாக அமைந்தது என்பதையும் இங்கே மகிழ்ச்சியுடன் பதிவு செய்கிறோம்.

அட்டைப் படத்தை எடுத்த ஸ்ரீஹரிக்கும் மிகுந்த மகிழ்ச்சி. ''கட்டுரையைக் காட்டிலும் படம் அதிகமாகப் பேச வேண்டும் என்று நான் எப்போதும்



* குடும்பத்துடன் ஸ்ரீஹரி

ஆசைப்படுவேன். குழந்தை மாடல் ஸ்ருதியும், அம்மா காயத்ரி சந்திரசேகரும் ஓர் இயல்பான கணத்தில் இணைந்து சிரிக்கக் காத்திருந்தேன்'' என்கிறார் ஸ்ரீஹரி.

மங்கையர் மலர் சர்வஜித் பெண் போட்டிக்காக வாசகர் ஜெ.ஸ்டெல்லாவால் அடையாளம் காட்டப்பட்டவர் சி.மகாலக்ஷ்மி. தனிப்பட்ட வாழ்க்கையின் துயரங்களையும் சவால்களையும் வென்று, மல்டி பர்பஸ் ஹெல்த் வொர்க்கராக அரசு மருத்துவமனையில் பணி ஏற்று, பெண் சிசுக்களைக் காத்தும் பெண்களுக்கு விழிப்புணர்வு ஊட்டியும் வருகிறார் மகாலக்ஷ்மி. இவருடைய நேர்காணலுக்கு வடிவம் தந்த மங்கையர் மலர் எக்ஸிகியூடிவ் எடிட்டர் அனுராதா சேகர், ''சர்வஜித் வருடம் முழுவதுமாக எட்டு வெற்றிப் பெண்களைப் பற்றி எழுதினேன். அந்த அனுபவங்களும்,

* ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



நான் பேட்டி கண்டவர்களின் வைராக்கியமும் நெஞ்சுக்கு உரம். என் சொந்த ஊரான சேலத்தில், சிறு வயதில், எத்தனையோ பெண் சிசுக் கொலைகளைப் பார்த்திருக்கிறேன். அந்தக் கசப்பான நினைவுகளுக்கு இந்த விருது ஓர் ஆறுதல்!'' என்கிறார் அனுராதா சேகர்.

- கமலி



* 'விளையாட்டு' படத்தில்...

வெளிநாடு வாழ் தமிழர்கள் இப்போதெல்லாம் தமிழ் சினிமாவில் முதலீடு செய்வது அதிகமாகி இருக்கிறது. லேட்டஸ்ட் வரவு ஆஸ்திரேலியா கண்ணன். இவரின் முதல் தயாரிப்பு 'விளையாட்டு'.

''விதியின் விளையாட்டைத்தான் கருவாகக் கொண்டிருக்கிறது படம். மூன்று கதாபாத்திரங்களின் முடிச்சும் அவிழும் போது, திரைக்கதை மிரட்டும் வேகத்தை எட்டும். மிக அழகாக, ரசனையாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். இனி எல்லாம் ரசிகர்கள் கையில்'' என்று சொன்ன கண்ணன், டைரக்டர் - கதாநாயகனான எழில் வேந்தன் குறித்தும் பேசினார்.

''டைரக்டர்களே ஹீரோவாவது இன்றைக்கு ஒன்றும் புதிதல்ல. அதே நேரத்தில் புதிதில்லையே என்று அலட்சியமாகவும் செயல்படவில்லை. எழிலாக உழைத்திருக்கிறார் வேந்தன், வேறென்ன சொல்ல!''

- சுஜாதா

சுற்றிவரும் சோனியா; சூடாகும் விவசாயிகள்!

விவசாயிகளின் கடன் தள்ளுபடியைத் தொடர்ந்து, காரைக்குடி உட்பட நாடு முழுவதும் சென்று விவசாயிகள் பேரணியை நடத்தி வருகிறார் சோனியா காந்தி. கடன் தள்ளுபடி மட்டுமா தீர்வு? முக்கிய இரண்டு விவசாய சங்க பிரமுகர்களிடம் பேசினோம்.

ஆறு பாதி கல்யாணம் (பொதுச் செயலாளர், காவிரி பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு) : மத்திய நிதி அமைச்சர், விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகை 60,000 கோடி என்றும், அதைத் தள்ளுபடி செய்துவிட்டதாகவும் கூறுகிறார். ரிசர்வ் வங்கியின் அதிகாரபூர்வமான புள்ளி விவரப்படி, விவசாயிகளிடமிருந்து வராக் கடன் 28,000 கோடிதான். மேலும் பெரும்பாலான விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் தான் கடன் வாங்கியிருக்கிறார்கள். அவற்றைத் தமிழக அரசே தள்ளுபடி செய்துவிட்டது. மற்றபடி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில், கடன் வாங்கியவர்களின் நிலுவைத் தொகையைப் புதுக்கடன் போல வருடா வருடம் புதுப்பித்துவிடுகிறார்கள்.

எம்.எஸ். சுவாமிநாதன் விவசாய உயர் மட்டக் குழு, 4 சதவிகிதம் வட்டியில் கடன் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் 7 மற்றும் 12 சதவிகித வட்டியில் கடன் வாங்கிக்கொண்டிருக்கிறோம். ஒரு ஏக்கருக்கு நெல் போட்டால், வருமானம் 3,000 ரூபாய்கூட இல்லாத நிலையில் இது எப்படி கட்டுப்படியாகும்?



* ஆறு பாதி கல்யாணம்

ரங்கநாதன் (தலைவர், தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் சங்கம்) : நமது நாட்டு வளர்ச்சி விகிதமே விவசாயத்தை ஒதுக்கி வைத்துவிட்டுத்தான் கணக்கெடுக்கப்படுகிறது! அடுத்து, உணவுப் பாதுகாப்பு என்ற கருத்தாக்கத்தைப் பற்றிய சிந்தனை கொஞ்சம்கூட இல்லை. நமது மக்கள் தொகை, தேவையான உணவு, அதைப் பயிரிட உள்ள வாய்ப்பு என்று இந்த வகையில் அரசு சிந்திக்கிறதா என்று தெரியவில்லை. விவசாயிகளுக்குத் தேவை நல்ல வழி காட்டுதல்கள்.

ஏற்றுமதி தொழில், தகவல் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் செய்வதுபோல, பல சலுகைகளும் தேவை.

1936ல் அப்போதைய சென்னை ராஜதானியின் பிரதமராக இருந்த ராஜாஜி, விவசாயிகளின் கடன் சுமையை ஒழித்துக்கட்ட கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்தார். இதன் மூலம் தனியாரிடம், அநியாய வட்டிக்கு வாங்கிய கடன் தள்ளுபடியானது. இது போன்ற சட்டம் போட இப்போதைய ஆட்சியாளர்களுக்குத் தைரியம் உண்டா?

– ஸ்ரீநி





அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2008

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு - ரூ.10,000/-
இரண்டாம் பரிசு - ரூ.7,500/-
மூன்றாம் பரிசு - ரூ.5000/-

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும்.

யார் வேண்டுமானாலும் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம். என்றாலும் எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு.

விதிமுறைகள் :

★ கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது. சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.

★ அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.

★ படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டரவாக இருந்தால், அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி. - ஜெராக்ஸ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

★ முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

★ தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

★ போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.

★ பரிசுக்குரிய கதைகளை, நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

★ முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.

★ 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2008' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி,
கல்கி பில்டிங்ஸ்,
47-NP ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

✸ கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 16.

✸ போட்டி முடிவும், முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 3 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

\- ஆசிரியர்

உயிர் காக்க உதவுங்கள்!



* ராகுல்

எனது எட்டு வயது மகன் **S.E.ராகுல்** பிறந்ததிலிருந்தே **தாளசேமியா மேஜர்** (Thalasaemia major) என்கிற உபாதை யினால் அவதிப்படுகிறான். அதற்காக குழந்தைப் பருவத் திலிருந்தே அவனுக்கு தொடர்ச்சியாக ரத்தம் செலுத்தப்பட்டு வருகிறது.

அவனுக்கு சிகிச்சை செய்து வரும், அப்போலோ ஸ்பெஷாலிடி ஹாஸ்பிட்டலில் உள்ள பிரபல மருத்துவர் டாக்டர் ரேவதி ராஜ் DCH (Pediatrics) MRC Path (Haematology) அவர்கள் Bone Marrow Stem Cell Transplantation மூலம் வியாதியை குணப்படுத்த முடியுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு சுமார் ரூ.**8,00,000/-** ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏழை குடும்பத்தைச் சேர்ந்த என்னால் அவ்வளவு பெரிய தொகையை செலவு செய்து சிகிச்சை செய்ய இயலாது. எனவே உதவும் உள்ளங்கள், தங்களால் இயன்ற நிதி உதவியை, **"Apollo Speciality Hospital - A/c Ragul - 65557"** என்ற பெயரில் டிடி எடுத்து அனுப்பி, சிகிச்சைக்கு உதவும்படி, வணங்கி கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்: **S.R. ஈஸ்வரன்,** AP 1145, 19வது மத்திய குறுக்கு தெரு,
M.K.B.நகர், வியாசர்பாடி, சென்னை - 600 039

லிப்கோ ஸ்தாபகர் சர்மாஜி நூற்றாண்டு நினைவுப் பதிப்பு!

பலரின் வேண்டுகோளுக்கிணங்க மஹாகவி காளிதாஸரின் மகத்தான இதிகாசம்
இப்போது மீண்டும் புதுப் பொலிவுடன் வெளிவந்துள்ளது!

ரகுவம்ச மஹா காவ்யம்



ஸ்ரீ வே.ஸ்ரீ. வேங்கடராகவாச்சார்யர்

எழுதிய ஒப்பற்ற நூல்!
ஸம்ஸ்க்ருத மூலம், பதவுரை, கருத்துரை, விளக்கவுரை
1216 பக்கங்கள்: விலை **ரூ.** 160
தபாலில் பெற **ரூ.** 190 M.O. / D.D. அனுப்புக.
சொற்ப பிரதிகளே தயாரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவைஷ்ணவ ஸந்த்யாவந்தனம்
ருக்-யஜுஸ்-ஸாமவேதிகள் மூவருக்கும் * வழிமுறைப் படங்களுடன்
புதிய 5-ஆம் பதிப்பு : விலை ரூ. 12; தபாலில் ரூ. 32

தொகை அனுப்ப வேண்டிய முகவரி: **தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி**
36, வடக்கு ரோடு, மேற்கு C.I.T நகர், சென்னை - 600 035. போன்: 2434 1538, 2433 6467
ஷோ ரூம்: லிப்கோ அஸோஷியேட்ஸ், 'நாராயணா அபார்ட்மெண்ட்ஸ்', 23/G-5, ராமேஸ்வரம் ரோடு, (மாம்பலம் ரெயில் நிலையம் அருகில்), தி.நகர், சென்னை - 600 017. போன்: 2432 3298
E-mail: info@lifcobooks.com | www.lifcobooks.com



கல்கி



2008 ஏப்ரல் 13
ஸர்வதாரி சித்திரை 1
மலர் : 66
இதழ் : 37

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*

ஒகேனக்கல் : பெருகும் சீற்றக் காவேரி!


“பஸ்கள் என்ன, (கன்னடப் போராளிகள்) எங்களது எலும்புகளை உடைத்தாலும் சரி, நாங்கள் கவலைப்படப் போவதில்லை. நிச்சயமாக ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம்” என்று தமிழக முதல்வர் சூளுரைத்திருக்கிறார்!

கர்நாடகாவில் தமிழ் எதிர்ப்பாளர்கள் போடும் ஆட்டத்தைப் பார்க்கையில், நமது உணர்ச்சி காவேரியைக் காட்டிலும் அதிகமாகப் பெருக்கெடுப்பது இயற்கைதான். ஆனால், தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் உணர்ச்சிப் பெருக்கில் வார்த்தைகளைக் கொட்டினால் விபரீதங்கள்தான் விளையும். சான்று: தமிழக முதல்வருடைய பேச்சின் தொடர்ச்சியாக கர்நாடகாவில் மீண்டும் எழுந்துள்ள விரும்பத்தகாத வன்முறை போராட்டங்கள்!

ஒகேனக்கல் திட்டம் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்து வருவது; இரு மாநில அரசுகளும் ஏற்கெனவே கையொப்பமிட்டு, பரஸ்பரம் ஏற்றுக்கொண்டது. அவ்வாறிருக்க, இன்று அது ஏன் பிரச்னையாக்கப்பட வேண்டும்?

‘இன்று நிலைமை மாறிவிட்டது; கர்நாடகத்துக்கே காவிரி தண்ணீர் போதவில்லை’ என்று வாதிடலாம். ஆனால், எப்படியிருந்தாலும் கர்நாடகம் திறந்துவிடும் காவிரி நீரைப் பொறுத்துத்தான் தமிழகத்துக்கு நீர்வரத்து என்கிறபோது, அம்மாநில அரசு நடுவர் மன்ற தீர்ப்புகளையும் மதிக்காதபோது,





கர்நாடகாவின் கட்டுப்பாடை மீறி ஒகேனக்கல்லுக்கு நீர் வந்துவிடப் போவதில்லை! அவ்வாறிருக்க, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எதிர்ப்பதும், அந்தப் பகுதியையே கர்நாடகத்தினுடையது என உரிமை கொண்டாடுவதும் எந்த அடிப்படையில் சரியாக இருக்க முடியும்?!

மேலும், ஒகேனக்கல் திட்டத்தினால் பயனடையப் போவது கர்நாடக - தமிழக எல்லைப் பகுதியில் பெருமளவு வசித்துவரும் கன்னட மக்களும்தான்.

இந்நிலையில், எடியூரப்பா இந்த விவகாரத்தைத் தீப்பிழம்பாக்கி விசிறியும் விட்டிருப்பது முழுக்க முழுக்க அரசியல் காரணங்களுக்காகத்தான்; வரவிருக்கும் தேர்தலில் இதை விவகாரமாக்கி வோட்டுப் பெறத்தான்! இத்தனைக்கும் கர்நாடகத்தில் நடைபெறுவது பா.ஜ.க. ஆட்சி அல்ல; குடியரசுத் தலைவர் ஆட்சி! இவ்விஷயத்தில் ஆளுநரும் அவரது ஆலோசகர்களும் மௌனம் காப்பதும் மத்திய அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதும்கூட தேர்தலுக்குப் பயந்துதான்! எடியூரப்பாவைக் கண்டித்தால், அதுவே கன்னட எதிர்ப்பாகத் திரித்துப் பிரசாரம் செய்யப்பட்டுவிடும்; காங்கிரஸுக்குப் பின்னடைவு ஏற்பட்டுவிடும் என்கிற எண்ணத்தில்தான்!

கர்நாடகாவில் யாரும் நியாயத்தைச் சிந்திக்க மாட்டார்கள் என்ற நிலையில்தான் தமிழக முதல்வரின் பொறுப்பும் பணியும் அதிகமாகின்றன. அவராவது நிதானம் காக்க வேண்டும். பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர் ஆகியோருடன் பேசி, கர்நாடகத்தில் நிலவும் தமிழக விரோதப் போக்குக்கும் வன்முறை தூண்டுதலுக்கும் முற்றுப் புள்ளி வைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட, மத்திய அரசின் ஆணையையும் ஆதரவையும் பெற்று திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இதற்குச் சாதுர்யமும் சாணக்கியமும் பொறுமையும்தான் தேவையேயொழிய தீப்பொறி வார்த்தைகள் அல்ல!

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் தேர்தலை முன்னிட்டு, இன்று மௌனம் சாதிப்பதும் அநீதிக்குத் துணைபோவதும், நாளை தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கே பெரும் தீமையாக முடியும். ●

உதயமாகும் புதிய வில்லன்!



வெறும் எட்டே எட்டு தினங்கள் மட்டுமே முதல்வராக இருந்துவிட்டு, முன்னாள் முதல்வர் என்ற அடையாளத்துடன் கர்நாடக அரசியலில் புதிய சுனாமியாக உருமாறியிருக்கிறார் எடியூரப்பா. மாண்டியா மாவட்டத்து விவசாய குடும்பத்தைச் சேர்ந்த இவர்தான் பாரதிய ஜனதா கட்சியின் முதல் தென் மாநில முதல்வர்.

ஷிகாரிபூர் தொகுதியில் கடுமையாக வறட்சி நிலவியபோது, சைக்கிளில் சென்றபடியே தொகுதி முழுக்கச் சுற்றிப் பார்த்து, சேத விவரத்தை அரசின் கவனத்துக்கு எடுத்துச் சென்றார் எம்.எல்.ஏ. எடியூரப்பா! இதுதான் அவருடைய செல்வாக்கைக் கணிசமாக உயர்த் தியது. அடுத்தடுத்து ஐந்து முறை இத்தொகுதியிலிருந்து சட்டசபைக்குத் தேர்வு செய்யப்பட்டவர். 2006ல் தேவே கௌடாவின் மகன் குமாரசாமி மூலம் துணை முதல்வராகும் வாய்ப்பும் பெற்றார்.

பாரதிய ஜனதா கட்சிக்கும், மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கும் இடையே ஒப்பந்தம் உருவானது. ஆளுக்கு இருபது மாதங்கள் கர்நாடகாவை ஆளலாம். இதுதான் ஒப்பந்தம். குமாரசாமி முதல்வர். எடியூரப்பா துணை முதல்வர். பிரச்னையில்லாமல் இருபது மாதங்கள் கடந்தன.

ஆனால், எடியூரப்பா முறை வந்தபோது, தேவே கௌடாவும் குமாரசாமியும் மர்மப் புன்னகை பூத்தனர். 'அட நல்ல கதையா இருக்கே, அதெல்லாம் ஒத்துக்க முடியாது' என்றனர். வேறு வழியில்லாமல், அளித்துவந்த ஆதரவை விலக்கிக்கொண்டார்.

கர்நாடகத்தில் கவர்னர் ஆட்சி அமலுக்கு வந்தது. அதன்பிறகு எடியூரப்பா முதல்வரானார்! ஆனால், ஒரு வாரத்துக்கு மேல் அவரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. மீண்டும் தேவே கௌடா முரண்டு பிடிக்க, பரிதாபகரமாகக் கவிழ்ந்தது பா.ஜ.க. அரசு. நிற்க.

தற்போது விரைவில் கர்நாடக சட்ட மன்றத்துக்குத் தேர்தல் வர இருப்பதால், பா.ஜ.க.வின் மீது மக்களின் கவனத்தைக் குவிக்க எடியூரப்பா எடுத்த ஆயுதம் ஒகேனக்கல்!

திடுதிடுப்பென ஒகேனக்கலை கர்நாடகம் சொந்தம் கொண்டாடுகிறது. சுறுசுறுப்புத் திலகமான எடியூரப்பா, 1972ல் ஷிகாரிபுரா பகுதி ஜனசங்க் தலைவராக இருந்து கட்சியை நிறையவே முன்னேற்றினார். அவருடைய அரசியல் வாழ்க்கைக்குப் பிள்ளையார் சுழி போட்டது ஆர்.எஸ்.எஸ்.... அது சரி, ஆர்.எஸ்.எஸ்.ஸின் தேசிய நோக்கை எங்கே தொலைத்தார் எடியூரப்பா..?

– கலை

SRI

S.S.M. RESIDENCY

A Township with calm and serene Atmosphere

For Senior Citizens and Sickly Disabled



- For the Elite with clean habits
- To enjoy Twilight of life with peace, honour, dignity and security
- Luxurious living with pure vegetarian balanced diet
- Medical block exclusively for sickly / disabled - all age Groups
- Round the clock Medical Care and Nursing
- Care unto the last with love and affection

SRIMATHI SUNDARAVALLI MEMORIAL RESIDENCY

(Managed by SSME Trust, Chennai - 600 044)

Moppedu Road, Alapakkam, New Perungalathur, Chennai - 600 063.

Phone : 044 - 22792003, 22792141

E-mail : ssmeto@dataone.in   Website : www.ssmhome.org

சிவராம அறக்கட்டளை

வேதங்கள் பயில - மாணவர்கள் சேர்க்கை

மேற்கண்ட அறக்கட்டளை 1998 முதல் சிவபீட சிவராம வேதபாடசாலை என்ற பெயரில் திரிபுரசுந்தரிநகர், பிள்ளைப்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர் - 602 105, நகரில் பாடசாலை நடத்தி வருகிறது. 1998 முதல் கிருஷ்ண யஜுர் வேதமும் 2001 முதல் ரிக் வேதமும் 2004 முதல் ஸாம வேதமும் (கௌதம சாகை) கற்பிக்கப்படுகின்றன. முற்றிலும் இலவசமாக தங்கும் வசதி, உண்ண உணவு, உடுக்க உடை யாவும் வழங்கப்பட்டு மூன்று வேதங்களும் கற்பிக்கப்படுகின்றன. வருடம் ஒரு முறை கோடை விடுமுறையின்போது சொந்த ஊருக்குச் சென்று வர மாணவனுக்கு பஸ் மூலம் போக்குவரத்து செலவையும் நாங்கள் வழங்குகிறோம். கிரமம் கனம் வரை படித்து பூர்த்தி செய்து செல்லும் மாணவர்களுக்கு தகுந்த சன்மானமும் வழங்கப்படும்.

வருகிற ஜூன் மாதம் முதல் சுக்ல யஜுர் வேதமும் ஆரம்பிக்க இருக்கிறது. வேதம் கற்கும் குழந்தைகளுக்கு ஆங்கிலம், ஸமஸ்க்ருதம், கணிதம் முதலிய பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இதுவரை கிருஷ்ண யஜுர் வேதத்தில் 10 வித்தியார்த்திகளும் ரிக் வேதத்தில் 2 வித்தியார்த்திகளும் பூர்த்தி செய்து முடித்திருக்கிறார்கள்.

7 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ரிக், கிருஷ்ண யஜுர், ஸாம, சுக்ல யஜுர் வேத அத்யயனம் செய்விக்க விரும்பும் பெற்றோர்கள், உடன் கீழ் கண்ட நிர்வாக அலுவலகத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

நேரில் வந்து சந்திக்க விரும்பும் பெற்றோர்கள் கீழ்கண்ட விலாசத்தில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை வந்து மேல் விபரங்கள் பெறலாம்.

நிர்வாக அலுவலகம்: 5 லின்வுட் அவின்யூ, மகாலிங்கபுரம், சென்னை - 34, தொலைபேசி: 28173810/28173811

ஜிலு ஜிலு தொடர்கதை -1

வீதியை அடைத்துக்கொண்டு மயில் நின்று கொண்டிருந்தது. மேலுக்கு ஜிகினா ஒட்டி, சுற்றிலும் மலர் அலங்காரங்கள் செய்யப்பட்ட அட்டை மயில். அதன் முதுகில் அம்பாரி மாதிரி பீடம் கட்டி, ஒரு சிம்மாசனத்தை ஏற்றியிருந்தார்கள்.

முதலியார் வீட்டு வாசலில்தான் மயில் நின்று கொண்டிருந்தது. ஆனால் வீதி முழுவதும் பந்தல் போட்டிருந்தார்கள். வாடகைக்குக் கொண்டு இறக்கிய பிளாஸ்டிக் நாற்காலிகளில் பெரியவர்கள் அரசியல் பேசிக்கொண்டிருந்தார்கள்.

''தம்பி, சோடா குடிக்கிறியா? கலரு சோடா.''

எழுதிக்கொண்டிருந்த காதல் கடிதத்தை, சரேலென்று பாக்கெட்டில் திணித்து மறைத்தபடி பத்மநாபன் தலை நிமிர்ந்த போது, வீரபத்திரன் கையில் நாலு சோடா பாட்டில்களுடன் எதிரே இந்திரஜித் போல நின்று கொண்டிருந்தான்.

''வேணாம்.'' அவன் உடனே நகர்ந்துவிட்டால் நல்லது என்று தோன்றியது. ஆனால் முறைத்தான்.

''என்னாத்த மறைச்சே? என்ன எழுதுற? நாம் பாக்கலேன்னு நெனச்சியா? அதெல்லாம் கரீட்டா நோட் பண்ணிருவேன்.''





பா.ராகவன்

இது புதுசு

"அ... ஆமா. இல்லியே?" சே. சொதப்பிவிட்டேன். இவனுக்கு எதற்கு நான் பயப்படுகிறேன்? பத்துப் பைசா பிரயோஜனமில்லாத வெறும்பயல். எழுதிய தாளைப் பிடுங்கிக்கொண்டால் கூட எழுத்துக்கூட்டிப் படிக்கத் துப்பில்லாதவன். வளர்மதி வீட்டில் எடுபிடி வேலை செய்துகொண்டிருக்கிறவன்.

வீரபத்திரன் பற்றி, "பாவம்டா. அவன் ஒரு ஸ்லேவ். ஆனா... அந்த வாழ்க்கையை ரொம்ப விரும்ப ஆரம்பிச்சிட்டான்," என்று ஒரு சமயம், கேளம்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளியிலேயே மிகவும் புத்திசாலி என்று புகழப்படும் பன்னீர்செல்வம் சொன்னான். அவன் சொன்ன பிறகு மூன்று நாட்கள்

கால் கிலோ காதல்... அரை கிலோ கனவு..!



'ஸ்லேவ்' என்றால் என்னவென்று கண்டுபிடிக்க, பத்மநாபனும் பாபுவும் கலியமூர்த்தியும் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டார்கள். இறுதியில் எந்த முயற்சியும் பலனளிக்காமல் அவனிடமே விசாரித்தபோது, 'ரெஃபர் டு தி டிக்ஷனரி' என்று சொன்னான்.

'விடுடா. அவனுக்கு ரொம்ப ஹெட்வெயிட். தனக்குத்தான் இங்கிலீஷ் தெரியும்னு ஒரு இது. எதுக்கானா நம்மாண்ட வராமலா போயிடுவான்? அப்ப பாத்துப்போம்' என்று கலியமூர்த்தி வெஞ்சினம் கொண்டான்.

பத்மநாபன் அன்றைக்கு ஒரு முடிவுடன்தான் வந்திருந்தான். என்ன ஆனாலும் சரி. இன்றைக்கு வளர்மதியிடம் தன் உள்ளக் கிடக்கையைச் சொல்லிவிடுவது. ஆங்கில அறிவிலும் இன்னபிற வற்றிலும், தன்னிகரற்ற பன்னீரை வெற்றிகொள்ளத் தனக்கிருக்கும் ஒரே வழி அதுதான்.

ஒருவகையில் அவசரமும்கூட.

பத்மநாபன், வகுப்பில் மொத்தம் ஐந்து பேர் வளர்மதியைக் காதலித்துக்கொண்டிருந்தார்கள். சிட்டிப் பாவாடையும் ரெட்டைப் பின்னலும் முதுகில் தொங்கும் புத்தக மூட்டையுமாக, பள்ளிக்கு வருகிற வளர்மதி. அடேயப்பா. எத்தனை பெரிய கண்கள் அவளுக்கு! பாய்ஸுடன் பேசுவது கெட்ட காரியம் என்று இருந்த நூற்றாண்டு கால வழக்கத்தை, முதன் முதலில் ஒன்பதாம் வகுப்பு பி பிரிவில் மாற்றி எழுதியவள் அவள்தான்.

''பத்து, உன்னை ஏண்டா எல்லா பசங்களும் குடுமிநாதன்னு கூப்பிடறாங்க?'' திடீரென்று ஒருநாள் கேட்டாள் வளர்மதி.

அவளுடைய கேள்வியில் லேசாக அதிருப்தி கொண்டாலும் வெளியே காட்டிக்கொள்ளாமல், 'ப்ச்.. புவர் ஃபெல்லோஸ்' என்றான்.

''இல்லை. சின்ன வயசுல நீ குடுமி வெச்சிருப்பியா?''

''இல்லை வளரு. ஆறாவது படிக்க சொல்ல எங்கம்மா பழனிக்கு நேர்ந்துக்கிட்டதால முடி வளர்த்துக்க வேண்டியதாயிடுத்து. அப்ப நம்ம பாண்டுரங்கன் சார் அப்பிடிக் கூப்புடுவாரு. அதையே புடிச்சிக்கிட்டு... சே...''

''வருத்தப்படாதடா. அப்படிக் கூப்பிட்டாக்கூட நல்லாத்தான் இருக்கு. நானும் கூப்பிடவா?''

அவனுக்கு என்னசொல்வதென்று தெரியவில்லை. வேண்டாம் என்று அவசரமாக மறுக்கப் பார்த்தான். ஆனால், கோபித்துக்கொண்டு ஒருவேளை அவள் பேசாதிருந்துவிட்டால்?

அது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம். அவளாக வலிய வந்து பேசியிருக்கிறாள். இது மட்டும் பன்னீருக்குத் தெரிந்தால் பொறாமைச் சூட்டில் வெந்தே செத்துப் போய்விடுவான்.

சந்தேகமில்லாமல் நான் அதிர்ஷ்டசாலி. வேறு யாரிடமும் காணமுடியாத ஏதோ ஒரு சிறப்பம்சம் என்னிடத்தில் இருக்கிறது. வளர்மதிக்கு அது தெரிந்திருக்கிறது.

பிறிதொரு சமயம், பள்ளி மைதானத்தில் அவன் சாஃப்ட் பால் ஆடிக்கொண்டிருந்த போது அடித்த ஒரு ஷாட்டுக்குக் கைதட்டினாள். பாரதி விழா பேச்சுப்போட்டியில், பெருமாள் வாத்தியார் எழுதிக்கொடுத்த அசகாயப் பேச்சை அவன் உருப்போட்டு ஒப்பித்து, பரிசு வாங்கியபோது இன்னொருமுறை பாராட்டினாள்.

அவனது காதல் வேகம் பிடிக்கத் தொடங்கி, இரவும் பகலும் வளர்மதி, வளர்மதி என்று உள்ளுக்குள் உருகத் தொடங்கியபோதுதான், திடீரென்று ஒரு நாள் அவள் பள்ளிக்கு வரவில்லை. எதனால் என்று புரியாமலேயே அவனுக்கு அழுகை வந்தது.

மறுநாளும் அவள் வரவில்லை.



தற்கொலை பண்ணிக் கொண்டு விடலாம் என்று முதலில் தோன்ற, சில நிமிடங்கள் யோசனையை ஒத்திப்போட்டுவிட்டு அவள் வீட்டுக்கே சென்று பார்த்துவிடலாம் என்று நினைத்தான். அதிலும் பிரச்னை.

பையன்கள் யாருக்காவது தெரிந்து விட்டால் சத்துணவுக் கூடச் சுவரில் கரியால் எழுதிவிடுவார்கள். குடுமிநாதன் - வளர்மதி காதல்! வீட்டுக்குப் போய் விசாரித்துவிட்டு வந்த வீரன் கதை கேளீர்.


பயமாகத்தான் இருந்தது. என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்த போதே விஷயம் வகுப்பறைக்கு வந்துவிட்டது. வளர்மதியின் தோழி ராஜாத்திதான் தகவல் ஒலிபரப்பினாள். வளர்மதி வயசுக்கு வந்துவிட்டாள்.

எத்தனையோ தருணங்களில் தனக்கு வாழ்த்துச் சொன்ன வளர்மதிக்கு, தான் இப்போது ஏதாவது சொல்லி அல்லது செய்தாகவேண்டும். கண்டிப்பாக, பன்னீருக்கு முன்னதாக.

எனவே, முந்திக்கொண்டுவிடுவது

என்று முடிவு செய்துதான் மயில் ஜோடித் திருந்த அவள் வீட்டு வாசலுக்குச் சென்று உட்கார்ந்து, கடிதம் எழுதிக்கொண்டிருந் தான். பாக்கெட்டில் ஒரு ரோஜாப்பூ வைத்திருந்தான். யார் கண்ணிலும் படா மல் கொடுத்துவிட முடிந்தால் அதி உன் னதம்.

"அன்புமிக்க வளர்மதி, உன் பிரியத்துக் குரிய பத்மநாபன் என்கிற குடுமிநாதன் எழுதிக்கொள்வது. இப்பவும் நீ பெரிய வளாகிவிட்ட விஷயம் கேள்விப்பட்டு உளமார மகிழ்ந்தேன். நான் படித்து முடித் துப் பெரியவனாகி, ஓர் உத்தியோகத்தைத் தேடிக்கொண்டு, உன்னைத் திருமணம் செய்துகொண்டு வாழ்நாள் முழுதும் கண் கலங்காமல் காப்பாற்று வேன். என் காதலை ஏற்றுக்கொண்டு என்னை அங்கீகரிப் பாய் என்று திடமாக நம்புகின்றேன். இவண், கு.வெ. பத்ம நாபன்.'



சரத்குமாரின் 'பச்சைக்கிளி முத்துச்சரம்' படத்துக்கு முதலில் வைக் கப்பட்ட பெயர் 'சிலந்தி'. இப்போது இதே பெயரில் காதல் த்ரில்லர் ஒன்றை இயக்கி வருகிறார் பத்திரிகையாளர் ஆதி. இளவயது முதலே இயக்கம் குறித்த கனவுகளோடு வளர்ந்தவருக்கு, 'சிலந்தி' இனிய வாசல்!

"பத்திரிகை மூலம் சினிமாவுக்கு வந்த யாரும் இதுவரை சோடை போனதில்லை" என்று நம்பிக்கை கொள்ளும் ஆதி, "நிம்மதி நாடி வந்த அழகான இளம் ஜோடி ஒன்று, சிலந்தி வலைக்குள் சிக்கிய கதைதான் சுடச்சுட பரிமாறப்படவிருக்கிறது" என்கிறார்.

– பூஜா

எழுதியதைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தான். ஒரு சமயம் சரியாக இருப்பது போலவும், இன் னொரு சமயம் சுத்த அபத்தம் என்றும் மாறி மாறித் தோன்றியது. பயமும் பட படப்பும் ஆர்வமும் மேலோங்க, வியர் வையைத் துடைத்தபடி எழுந்தான்.

வளர்மதி மயிலுக்கு வந்திருந்தாள். சரிகை பார்டர் வைத்த பச்சைக் கலர் பட்டுத் தாவணியில் அம்மன் போலல்லவா இருக் கிறாள்! உறவினர்களும் மற்றவர்களும் கன்னத்தில் தடவிய சந்தனம் காய்ந்து, தனி யொரு எழிலை அவளுக்குத் தந்திருந்தது.

மாமன்கள் சீர் செய்துகொண்டிருந் தார்கள். தயங்கி நின்றது போதும் என்று முடிவு செய்து, மனத்துக்குள் முருகா, முருகா, முருகா, முருகா என்று சொல்லிய படியே மெல்ல முன்னேறி மயிலுக்கு அருகே சென்றான்.

சட்டென்று தோளில் ஒரு கை விழுந் தது. வீரபத்திரன்!

"என்ன? கிஃப்ட்டு கொண்டாந்துகிறியா? என்னாண்ட குடுத்துட்டுப் போ. நீயெல் லாம் மேல போவக்கூடாது பத்து. இது பொம்பளைங்க மேட்டரு."

"ஒரே நிமிசம் வீரபத்திரா. வாழ்த்து சொல்லிட்டுப் போயிடறேன்."

"அடச்சே சுகுமாலம். வாள்த்தறானாம் வாள்த்து. நீ இங்க வந்திருக்கறது உங்கப் பாருக்குத் தெரியுமா?"


சே... இழவெடுத்தவன். எந்த நேரத்தில் யாரை நினைவுபடுத்துகிறான்? "தெரியும் போ" என்று சொல்லிவிட்டு, விடுவிடு வென்று அருகே போனான்.

வளர்மதி சிரித்தாள். "என்னடா? இங்க எப்ப வந்த?"

"இப்பதான் வளரு... வந்து..."

பேசத் தொடங்கியவன், மெல்லத் திரும்பிப் பார்த்தான். அதிர்ச்சியாக இருந் தது. அழுகை வந்தது.

(கனவு தொடரும்)



'கிட்னி' தத்துவம்!

''அரசே! கஜானாவில் ஒரு சல்லிக் காசுகூட இல்லை!''

''ஏன் இப்படி மானத்தை வாங்குகிறீர் அமைச்சரே... கஜானாவை அடகு வெச்ச விஷயம் வெளியில் தெரியணுமா?''

- அ.சுலைஹல் ரஹ்மான்





"தலைவரோட பேச்சைக் கேட்டு ஜனங்க சிரிக்க ஆரம்பிச்சுட்டாங்க!"

"அப்படி என்ன பேசினாரு?"

"நாங்க ஆட்சிக்கு வந்தா பீடி, சிகரெட், பான்பராக்கெல்லாம் இலவசமா தருவோம்ன்னு பேசினாரு!"

- இரா.சம்பத்குமார்



"நான் உனக்கு நெக்லஸ் வாங்கிக் கொடுத்த விஷயத்தை எங்க அம்மா காதுல மட்டும் போட்டுடாதே சித்ரா."

"கவலையே படாதீங்க... காதுலேயும் போட மாட்டேன், கழுத்துலேயும் போடமாட்டேன்!"

- சீர்காழி வி.ரேவதி




"லூசாக ஆடை அணிய வேண்டாம் என்றால் கேட்கிறீர்களா தளபதி?"

"ஏன் மன்னா...?"

"எல்லோரும் தங்களை 'தொளபதி' என்று அழைக்கிறார்கள்."

- கே.ஆனந்தன்



"கோழிகள் மீது தலைவருக்கு என் இவ்வளவு கோபம்?"

"நம்மால் ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி போட முடியாத நிலையில், கோழிகள் ரூபாய்க்கு ஒரு முட்டை போடுகிறதாம்!"

- க.ரவீந்திரன்



சேனல்

கலைஞர் டீ.வியில் 'தவம்' தொடரில் கலக்கிக்கொண்டிருக்கும் கல்யாணியை, வளசரவாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் சந்தித்தோம்... அவர் நம்மிடம் பேசியதிலிருந்து...

பிறப்பு:

பிறந்தது - வளர்ந்தது - எல்லாம் பெங்களூரு. என் நடிப்பை ரசித்து, உங்கள்ல ஒருத்தியா ஏத்துக் கிட்டது சென்னை.

(கன்னட வேதிகே காரங்ககிட்டே கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்க ஸிஸ்டர்!)

கலக்கல் கல்யாணி!

படிப்பு:

பெங்களூரு செயின்ட் ஜோசப்ல தான் டிகிரி முடிச்சேன். காலேஜ்ல நான் ரொம்ப 'காம்' டைப்.

(இந்த டாட் காம் யுகத்துல இப்படி ஒரு அம்மணியா?...)

நடிப்பு:

டிகிரி முடிச்சதும் உடனே சினிமா சான்ஸ் கிடைச்சது. கன்னடத்துல 'சாரி'ங்கற படத்துல நடிச்சேன். பிறகு கன்னட சினிமாவுக்கு ஸாரி சொல்லிட்டு கோடம்பாக்கத்துக்கு நடையைக் கட்டிட்டேன்...

(எவ்ளோ கி.மீ. நடந்தீங்கக்கா...)

பாய் ஃப்ரெண்ட்:

உங்க தலைமேலே சத்தியமா சொல்றேன். நோ பாய் ஃப்ரெண்ட்ஸ். நிறைய கேர்ள் ப்ரெண்ட்ஸ் இருக்காங்க. வேணும்னா என் செல் ஃபோனைப் பாருங்க. அப்படிப் பார்த்தா நீங்ககூட என் ஃப்ரெண்ட் தான்.

(அத்தனை கேர்ள்ஸும் இதே சத்தியத்தை என் தலைமேல வைச்சதுல பயங்கர சொட்டை விழுந்துருச்சும்மா!)

சமையல்:

ஓ... நல்லா சமைப்பேன். 'சிக்கன்'ல விதவிதமா சமைப்பேன். 'சமையல்' செய்யறது எனக்குப் பொழுதுபோக்கு! அதோடு நன்றாக நானும் ஒரு கட்டுக் கட்டுவேன்.

(எல்லாரும் கிச்சன்லதானே சமைப்பாங்க...! நீங்க மட்டும் எப்படி...?)

பொழுதுபோக்கு:

புக்ஸ் படிக்கறது. நெட்ல மேய்றது. குட்டீஸ்களோட ஃபோட்டோஸ் பாக்கறது. இளையராஜா 'சாங்ஸ்' கேட்டு ஐஸ்கிரீம் மாதிரி உருகறது.

(உங்களை மாதிரி பல கேர்ள்ஸ் உருகினதுல, கூவமே ஸ்வீட்டா மாறிட்டு வருதுன்னு கேள்வி!)

ட்ரெஸ்:

எனக்குப் பிடிச்சது புடைவைதான். எப்போதாவது சுடிதார் போடுவேன். பொது இடங்கள்ல சாரில வரும்போது நல்ல பொண்ணுங்கற அடையாளத்தைக் கொடுக்குது.

(அப்படி வந்தா, அப்பால 'ஸாரி' கேட்க அவசியமும் இருக்காதில்லே!)

தமிழ்நாட்டு ஜனங்க...

ரொம்ப யதார்த்தமானவங்க. கோபமாக இருந்தாலும் உடனே கொட்டிடுவாங்க; சந்தோஷப்பட்டாலும் அநியாயத்துக்கு பாசம் காட்டி அசத்திடுவாங்க. கடைத் தெருவுல ஷாப்பிங் போறப்போ பார்த்தா, வலிய வந்து வணக்கம் சொல்றாங்க... வெரி நைஸ்...

(பொறாமைச்சுக்குவீங்க)

சமீபத்திய ஷாக்:

ஒண்ணுமே இல்லிங்க....

(ரொம்ப நல்லதாப் போச்சு!)

ஆசை:

நல்ல நடிகைன்னு பேர் எடுக்கணும். மனசுக்குப் பிடிச்ச மாதிரி விதவிதமான கேரக்டர்கள்ல நடிக்கணும். 'கல்யாணி'ன்னா எல்லா ஜனங்களுக்கும் தெரியணும். சீரியல் மட்டுமல்ல சினிமாவிலும் ஜொலிக்கணும்.

(நிறைவேற வாழ்த்துகள்!)

– மாசி



✱ விழா நாயகர்கள்

சைக்கிளில் ஒரு சிறுவன். பின்னால் 'L' போர்டு. தலையில் ஹெல்மெட்! அவனுடைய அப்பா, பாதுகாப்புடன் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொடுக்கிறார்! இந்தக் கறுப்பு வெள்ளை புகைப்படத்துக்கு, 'இதே போன்ற பாதுகாப்பை குடும்பத்துக்கு நாங்கள் அளிக்கிறோம்' என்று கூறும் வாசகம்! குடிநீர் சுத்திகரிப்புக்கான 'பியூரிட்' விளம்பரம்தான், 2007ஆம் ஆண்டுக்கான கல்கி சதாசிவம் நினைவு விருதைப் பெற்றது. 'தினமணி' கார்ட்டூனிஸ்ட் மதியும், சென்னை ஆன்லைன் நிர்வாக இயக்குநர் ரவிசந்திரனும் அடங்கிய நடுவர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த விளம்பரத்தை பியூரிட் உற்பத்தி செய்யும் யூனிலிவர் நிறுவனத்துக்காக உருவாக்கியது லோ வேர்ல்டுவைட் (Lowe Worldwide) விளம்பர நிறுவனம். அதன் சார்பில் விருதினைப் பெற்றுக்கொண்டார் விஜய் சேவியர். ''ஒரு வர்த்தகப் பொருளுக்கு சமூக அக்கறையுடன் நாங்கள் உருவாக்கிய விளம்பரத்தை அங்கீகரித்ததில் பெருமை கொள்கிறோம். முன்னோடியான சாதனை மனிதர் பெயரால் வழங்கப்படும் விருதி

✱ விருதுபெற்ற விளம்பரம்



✱ சிறப்பு விருந்தினர்களுக்குச் சிறப்பு



ரோல் மாடலும்,



னைப் பெறுவதில் எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி'' என்றார் விஜய் சேவியர்!

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை, ஆண்டுதோறும் சிறந்த ஒரு விளம்பரத்துக்கு ரூபாய் பத்தாயிரம் பரிசளிப்பதுடன் அதை உருவாக்கிய விளம்பர ஏஜென்ஸிக்கு விருதுபத்திரமும் வாசித்தளிக்கிறது. தவிர, கல்கி சதாசிவம் நினைவுச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்கிறது. மக்கள் தொடர்பு, இதழியல், விளம்பரம், விற்பனைத் துறையில் பயிலும் படிப்பில் சிறந்த மாணவர்கள் இருவரைத் தேர்ந்தெடுத்து தலா ஐந்தாயிரம் ரூபாய் உதவித்தொகை அளித்து ஊக்குவிக்கிறது. இவற்றை உள்ளடக்கிய விழா, கடந்த மார்ச் 30ஆம் தேதி, சென்னை மைலாப்பூர் பாரதிய வித்யா பவன் அரங்கில் 'நேஷனல் மேனு ஃபாக்சரர்ஸ் காம்படிடிவ்னஸ் கவுன்சில்' தலைவரான வி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.



* 'மீடியாவில் பெண்கள் சித்திரிப்பு' – சிறப்புரை, கீதா ராமசேஷன்



* தலைமையுரை வி.கிருஷ்ணமூர்த்தி



ரீல் மாடலும்!

'என் மருமகளின் அழகான கூந்தலுக்கு அவள் குண்டலினி ஹேர் ஆயிலைப் பயன்படுத்துவதுதான் காரணம்' – அந்தக் காலத்தில் ஒரு ஹேர் ஆயில் விளம்பரத்தில் மாடலாகத் தோன்றி இப்படிச் சொன்னவர் சினிமா நட்சத்திரமில்லை; பாலிகர் மகாராஜா! லண்டனில் தயாரிக்கப்பட்ட ஒரு பிஸ்கட், இந்தியாவில், உயர் ஜாதி இந்துக்களின் கைகளால் மட்டுமே தயாரிக்கப்படுவதாக விளம்பரப்படுத்தப்பட்டது. இப்படி அந்தக் கால விளம்பரங்களில் வாடிக்கையாளர்களைக் கவர பயன்படுத்தப்பட்ட உத்திகளை விழாவின் வரவேற்புரையில் விவரித்தார் அறங்காவலர் கௌரி ராம்நாராயண்.

சதாசிவம் குடும்பத்தினருக்கும் தங்களுடைய குடும்பத்துக்கும் இடையிலான ஐம்பது வருட நெருங்கிய உறவை, தமது தலைமை உரையில் நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார் கிருஷ்ணமூர்த்தி. ''சதாசிவம் பன்முகப் பரிமாணம் கொண்ட ஒரு மகத்தான மனிதர்; சிறந்த தேச பக்தர்; மிக உயர்ந்த லட்சியங்கள் கொண்டவர். ஒரு போதும் தனது லட்சியத்தை, கொள்கையை அவர் விட்டுக் கொடுத்ததில்லை. ராஜாஜியின் சீடர்; பரமாச்சாரியாரின் அணுக்கத் தொண்டர்; எம்.எஸ். என்ற வைரத்துக்குப் பட்டை தீட்டி, உலகம் முழுவதும் ஒளி வீசிடச் செய்தவர்; விளம்பரத்துறை முன்னோடி; தேர்ந்த ரசிகர்; கலை போஷகர்; மற்றவர்கள் தங்களுக்குச் சொத்து வேண்டும் என்பதற்காகவே சம்பாதிப்பார்கள். சதாசிவமோ, பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே சம்பாதித்தவர். அவரிடமிருந்து உதவி பெற்று வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் பலர். இந்தியக் கலை உலகின் பொக்கிஷமாகக் கருதி பாதுகாக்கப்படும் சகுந்தலை, மீரா ஆகிய



* இறைவணக்கம் - அபர்ணாகுமார்

திரைப்படங்களை உருவாக்கியவர் சதாசிவம்'' என்று புகழாரம் சூட்டினார்.

''சதாசிவம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக பள்ளியைத் துறந்தவர். ஆனால், அவரது ஆங்கிலப் புலமை அபாரமானது. ஒருமுறை அவர் எனக்கு எளிமையாகவும் அதே சமயம் சொல்ல வேண்டியதைத் தெளிவாகவும் ஆங்கிலத்தில் எழுதுவது எப்படி என்று சொல்லிக் கொடுத்தார்'' என்று நினைவுகூர்ந்தார் கிருஷ்ணமூர்த்தி.

வழக்கறிஞர், சமூக ஆர்வலர் கீதா ராமசேஷன், 'இன்றைய மீடியாவில் பெண்கள் சித்திரிப்பு' குறித்து நடுநிலையான ஆய்வுரை அளித்தார்:

''எண்பதுகளில் அச்சு ஊடகங்கள் தவிர தூர்தர்ஷன் மட்டுமே இருந்த காலகட்டம். பத்திரிகைகள் வரதட்சணை, பெண் சிசுக் கொலை மற்றும் பெண்களுக்கு இழைக்கப்படும் பலவிதமான கொடுமைகளையும் சமூக அக்கறையுடன் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன.

கமலா என்ற ஆதிவாசிப் பெண் சந்தையில் விற்கப்பட்ட சம்பவம் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதன் பிறகு மக்கள் பிரச்னைகள் குறித்து பொது நல வழக்குகள் போடுவது அதிகரித்தது. ஒரு கட்டத்தில் பத்திரிகைகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் பொது நலப் பிரச்னைகளையே ரிட் மனுக்களாக நீதிமன்றங்கள் ஏற்றுக்கொண்டு விசாரணை நடத்தின. ஆனால், இன்று ஊடகங்களின் பொறுப்புணர்வு குறைந்துவிட்டது. தொலைக்காட்சியின் ஈர்ப்புடன் போட்டிபோட வேண்டியதன் காரணமாக, எதையும் பரபரப்பாக்குவது அதிகரித்துள்ளது. எனினும், மக்கள் மத்தியில் ஊடகங்கள் மீது நம்பிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகவேதான், குற்றம் சாட்டப்பட்டவர்கள் கூட, முதலில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு, அதன் பிறகு கோர்ட்டில் சரணடைகிறார்கள்!

மீடியாவில் பெண்கள் சம்பந்தமான விஷயங்களைக் கையாளும்போது நுணுக்கமான, முக்கியமான அம்சங்களில் போதிய அளவு அக்கறை காட்டுவதில்லை. சுனாமியின்போது மரணமடைந்தவர்களில் ஆண்களைவிட பெண்களே அதிகம். குடும்பத்தின் நலனுக்காகத் தன் நலனைத் தியாகம் செய்யும் இயல்பு மட்டுமின்றி, நீச்சல் கற்றுக்கொள்வதில் உள்ள மனத்தடையும் இதற்கு முக்கிய காரணம். இதைச் சுட்டிக் காட்டினால் அன்றி, இந்த நிலை குறித்து யோசிக்கவோ அல்லது மாற்றம் வரவோ வாய்ப்பு ஏது? ஆனால், மீடியா இதில் தவறிவிட்டது.

பயனுள்ள, ஆக்கபூர்வ செய்திகளைக்காட்டிலும் பரபரப்புக்கே இடமிருக்கிறது. கார்கில் போரின் போது காணாமல் போன கணவன், மரணமடைந்துவிட்டதாகக் கருதி, மறுமணம் செய்துவைக்கப்பட்ட அப்பாவிப் பெண் குடியா. அவளது முதல் கணவன் திரும்பி வந்துவிட, தொலைக்காட்சி 'டாக் ஷோ' ஒன்றில் அனைவரும் சுமார் இருபது நிமிடங்

* விளம்பர நிறுவனத்துக்கு விருது...



களுக்கு அவளைச் சரமாரியாக குற்றம் சாட்டினார்கள். பாவம் அந்தப் பெண்! மிகவும் வெகுளி! இரண்டாவது திருமணம்கூட அவள் மீது திணிக்கப்பட்டதாக இருந்திருக்கக்கூடும். ஆனால், மீடியா தனது ஆதாயத்துக்காக அவளை வில்லி ஆக்கிவிட்டது.



✱ மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை

பாலியல் வன்முறைக்கு ஆளான குழந்தைகளுடனான பொது விசாரணை நடைபெற்றது. வன்முறைக்கு ஆளான குழந்தைகளை, பத்திரிகை புகைப்படக்காரர்கள் படம் எடுக்க முயன்றபோது, நாங்கள் தடுத்தோம். பத்திரிகையில் புகைப்படங்கள் வெளியாவது அவர்களுக்குச் செய்யப்படும் அநீதி அல்லவா! ஆனால், புகைப்படக்காரர்கள், 'எங்களை அழைத்திருக்கவே வேண்டாம்' என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

பல்வேறு துறைகளிலும் பெண்கள் அதிக அளவில் பணியாற்றினாலும், அறிவுபூர்வமான பொருளாதாரம், அரசியல் பேட்டிகள் என்றால், தொலைக்காட்சி சேனல்கள் பெண்களைவிட, ஆண்களுக்கே முக்கியத்துவம் தருகின்றன. சீரியல்களோ ஒரு பெரும் பொறுப்பு வகிக்கும் பெண்ணைக்கூட அவள் எடுக்கும் முடிவுகளில் பல தவறாகவே இருப்பதுபோல சித்திரிக்கின்றன. தார்மிகக் கோபத்தை அவள் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, செயற்கையான சகிப்புத்தன்மை உடையவளாகச் சித்திரிக்கப்படுகிறாள்! டி.வி. சீரியல்களின் தாக்கம் பெண்கள் மத்தியில் மிக அதிகமாக இருக்கிறது. சமீபத்தில் ஒரு கேஸ் விஷயமாக என்னிடம் வந்த பெண்ணிடம், 'நீங்கள் கொஞ்சம் தைரியமாக இருக்க வேண்டும்' என்றபோது, உடனே அவர், 'செல்வி மாதிரியா?' என்று கேட்டார். குழந்தைகள், இன்று எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளுவதற்கு முன்பே, டி.வி.யைப் பார்த்து நிறைய விஷயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். டெலிவிஷன் நிகழ்ச்சிகளுக்கான வழிகாட்டு நெறிகளை ஜோஷி கமிட்டி அறிக்கை வரையறுத்துள்ளது. கடைப்பிடிக்கத்தான் ஆளில்லை!

சோப்பு மற்றும் இதர அழகு சாதனப் பொருட்கள், நகை விளம்பரங்களில் பெண் குழந்தைகள்தான் அதிகமாக வருகிறார்கள். குழந்தைகளை புத்திசாலிகளாகக் காட்டும், மிகவும் ரசிக்கத்தக்க விளம்பரங்களில் ஆண் பிள்ளைகள் மட்டுமே இடம் பெறுகிறார்கள். நமக்குள் ஊறிப் போய்க் கிடக்கின்ற இந்த வார்ப்புகளைப் பரிசீலனைக்கு உட்படுத்தி மாற்ற வேண்டிய பொறுப்பு மீடியாவுக்கு முக்கியமாக இருக்கிறது. ஏனென்றால், இன்றைய தலைமுறையினருக்கு ரோல் மாடல்களாக இருப்பவர்கள் ரீல் மாடல்களான சினிமா நட்சத்திரங்களும் டி.வி.கதாபாத்திரங்களும்தான். இந்த நிலைமை உருவாக மீடியா உலகம்தான் காரணம் என்பதால், மாற்றமும் மீடியா உலகிலிருந்துதான் தொடங்கியாக வேண்டும்.''



✱ வரவேற்கும் கௌரி

நிகழ்ச்சி தொகுப்பு: மானஸா


படங்கள்: ஸ்ரீஹரி

‘‘உட்காருங்க செல்வன், ரொம்ப நேரம் காக்க வைச்சுட்டேனா? யூனிவர்சிடி கால் வந்திருந்தது. அதான், என்ன விஷயம்? ராகிங் சம்பந்தமா பேச அனுமதி கேட்டிருக்கீங்களே! ஏற்கெனவே அரசாங்கம் தடை செய்துள்ள மேட்டரை க்ளோஸ் பண்ண உங்க நண்பர்கள் அனுமதிக்கலையா? இல்லை, உங்களுக்கே விருப்பம் இல்லையா?'' இன்ஜினியரிங் காலேஜ் ப்ரின்ஸ்பல் மென்மையாக ஆரம்பித்தார்.

''இரண்டும்தான் சார். ஒரு சில சம்பவங்களால சமீப காலங்களில் ராகிங் ஒரு பூதாகார விஷயமா மாறிட்டது எங்களுக்கும் தெரியும். ஆனா உங்களுக்குத் தெரியாதது, இந்த காலேஜோட ராகிங் பூர்வீகம். சீனியர்கள் ரொம்பவும் கண்ணியமாகத்தான் இதைக் கையாண்டாங்க. நாங்களும் அப்படியேதான். மேற்கொண்டும் அப்படியே தொடர நினைக்கையில், நியூ ஸ்டுடண்ட்ஸை நாங்க பார்க்கவோ பேசவோ கூடாதுன்னு தடை போடறது நியாயமில்லை சார்'' என்றான் மாணவத் தலைவன் செல்வன்.

''இருக்கலாம் ஒத்துக்கறேன். ஆனா, விபத்துங்கறது சொல்லிக்கிட்டு வர்றதில்லையே. அதனால அதுக்குச் சாத்தியமான எல்லா வழிகளையும் அடைச்சிடலாமேன்னுதான் மொத்தமா தடை பண்றேன்'' என்றார் ப்ரின்ஸ்பல் சற்றே சிரித்தபடி...

''மன்னிக்கணும் சார். இன்றைய தேதியில இந்த மாதிரி பொறியியல் கல்லூரிக்கு அதிகமா வந்து சேர்றது கிராமத்து மாணவர்கள்தான். அவங்களும் சரி, மற்ற சிற்றூர்



மாணவர்களும் சரி, ஒருவித தாழ்வு மனப்பான்மையோட அவங்கவங்க ஊர்க்காரங்களோட மட்டுமே இழைஞ்சா போதும்னே ஒதுங்கி இருக்கறாங்க. அந்தக் கிணத்துத் தவளை மனோபாவத்தை, கட்டுப்பாடான ராகிங் அறிமுகத்தால மட்டுமே உடைக்க முடியுது. எல்லோரிடமும் சகஜமா கைகோக்கச் செய்ய முடியுது.''

''அப்போ ராகிங்னால பிரச்னையே இல்லைங்கிறீங்களா?''

''ஒரு சில வக்கிரம் பிடிச்ச சாடிஸ்ட்ஸ் பண்ற தவறுகளால, மொத்த மாணவ சமுதாயத்துக்கும் கெட்ட பேர் ஏற்படறது உண்மைதான். ஆனா, நிச்சயம் நம்ம கல்லூரியிலே அது நடக்க அனுமதிக்க மாட்டேன்.''

ஒரு நிமிடம் கண்ணை மூடி யோசித்தார் முதல்வர் மகேந்திரன்.

''சரி, நான் அனுமதிக்கிறேன். ஆனா, அதுக்கு முன்னாடி என்னென்ன கலாட்டா பண்ண உத்தேசம்னு ஒரு ரிப்போர்ட் கொடுங்க...''

செல்வனின் முகம் கிட்டத்தட்ட இஞ்சி தின்ன குரங்கு ரேஞ்சுக்குக் கோணியதைக் கண்டுகொள்ளாமலே, ''செல்வன், ஓ.கே. யூ மே கோ நவ்'' எனச் சொல்லியவாறே பணியில் மூழ்கத் துவங்கினார்.

''செல்வா, வேற வழியே இல்லையா? மத்த காலேஜ்ல மாதிரி ரகசியமா பண்ணலாம்னா அதுக்கும் நீ ஒத்துக்க மாட்டேங்கிறே...''

''இனி புலம்பிப் பலனில்லை. அவர் கேட்டமாதிரி ஒரு லிஸ்ட் குடுத்துதான் பார்ப்போமே? மச்சி, நீங்க வழக்கமா செய்யற ராகிங் டெக்னிக்குகளை அப்படியே எழுதினா முதல்ல என் சீட்டுதான் கிழியும். புதுசு புதுசா ஐடியா பண்ணி எழுதணும்டா. வாங்க கேன்டீன்ல உட்கார்ந்து யோசிப்போம்.''

இத்தனை ஆண்டு கல்லூரி வாழ்வில் முதல்வர் வீட்டுக்கு, அழைப்பின் பேரில் செல்வது இதுவே முதல் அனுபவம்! எல்லோரும் மௌனமாக அமர்ந்திருந்தனர். தேநீர் வந்தது. தயக்கத்துடன் பருகினர். முதல்வரின் மனைவி வந்து வணக்கம் சொல்லி விட்டுப் போனார். காத்திருந்தனர்.

ஐஷ்வர்யன்

''வணக்கம்... உட்காருங்க. ராகிங்கறது கல்லூரி சம்பந்தப் பட்டதுன்னாலும் படிப்பு சம்பந்தப்பட்டதில்லையே. அதனாலதான் இப்படி என் வீட்டுக்கு வரவழைக்கப் பேசறேன். செல்வன் லிஸ்ட் கொண்டு வந்தீங்களா? எங்கே காட்டுங்க. ம்... என்ன இது, ஒரு பக்கம்கூட தாண்டலை. எழுதுனதுலகூட அவ்வளவு யதார்த்தம் இல்லையே.. 'தரையிலே நீச்சல் அடிக்கச் சொல்வோம்' ஓ.கே. 'பெண் குரல்ல பாடச் சொல்வோம்'.. அது உண்மையா? அட, இதென்ன நிறைய புது கண்டுபிடிப்புகள்லாம் இருக்கே. சோளக் கொல்லை பொம்மையாக்கறதா! அது ராகிங்கா மாறுவேடப்போட்டியா? இதென்ன கழுதைலே சவாரி பண்ணணுமா? நோ... நோ... தப்பித் தவறி ரகளையாகி அது உதைச்சுதுன்னா?''

''அப்ப என்னதான் சார் நாங்க பண்றது?''

''இதுக்கு நானா பதில் சொல்லணும்? நீங்க பட்டியலை உண்மைத் தன்மையோட தயாரிக்கலையே! வழக்கமான நிகழ்வுகளை மறைச்சிட்டீங்களே! முதலாமாண்டு பையனை, மூணாம் ஆண்டு பெண்கிட்ட போய் 'ஐ லவ் யூ சொல்லிட்டு வா'ன்னு விரட்டுறதைக் காணோம். ஹாஸ்டல் சீனியர்களோட உள்ளாடை உட்பட எல்லா துணிகளையும் துவைக்கச் சொல்றதை ஏன் எழுதலை?''

''சார், நீங்க சொல்றது நூற்றுக்கு நூறு உண்மைதான். ஆனா, இதெல்லாம் வழக்கமா நடக்கற நிகழ்வுகள்தானே. இதையெல்லாம் ஸ்போர்டிவ்வா எடுத்துக் காம...''

''ஸ்டாப் தேர், மை பாய். இந்த வார்த்தைக்காகத்தான் காத்திட்டிருந்தேன். ஒரு செயல், விளையாட்டா இல்லை



"கலாவும் மாலாவும் இரட்டைப் பிறவிகள். ஒருத்திக்கு ஜுரம் வந்தா இன்னொருத்திக்கும் ஜுரம் வந்துடுமாம்."

" இதென்ன பிரமாதம். எங்க பக்கத்து வீட்டுல ஒருத்திக்கு காதல் கடிதம் வந்தா, அடுத்தவளுக்கும் காதல் கடிதம் வந்துவிடும்."

– லலிதா செல்லப்பா

யான்னு யாருப்பா தீர்மானிக்கிறது? ஸ்பெயின்ல புல் ஃபைட்ல மாடு மேலே அம்பு வீசுறது அவங்களுக்கு ஸ்போர்ட். ஆனா அந்தக் காளைக்கு? அலங்கா நல்லூர்ல நடக்கற ஜல்லிக்கட்டு, பார்க்கற நமக்கும் சாராய மயக்கத்திலே ஓடுகிற காளைக்கும்கூட ஸ்போர்ட்டாக இருக்கலாம். ஆனா, மாடு முட்டி செத்தவன் மனைவிக்கு? அவ்வளவு ஏன்? தும்பி வால்ல நூல் கட்டி விளையாடறது குழந்தைக்கு ஸ்போர்ட். பட்... அந்தத் தும்பிக்கு? டியர் ஃப்ரண்ட்ஸ், கொஞ்சம் உள்ள வர்றீங்களா... நான் ஒரு தும்பியைக் காட்டறேன்."

"இது என் பையன் அறிவொளியோட அறை. சரியா எட்டு வருஷத்துக்கு முன்னால, இந்த பூமியிலே அவனோட கடைசி நாள்ல அவன் தன் அறையை எப்படி விட்டுட்டுப் போனானோ, அதை அப்படியே பாதுகாத்து அமைச்சிருக்கிறேன். எந்த ஊருக்குப் போனாலும் அவன் ஞாபகமா இதே செட்டப்பை செய்து வைக்கிறேன். நீங்க நினைக்கிறது சரிதான். ராகிங்தான் அவனைப் பலி கொண்டது."

மெலிதாய் மூச்சுவிட்டு அவர் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்கையில், மாணவர்கள் மனம் நடுங்கினர்.

"அது ஒண்ணும் அத்தனை கொடூரமான அரக்கத்தன ராகிங்கே இல்லை. இதை நான் எப்படி உறுதியாச் சொல்றேன்னா, அப்போ அவன் சேர்ந்த காலேஜிலதான் நானும் பேராசிரியராக இருந்தேன். என் பையனை சீனியர்கள் ராக் பண்ணியிருக்காங்க. மைதானத்தைச் சுத்திச் சுத்தி ஓடச் சொன்னாங்க. சத்தம் போட்டு பாடச் சொன்னாங்க. கடைசியா மேல்சட்டை அவிழ்த்து அரை நிர்வாணமா நின்னு சல்யூட் அடிக்கச் சொன்னாங்களாம். மறுத்தவங்களை வெறும் உள்ளாடையோட நிக்கவச்சு சல்யூட் பண்ண வச்சிருக்காங்க. மறு நிமிடமே எல்லாம் முடிச்சு ஃப்ரண்ட்லியா அனுப்பிட்டாங்க. செல்வன் சொன்னது மாதிரி ஸ்போர்டிவ் ராகிங்னுகூட அதை நாம எடுத்துக்கலாம்தான். ஆனா, என் மகன் ஃபேன்ல பெட்ஷீட்டை மாட்டி தூக்குல தொங்கினான்.

நாங்களும் நினைச்சோம், 'ஏன் இவனுக்கு மட்டும் அப்படி ஒரு மரண தாகம்? அப்படி ஒரு தற்கொலை தீவிரம்?' அப்புறம்தான் ஞாபகம் வந்தது. 'பெத்தவங்க எங்க முன்னேயே அவன் ஒரு தரம்கூட மேல் சட்டை கழற்றி வெற்றுடம்புடன் நின்னதில்லை'ன்னு. இப்ப சொல்லுங்க, ஸ்போர்ட்ஸுங்கற உணர்வு நபருக்கு நபர் மாறுபடுவதுதானே?

ஒரு விஷயத்தை கரெக்டா ஜட்ஜ் பண்றதுங்கறது, இளமையில அத்தனை சுலபமில்லை. அதுக்கு அறிவும் திறமையும் மட்டுமே போதாது. அனுபவ விவேகமும் வேணும். அதனாலதான் கண்டிப்பு காட்டறேனே தவிர, உங்கள் உரிமைகளைப் பறிக்க அல்ல."

மேற்கொண்டு அவர் தொடருமுன்னரே செல்வன் அவரை நெருங்கி, அந்தப் பட்டியலைப் பற்றியிழுத்து, கிழிக்க ஆரம்பித்தான்.

ஓம் ஸ்ரீகுருப்யோ நம : ஓம் ஹ்ரீம் புவநேச்வர்யை நம :



ஸத்குரு சாந்தாநந்த மஹாஸ்வாமிகளின் பக்தர்களுக்கு ஓர் அன்பான அறிவிப்பு

---

1. சென்னை மாநகரில் ஸத்குரு சாந்தாநந்த ஸத் ஸங்கம் என்ற பெயரில் ஓர் அறக்கட்டளை துவக்கப்பட்டுள்ளது.
2. இந்த அறக்கட்டளை தற்சமயம் புதுக்கோட்டை ஸ்ரீபுவநேச்வரீ அவதூத வித்யா பீடத்தின் பீடாதிபதியாக விளங்கி வருகின்ற ஸத்குரு ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றது.
3. தற்போது இந்த அறக்கட்டளை, நாமக்கல் அருகிலுள்ள சேந்தமங்கலத்தில் இருக்கின்ற ஸத்குரு சாந்தாநந்த மஹாஸ்வாமிகளின் குருநாதர் ஸத்குரு ஸ்வயம் ப்ரகாச மஹாஸ்வாமிகளின் அதிஷ்டான திருப்பணிகளைச் செய்து வருகின்றது. இத்திருப்பணிக்கு நன்கொடைகள் அன்புடன் வரவேற்கப்படுகின்றன. (ஜூலை மாதம் 14ஆம் நாளன்று மஹா கும்பாபிஷேகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது).
4. அறக்கட்டளை திட்டமிட்டுள்ள பணிகள் :
   * ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி உதவி முதலான சமூகப் பணிகள் செய்தல்.
   * சிறந்ததொரு நூலகம் அமைத்தல்.
   * சென்னை மாநகரின் முக்கிய பகுதி ஒன்றில் ஸத்குரு சாந்தாநந்த மஹாஸ்வாமிகளின் திருப்பெயரில் கலையரங்கம் ஒன்று உருவாக்குதல்.
   * அக்கலையரங்கத்தின் முற்பகுதியில் 18 அடி உயரத்தில் ஸத்குரு சாந்தாநந்தர் அவர்களின் திருவுருவச்சிலை நிறுவுதல்.
5. ஸ்ரீஸ்வாமிகளின் பக்தர்களை தொடர்பு கொள்வதற்காகவே இந்தத் தகவல் விளம்பரம் தரப்பட்டுள்ளது.
6. ஸத்குரு ஸ்வாமிகளுடைய பக்தர்கள் அனைவரும் ஸத்ஸங்கத்தில் தங்களை உறுப்பினர்களாக இணைத்துக்கொண்டு, அறக்கட்டளையின் அறப்பணிகளில் தங்களை ஈடுபடுத்தி குருவருள் பெற பேரன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு

ஸத்குரு பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின்

அருளாணைப்படி

ஸத்குரு சாந்தாநந்த ஸத்ஸங்கம்

'சபரி ஸைநாதனா' 142, முதல்மாடி, கிரீன்வேஸ் ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028. ☎ +91-44-2464 1600 / 98400 51131


காலேஜ்
"வாவ்,"
ஆட்டோகிராஃப்
என்றவள்
கண்களில்,
'நான்'
படிக்கலாமா?
என்ற குறும்பு
நிரம்பி
வழிந்தது!
DIARY 1997

ஆட்டோகிராஃப்!

பொங்கலுக்கு வீட்டைச் சுத்தப் படுத்துகிறோம் பேர்வழி என்று, நானும் என் மனைவியும் பழைய பெட்டிகளை உருட்டிக்கொண்டிருந்த நேரம், உடைந்த-உடையாத தட்டுமுட்டுச் சாமான்களுக்கு மத்தியில் அந்தப் பச்சை நோட்டு கிடைத்தது.

ஆரம்பத்தில், நான்கூட அதைச் சரியாகக் கவனிக்கவில்லை. என் மனைவிதான் ஆவலோடு அந்த நோட்டைக் கையில் எடுத்து, ''ஹேய், என்ன இது?'' என்றாள் கொஞ்சும் குரலில்.

நான் ஆர்வமில்லாத வெற்றுப் பார்வையுடன் அந்த நோட்டைப் புரட்டினேன். முதல் பக்கத்திலேயே, அது பல ஞாபகங்களைக் கொண்டுவந்துவிட்டது!

அந்தப் பச்சை நோட்டு, என்னுடைய கல்லூரி ஆட்டோகிராஃப் புத்தகம். பக்கத்துக்குப் பக்கம், நீல - சிவப்பு மை எழுத்துகளில் எங்கள் காலேஜ் ஞாபகங்கள் பதிவாகியிருந்தன.

இந்த ஆட்டோகிராஃப் நோட், பச்சை நிறம். எந்தவிதமான பளபளப்பும் இல்லாத சாதாரணக் காகிதங்களைக் கொண்டது.

நண்பர்கள் எல்லோரும் பளபளப்பான டைரியில் ஆட்டோகிராஃப் வாங்கத் தொடங்கியபோது, நான் மட்டும் இந்தப் பழைய நோட்டில் வாங்கத் தொடங்கினேன். தெரிந்த - தெரியாத நண்பர்களிடமெல்லாம் கையெழுத்து வேட்டை ஆடத் தொடங்கினேன்.

அந்த நோட்டின் முதல் பக்கத்தில், சிவப்பு ஸ்கெட்ச் பேனா கொண்டு என் பெயரை எழுதி அடிக்கோடு போட்டேன். நண்பர்கள் எல்லோரிடமும் அதைக் கொடுத்து,

என். சொக்கன்

என்னைப் பற்றிய அவர்களுடைய எண்ணங்களை எழுதிக் கையெழுத்திடும்படி கேட்டுக்கொண்டேன்.

கல்லூரி நட்புக்கு, நாம் செய்ய வேண்டிய முத்தாய்ப்புக் கடமையாக அதைக் கருதிய என் நண்பர்கள், மிகுந்த அன்புடன் அந்தப் பக்கங்களை நிரப்பித் தந்தார்கள்; 'நினைக்க மறந்தாலும், மறக்க நினைத்துவிடாதே' என்று சிலர் சம்பிரதாயமாக உருகினார்கள்; வேறு சிலர், நிஜமாகவே நுணுக்கமான சில ஞாபகங்களைப் பதிவு செய்திருந்தார்கள்; இன்னும் சிலர் அறிவுரை சொல்லி அக்கறையைக் காட்டியிருந்தார்கள்; மிச்சமிருந்த சில நண்பர்கள், கவிதை, ஓவியம் என்று கலை அழகோடு ஆட்டோகிராஃப் போட்டிருந்தார்கள்.

இந்த ஞாபகப் பதிவுகளையெல்லாம் தாண்டி, என்னை உலுக்கிய ஒரு விஷயம், அந்த ஆட்டோகிராஃப் நோட்டில் கையெழுத்திட்டிருந்த அறுபது நண்பர்களில், சுமார் நாற்பது பேருக்குமேல் என்னுடைய முன்கோபத்தைக் குறிப்பிட்டு அறிவுரை சொல்லியிருந்தார்கள். அதைக் கவனித்ததும் எனக்கே மிக வெட்கமாகிவிட்டது.

கல்லூரி நாட்களில், என்னுடைய அசட்டுக் கோபம் ஹாஸ்டல் பிரசித்தம். ஒரு சூடான விவாதத்தின்போது, எதிர்த்துப் பேசிய நண்பன் ஒருவனை, அரை கிலோ எடை இருக்கக்கூடிய ஒரு கனமான பூட்டின்மூலம், நெற்றிப்பொட்டின் மிக அருகே அடித்திருக்கிறேன்.

இன்னும் இப்படிப் பல சம்பவங்களைச் சொல்லலாம். நேரம் கிடைக்கும்போதெல்லாம் தீவிரக் கோபவானாக விளங்



“பொண்ணுங்க எழுதினதையெல்லாம்தான் முதல்ல படிப்பேன், தெரியுமா?” என்றாள்!



கிய நான், இந்த ஆட்டோகிராஃப் அறிவுரைகளின்மூலம்தான், கொஞ்சம் தணிந்தேன்.

கல்லூரிக் காலம் முடிந்து, நண்பர்கள் எல்லோரும் அவரவர் ஊர்களுக்குப் பறந்துவிட்டார்கள். என் ஆட்டோகிராஃபில் பாதிக்கும் மேற்பட்ட பக்கங்கள், வெற்று ஞாபகங்களாகவே நின்றுபோய்விட்டன.

கல்லூரி முடிந்து, கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் கழித்து, எனக்கு ஹைதராபாத்தில் வேலை கிடைத்தது. அதற்காக ரயிலில் நீண்ட பயணம் புறப்பட்டபோது, மனம் கனத்திருந்தது.

ரயிலின் உச்சி பர்த்தில் படுத்துக்கொண்டு, அந்தப் பச்சை டைரியை எடுத்து, ஒவ்வொரு பக்கமாக வாசித்தேன். என்னுடைய கட்டுப்பாடே சிறிதும் இன்றி, கண்களில் கரகரவென்று நீர் வழிந்தது. காலேஜ் நாட்கள் முழுக்க கண்முன்னால் ஓடி மறைவதுபோல் உணர்ந்தேன்.

ஹைதராபாத் ரயிலில் அந்த நோட்டைப் படித்து அழுத நான், அடுத்த சில வாரங்களுக்குள், எப்படியோ அதை மறந்தே போனேன்.

வருடக்கணக்கில், அந்த நோட்டை வெளியில் எடுத்துப் பார்த்ததாகக்கூட நினைவில்லை. அது என் சூட்கேஸுக்குள்ளேயே பத்திரமாகத் தூங்கிக்கொண்டிருந்தது.

சூட்கேஸிலிருந்து, அது எப்போது பழைய பெட்டிகளுக்குள் அடைக்கலம் புகுந்தது என்று தெரியவில்லை. இப்போது எப்படியோ என் மனைவியின் சி.ஐ.டி. விழிகளில் தட்டுப்பட்டிருக்கிறது.

'வாவ், ஆட்டோகிராஃப்' என்றவள் கண்களில் ''நான் படிக்கலாமா?'' குறும்பு நிரம்பி வழிந்தது.

''ஷ்யூர்'' என்றேன் நான். ஏனெனில் அதில ரகசியம் எதுவும் இல்லை.

அவள் கிண்டலாக, ''பொண்ணுங்க எழுதினதையெல்லாம்தான் முதல்ல படிப்பேன், தெரியுமா?'' என்றாள்.

அந்த விநாடியிலிருந்து என் மனைவியின் தேடுதல் வேட்டை தொடங்கியது. அடுத்த ஒன்றரை மணி நேரங்களுக்குமேல் செலவழித்து, ஒரு பக்கம் விடாமல் முழுசாகப் படித்து முடித்துவிட்டாள்.

மறுநாள் மாலை, நான் அலுவலகத்தி

''உங்க முதல் பெண்டாட்டி பேர்ல மட்டும் ஒரு வீடு எழுதி வெச்சிருக்கீங்களே, என் பேர்ல என்ன எழுதி வைச்சிருக்கீங்க?''

''ரெண்டு கதை எழுதி வைச்சிருக்கேனே!''

– வெ.சீதாராமன்





''உங்க ஆஸ்பத்திரில இறந்தவரை போஸ்ட் மார்ட்டம் பண்ணிப் பார்த்தா உடல் உறுப்புகளைக் காணோமே?''

'' 'காயமே இது பொய்யடா! வெறும் காற்றடைத்த பையடா!'ன்னு பெரியவங்க சொன்னது உண்மையோன்னு தோணுது சார்!''

- அரிசி ஸ்ரீராம்

லிருந்து திரும்பியபோது, மேஜைமேல் அந்த ஆட்டோகிராஃப் டைரி. சுத்தமாகத் தூசு தட்டப்பட்டு, பழைய கம்பீரத்துடன் சிரித்துக்கொண்டிருந்தது.

''என்னம்மா, படிச்சு முடிச்சிட்டியா?'' என்றேன் கிண்டலாக.

''ஓ, ஆச்சே'' என்றவள், ''இப்போ ஒரு சின்னப் புதிர்ப் போட்டி வைக்கப் போறேன்'' என ஆரம்பித்தாள்.

''போட்டியா? அதென்னது?'' ஆவலுடன் கேட்டேன். விளக்கினாள்.

பந்தயம் இதுதான்: அந்த ஆட்டோகிராஃப் டைரியில் பல பக்கங்கள் எழுதப்படாமல் வெறுமையாய் இருந்ததா? அவற்றில் ஏதோ ஒரு பக்கத்தில், என் மனைவி தனக்கு ஒரு புனைபெயரைக் கற்பனை செய்துகொண்டு, எனக்கு ஒரு கற்பனை ஆட்டோகிராஃப் எழுதியிருக்கிறாள். அது எந்தப் பக்கம், என்ன பெயர் என்று நான் கண்டுபிடிக்க வேண்டும்!

அவள் சொல்லச் சொல்ல, எனக்குள் சுவாரஸ்யம் தட்டியது. மாலை காஃபியைக் கூட மறந்தவனாக, அந்த நோட்டை ஆவலுடன் புரட்டத் தொடங்கினேன்.

அடுத்த முக்கால் மணி நேரம், பழைய ஞாபகங்களில் மூழ்கி எழுந்தேன். ஒவ்வொரு பக்கமாக வாசிக்க, வாசிக்க ஏழெட்டு வயது குறைந்துவிட்டவன் போல், மீண்டும் கல்லூரி வாசலில், விடுதியில் காத்திருக்கும் மாணவன்போல் என்னை உணரமுடிந்தது.

ஆனால், இந்த நினைவுகளில் எது என்னுடைய மனைவியின் குறும்பு? எத்தனை போராடியும், அவள் புதிதாக எழுதிய அந்த 'இடைச் செருக'லை என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை!

ஆடு தொலைத்தவனுக்குக் கண்ணில் தென்படுவதெல்லாம் தன்னுடைய ஆடாகத் தெரிவதுபோல், அங்கிருந்த எல்லாப் பெயர்களும் என்னுடைய பழைய நண்பர்களாகவே தோன்றியது!

இதன் அர்த்தம், அத்தனை சிநேகிதங்களும், மேலோட்டமாக, பாசாங்காக, வெறும் பெயரளவில்தான் எனக்குள் இறங்கியிருக்கின்றன; இந்த ஆட்டோகிராஃப் நோட்டிலும்.

இவையெல்லாம் நிஜமாகவே என் ஞாபகங்கள் என்பதற்கான அழுந்தத் தைத்த அடையாளம் எதுவும் என் மனத்தில் இல்லை. வெற்று நினைவாகதான் இந்த நோட்டு எஞ்சியிருக்கிறது. முத்துகளைத் தவறவிட்டு, வெற்றுக் கிளிஞ்சல்களை மட்டும், இத்தனைக் காலம் பொக்கிஷமாகச் சேகரித்து வைத்திருக்கிறேன். அதைவிடவும் என்னோடு எனக்காக வாழ்ந்துகொண்டிருக்கும் என் மனைவியின் கையெழுத்தைக்கூட என்னால் கண்டறிய முடியவில்லை என்றால்...?

மனைவியின் முகம் வாடிப் போய்விட்டது. எல்லாவற்றுக்கும் ''ஸாரிப்பா'' என்றேன் ஒரே வார்த்தையில். ●


கலகம் பிறந்தது எனக்காக-14

உண்மைகளை

என் கடன் சர்ச்சை கிளப்பிவிடுவதே என்பதுதான் சுவாமியின் அரசியல் தத்துவம். அதன்படி சோனியாகாந்திக்கு எதிராக சுவாமி விடுத்த சர்ச்சை அம்புகளில் இரண்டு மட்டும் வீரியமிக்கவை.

முதல் அம்பு, சோனியாவின் நிஜப் பெயர் அண்டோனியா. அவருடைய பிறப்புச் சான்றிதழில் அப்படித்தான் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், தம்முடைய நிஜப் பெயரை வேண்டுமென்றே மறைத்து, சோனியா என்று பதிவு செய்துள்ளார். மேலும் ஆர்பசானோ என்ற இடத்தில் பிறந்ததாக நாடாளுமன்றத்தில் தகவல் கொடுத்துள்ளார். ஆனால், உண்மையில் அவர் பிறந்தது லூசியானாவில்.






இரண்டாவது அம்பு, சோனியா டிப்ளமா பட்டம் எதையும் வாங்கவில்லை. ஆனால், 1999ல் ரேபரேலியில் போட்டியிட்டபோது, தாம் லண்டனில் இருக்கும் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தில் டிப்ளமா முடித்துள்ளதாகக் கூறியிருக்கிறார். உண்மையில் கேம்ப்ரிட்ஜில் இருக்கும் 'லென்னாக்ஸ் குக் ஸ்கூல்' என்ற சாதாரணமான பயிற்சி நிறுவனத்தில் 'சர்டிஃபிகேட் இன் இங்கிலீஷ்' என்ற சான்றிதழ் படிப்பை மட்டுமே படித்துள்ளார்.

'தம்மைப் பற்றிய அடிப்படை உண்மைகளை மறைத்துவிட்டார் சோனியா' என்று அப்போதைய நாடாளுமன்ற சபாநாயகருக்குக் கடிதம் எழுதினார் சுவாமி. பெரிய அளவில் சர்ச்சையைக் கிளப்பிய விஷயத்தை 'தட்டச்சுப்பிழை' என்ற ஒரே வார்த்தையை வைத்துச் சமாளித்துவிட்டார் சோனியா.

வெறுமனே வார்த்தை வெடிகளோடு நிறுத்திக்கொள்ளாமல், தம்முடைய எழுத்து மூலமாகவும் அரசியல் களத்தைச் சூடேற்றியிருக்கிறார் சுவாமி. ராஜீவ்காந்தி படுகொலை தொடர்பாக அவர் ஆங்கிலத்தில் எழுதிய 'ராஜீவ் படுகொலை: விடை கிடைக்காத வினாக்களும் கேட்கப்படாத கேள்விகளும்' என்ற புத்தகத்தில், அவர் எழுப்பிய கேள்விகள் காங்கிரஸ் வட்டாரத்தில் பலத்த அதிர்வுகளை ஏற்படுத்தின. அவற்றிலிருந்து சில:

✤ தேர்தல் பிரசாரத்தின்போது ராஜீவ் காந்தி திருப்பத்தூர் வருவதை ஜெயலலிதாவும் வாழப்பாடி ராமமூர்த்தியும் விரும்பவில்லை. எனில், ராஜீவ்காந்தியை வரவழைத்தது யார்?

✤ ராஜீவ்காந்தியை தமிழகம் வரவழைக்க வற்புறுத்தியவர்களில் முக்கியமானவர் மணிசங்கர் அய்யர். கொலை செய்



-சுவாமி காட்டம்

யப்பட்ட நாளிலிருந்து இதுவரையில் மணிசங்கர் அய்யர் விசாரிக்கப் படாதது ஏன்?

❖ ராஜீவ்காந்தி கொலையை விசாரிக்க லண்டன் போயிருந்த உளவுப்பிரிவு அதிகாரியின் பெட்டி காணாமல் போய் விட்டதாகக் கூறப்படுகிறது. அந்தப் பெட்டியில் என்ன இருந்தது?

❖ மனித வெடிகுண்டான தனுவின் உடல் மட்டும் சாட்சிக்காக சென்னையில் வைக்கப்பட்டிருந்தபோது, குண்டடி பட்டு இறந்த ஒற்றைக்கண் சிவராசனின் உடல் மட்டும் எதற்காக உடனடியாகத் தகனம் செய்யப்பட்டது?

இப்படியான பல கேள்விகள் காங்கிரஸ் தலைவர்களைத் திக்குமுக்காட வைத்தன. இதே ராஜீவ்காந்தி படுகொலை தொடர்பாக முன்னாள் மத்திய சட்ட அமைச்சரும் பிரபல வழக்கறிஞருமான ராம் ஜெத்மலானிக்கு, விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகவும் அவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு வாதாடுவதாகவும் கூறி வம்புக்கு இழுத்தார் சுவாமி. ஆனால், இந்த முறை நன்றாக வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டியிருந்தது. சுவாமிக்கு எதிராக டெல்லி உயர் நீதிமன்றத்தில் மான நஷ்ட வழக்கு தொடர்ந்தார் ஜெத்மலானி. வழக்கு விசாரணையின்போது, தாம் சுமத்திய குற்றச்சாட்டுக்கு எந்த விதமான ஆதாரத்தையும் சமர்ப்பிக்காததோடு, தாம் கூறிய கருத்தில் மாற்றம் இல்லை என்றும் இதற்காக வருத்தமோ, மன்னிப்போ கோர முடியாது என்றும் கூறி விட, சுவாமி ஐந்து லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது!

இதன் பிறகு சுவாமி மௌனியாக இருந்துவிட்டாரா என்ன! லண்டனைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் நிர்வாக இயக்குநர்களுள் ஒருவராக இருக்கும் ப.சிதம்பரம், அதிலிருந்து ஆண்டுக்கு பதினைந்து லட்சம் சம்பாதித்தபோதும் அதற்குரிய வருமானவரிக் கணக்கை முறைப்படி செலுத்தவில்லை என்றார் சுவாமி.

அடுத்ததாக, சன் டி.வி. அதிபர் கலாநிதி மாறனையும் சீண்டினார். சன் குழுமத்தில் இருந்து கருணாநிதி குடும்பத்தினருடைய பங்குகளைத் திரும்பக் கொடுப்பதற்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் சொந்தப் பணத்தைச் செலவழித்துள்ளதாகக் கணக்கு காட்டியிருக்கிறார். அவ்வளவு பெரிய தொகையை கலாநிதி மாறன் சம்பாதித்தது எப்படி? இது உலகமகா மோசடி அல்லவா? என்று கேள்வியெழுப்பினார் சுவாமி.

மறைத்த சோனியா!

ஆர்.முத்துக்குமார்



சுவாமி யாரைக் குறி வைத்து எப்படிப்பட்ட சர்ச்சைக் குண்டுகளை வீசினாலும் அவை வெகு சீக்கிரத்திலேயே புஸ்வாணமாகிவிடும். அது தான் சுவாமியின் ராசி!

(கலகம் முடிந்தது!)

முதுகு வலி முன்னே... சிறுநீரக வலி பின்னே..!

முதுகில் வலி ஏற்பட்டால், அது மார்புப் பகுதியில் ஏற்பட்ட பாதிப்பினால் கூட இருக்க முடியுமா? இதை எப்படிக் கண்டுபிடிப்பது?

-ராமகிருஷ்ணன், மதுரை

எலும்புநல அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பார்த்தசாரதி :

செம்பரம்பாக்கம் ஏரி மழையால் நிரம்பினால், அதன் விளைவு அடையாறில் தெரிகிறது அல்லவா? அதுபோல முதுகுக்கு முன்பக்கத்திலுள்ள வயிறு அல்லது மார்புப் பகுதியில் உள்ள ஏதோ கோளாறு காரணமாக முதுகில் வலி ஏற்படுவது சாத்தியமே! இதை referred pain என்போம்.

முதுகில் வலி ஏற்படும்போது அங்கு அழுத்திப் பாருங்கள். வலி குறைகிறதா? அப்படியானால், அந்த வலிக்கு முதுகு காரணமல்ல.

வயிற்றுப் பகுதியைச் சுற்றி நிறைய கொழுப்புப் படலத்தைச் சேர்த்துக் கொண்டிருந்தால், அதன் எடை (விலா எலும்புகளோடு இணைக்கப்பட்டிருக்கும்) முதுகெலும்பிலும் தெரியும். வயிற்றைச் சற்று உள்ளிழுத்துக்கொண்டால் முதுகு வலி குறைகிறது அல்லது மறைகிறது என்றால், தொப்பை காரணமாக இருக்க வாய்ப்பு அதிகம்.



முதுகுவலி ஏற்படும்போது, படுத்துக் கொண்டு பாருங்கள். அப்போது அந்த வலி குறைந்தால் அது முதுகு சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடும்.

ஆனால், படுத்துக்கொண்டாலும் அதே வலி அல்லது அதைவிட அதிகமான வலி என்றால், சிறுநீரகத்தில் கல் உருவாகி இருப்பதும்கூட இதற்குக் காரணமாக இருக்கலாம்.

கலவரப்படுத்துவதாக நினைக்க வேண்டாம். கீழ்முதுகு வலியோடு தொடை மற்றும் கால்வலியும் இருந்தால் டாக்டரை அணுகுங்கள். அதுவும் ரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய், புகைப் பழக்கம் கொண்டவர்களுக்கு இது போன்ற வலி ஏற்பட்டால் உடனடியாக அணுக வேண்டும். கால் பகுதியில் ரத்தம் சரியாகப்

பாயாததினால்கூட இந்த வலி ஏற்பட்டிருக்கலாம்.



✱ பார்த்தசாரதி

என் ஒரு மாதக் குழந்தையைத் தூக்கினாலே அதன் தலை இலேசாக ஆடுகிறது. ஏதாவது ஆரோக்கியக் குறைவோ என்று கவலையாக இருக்கிறது.

- ரேவதி, கீரனூர்

குழந்தைநல நிபுணர் டாக்டர் நிகிலா ஷர்மா :

குழந்தைக்குத் தலை கனம் என்றால் கோபிக்காமல் நம்ப வேண்டும். அதாவது பிறந்து சில மாதங்கள் ஆகும்வரை குழந்தையின் உடலிலேயே கனமான பகுதி அதன் தலைதான். ஆனால், சோதனையாக அந்தத் தலையைத் தாங்கிப் பிடிக்கவேண்டிய அதன் கழுத்து மற்றும் முதுகுத் தசைகள் மிகப் பலவீனமாக இருக்கின்றன. அதனால்தான் கழுத்துப் பகுதியைப் பிடித்துக்கொள்ளாமல் குழந்தையைத் தூக்கினால், அதன் தலை இலேசாக ஆடிக்கொண்டே இருக்கிறது.

மூன்றிலிருந்து ஐந்து மாதத்துக்குள் குழந்தைக்குத் தலை நின்றுவிடுகிறது. அதாவது, அதன் கழுத்து மற்றும் முதுகுத் தசைகள் வலுவடைந்துவிடுகின்றன. அதற்குப் பிறகு யார் வேண்டுமானாலும் குழந்தையைத் தூக்கலாம்.

சுமார் மூன்று மாதமாகும்போது குழந்தை முதல்முறை தானாகவே குப்புறப்படுத்துக்கொள்ள வாய்ப்பு உண்டு. குப்புறப் படுத்துக்கொள்ளும் திறமை வந்துவிட்டது என்பதற்கு மட்டுமல்ல, தலை நின்றுவிட்டது என்பதற்கான அத்தாட்சியும் இதுதான்.

- ஜி.எஸ்.எஸ்.

சிறுநீரகத்தில் கல் உருவானால்கூட முதுகு வலி உண்டாகலாம்!





நடந்துமுடிந்த டெஸ்ட் மேட்ச் மூலமாக சேப்பாக்கத்தின் ஸ்போர்ட்டிங் விக்கெட், பெஸ்ட் விக்கெட் என்கிற பெருமை மாறிவிட்டது. உயிரற்ற ஆடுகளம் என்று இம்முறை சென்னை பிட்சுக்கு அழுத்தமாக முத்திரை குத்திவிட்டார்கள்.

ஐந்து நாட்கள் கடந்தும் முடிவு எட்டப்படாத சென்னை டெஸ்ட் மேட்சின் எல்லாப் பழிகளையும் லஜ்ஜையின்றி பிட்சின்மீதும் அதை மழை, புயலுக்கு நடுவே உருவாக்கிய பிட்ச் அமைப்பாளரான பார்த்தசாரதி மீதும் திணிப்பது அபாண்டம். இந்தியாவில் இதைவிட அப்பட்டமான பேட்ஸ்மேன் ஆதாய பிட்சுகளில் ஆட்டங்கள் நடந்துள்ளன. ஆனால், அப்போதெல்லாம் யாராவது ஒருவர், சிறப்பாக பந்துவீசி நிலைமையைச் சரிசெய்துவிடுவார். அந்தப் பாக்கியம் சென்னைக்குக் கிடைக்கவில்லை. டெஸ்ட் மேட்சுகளின் இயல்பு மாறாமல், தென் ஆப்பிரிக்காவின் முதல் இன்னிங்ஸ் ஒன்றரை நாளில் முடிந்தது. அடுத்த நாள் ஷேவாக் ருத்ரதாண்டவம் ஆடியதால் ரன்கள் குவிந்தன. நான்காவது நாளில் பத்து விக்கெட்டுகள் வீழ்ந்தன என்பது ரன் குவிப்பினிடையே மறந்து போகிறது! என்ன, ஸ்டீயின், நிட்னி காட்டிய அர்ப்பணிப்பை இந்திய பந்து வீச்சாளர்கள் காண்பிக்கவில்லை. அந்தக் குறைதான் இப்போது ஆடுகளத்தின் குற்றமாகப் பார்க்கப்படுகிறது.

பிட்ச் சாதகமாக இல்லாதபோதிலும் தெ.ஆ. வீரர்கள் நான்காவது நாள் சுதாரித்ததுபோல இந்திய பந்துவீச்சாளர்கள் தக்க சமயத்தில் சுதாரித்து எழவில்லை. பெர்த் போன்ற வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளத்தில்கூட பேட்ஸ்மேன்கள் செஞ்சுரி அடிப்பது சாத்தியமாகிறபோது, உயிரற்ற ஆடுகளத்தில் ரன்கள் ஸ்டேடியம் கூரையைத் தொடுமளவுக்குக் குவிக்கப்பட்டதில் என்ன ஆச்சர்யம்? ஒன் டே, 50-50, 20-20 என்று தீப்பெட்டி சைஸ் ஆட்டங்களுக்குப் பழகிப் போய், பஸ்ஸுக்கு நிற்கும் நேரத்தில் நாலு விக்கெட் விழும் காட்சியை, பக்கத்து டி.வி ஷோரூமில் பார்த்துப் பழகிவிட்ட ரசிக மனங்களுக்கு பழைய நாள் பாணியில் ஐந்நூறு அறுநூறு என்று ரன்கள் குவிக்கப்படுவது ஏதோ குட்ஸ் வண்டி பயணம்போல் தோன்ற ஆரம்பித்துள்ளது. எதிரணியோ நம் அணியோ - யார் அடித்தாலும் ஷாட்களை ரசிக்கவும் அவற்றின் விஞ்ஞான கலை கலவையைச் சுவைக்கவும் புதுப் பயிற்சி வகுப்புகள் எடுத்தால் தேவலாம்; ஃபீல்டிங் பயிற்சியாளரான ராபின் சிங் வழிநடத்துதலில் இந்தியா எட்டியுள்ள உயரத்தை யாராவது அளந்து சொன்னால் தேவலாம்.

மூன்றாவது நாள் மைதானத்துக்கு வந்தவர்களுக்குப் பெரிய ட்ரீட் கொடுத்தார் ஷேவாக். என்னை ஒரு வருடம் பூட்டியா வைத்தீர்கள் என்று சொல்லாமல் சொல்லின அவரது ஷாட்டுகள். ஒவ்வொரு பந்தையும் அவர் எதிர்கொண்ட விதம் வாழ்க்கைக்கான தத்துவமாகத் தெரிந்தது. ஷேவாக் ருத்ரதாண்டவம் ஆடாமல் போயிருந்தால், ஒரு வேளை இந்தியா தோற்றுப் போகவும் வாய்ப்பு உருவாகியிருக்கும். 20 - 20 கிரிக்கெட் பாதிப்பினால், டெஸ்ட் மேட்சின் ஆயுள் குறைந்துவருகிறது என்கிற கூற்றும் சேப்பாக்கத்தில்





சொல்லிச் சொல்லி அடித்த ஷேவாக்!

தகர்க்கப்பட்டுள்ளது. தினமும், ரசிகர்கள் சாரிசாரியாக வந்து மைதானத்தை முடிந்தவரை நிரப்பினார்கள். உள்ளே முப்பதாயிரம் பேர் என்றால், வெளியே டிக்கெட் கிடைக்காமல் தினமும் ஏமாந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தொட்டது.

பின் குறிப்பு - சென்னை ரசிகர்கள் புள்ளி விவரப்புலிகள் என்பதற்குச் சான்றாக ஒரு சம்பவம் நடந்தது. மூன்றாவது நாளன்று, எதிர்கொள்கிற பந்துகளையெல்லாம் ஷேவாக் விளாசிக் கொண்டிருக்க, டிராவிட் வழக்கம்போல ஒவ்வொரு பந்தையும் டொக்கு வைத்து ரசிகர்களை எப்போதும்போல இப்போதும் இம்சைப்படுத்திக்கொண்டிருந்தார். அவருடைய ஸ்கோர் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. டிராவிட் முப்பது ரன்னில் இருந்தபோது திடீரென சம்பந்தமேயில்லாமல் ரசிகர்கள் ஆர்ப்பரித்து, அமர்க்களப் படுத்தினார்கள். காரணம், அப்போது நூறாவது பந்தை எதிர்கொண்டிருந்தார் டிராவிட்! நக்கல் நாயகர்கள் நம் சென்னை ரசிகர்கள்! ○



ச.ந.கண்ணன்

பாடம் எடுக்கும் டீச்சர்ஸ் முதல், கூடப் படிக்கும் ஸ்டூடண்ட்ஸ் வரை அத்தனை பேருக்கும் பட்டப் பெயர் வைத்து பட்டையைக் கிளப்புவதில் காலேஜ் ஸ்டூடண்ட்ஸுக்கு நிகர் அவர்கள்தான். தமிழ்ப் புத்தாண்டுக்காக, 'தமிழில் பிடித்த வார்த்தை எது?' என்று மணச்சநல்லூர் சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி தமிழிலக்கிய மாணவிகளிடம் வார்த்தை விளையாட்டு விளையாண்டோம்...



மனசுங்கிற தேரினை கொஞ்சம் ஓட்டிப்பாருங்க. கண்கள் வழியா பயணம் பண்றப்போ உங்ககூடவே ஒன்னு வரும் பாருங்க. **'நினைவு'!** அதுதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

- **த.நித்யா**



எனக்குப் பிடிச்ச வார்த்தை இளையதலைமுறை எல்லோருக்கும் பிடிக்கும். அத கவிதை மாதிரியே சொல்றேன்.

புரிந்துகொள்ளும் வரை
புதையல்
புரிந்துகொண்ட பின் விடியல்
காத்திருக்கும் மனம் சுகமானது
வாழ்த்தும் மனம் சுமையானது
நினைவுகள் மட்டும் பசுமையானது
அதுதான் **'காதல்'**!

- **கலையரசி**



எதுக்கும் நேரம் இல்லைன்னு சொல்றது நாகரிகமா மாறிக்கிட்டு வருது. ஆனா, பறவைகளின் பாட்டு, மலைக்க வைக்கும் மலைக் காட்சி, பசுமைப் பரப்புகள். இதையெல்லாம் ரசிக்க, ருசிக்க மனசு ரொம்ப லேசாகும். எனக்குப் பிடிச்சது **இயற்கை**தான்.

- **து.நாகவள்ளி**



பொய் சொல்லாமப் பிழைக்க முடியாதுன்னு சொல்றாங்க. ஆனா, எனக்குப் பிடித்த சொல் **'வாய்மை'**தான். சாதனையின் பின்புலம் இதுதான். என் வாய் 'மெய்' பேசும்.

- **மு.ஜெயந்தி**



★ எஸ். ரோசாரி

மலரின் மணம் மனிதனின் குணம்;
மலரின் மென்மை பெண்மையின் தன்மை;
மலரின் அழகு மௌனத்தின் அழகு. ஆமாங்க.
எனக்குப் பிடித்த சொல் 'மலர்'.



* க.பத்மாவதி

எனக்குப் பிடித்த தோழியும் பிடித்த சொல்லும் 'கொண்மூ'. கொண்மூ என்றால் மேகம். சாதனையிலும், வேதனையிலும் சோதனையிலும் வான் மேகம் பார்க்கும்போது என்னை நானே மறந்திடுவேன்.

வார்த்தையாடு... விளையாடு..!

சொன்னா ஆச்சர்யப் படுவீங்க. எனக்குப் பிடிச்ச சொல் **'விதி'**. என்னைப் பொறுத்தவரையில விதிங் கிறது, நம்மால நமக்கு ஏற் படும் துன்பம். இந்தத் தத்து வத்தை உணர்த்தற விதியை விரும்பறதுல என்ன தப்பு?



- சி.கல்பனா

அனுபவம் பக்குவப் படுத்தும்; பாதையும் காட்டும். இன்னும் சரியாச் சொல்ல ணும்ன்னா, பரீட்சையை வைச்சிட்டு பாடத்தைக் கொடுக்கும். அதனாலதான் **'அனுபவம்'** என்ற சொல் எனக்குப் பிடிக்கும்.



- ச. கண்ணம்மாள்

மூன்றெழுத்து மந்திரம்; குடும்பத்தை இணைக்கிற பாலம்; பகை வனையும் தோழனாக்கும் சக்தி... அதுதான் **'அன்பு'**. சிம்பு பாணியில சொல்ல ணும்னா எனக்குப் பிடிக் காது வம்பு; என்கிட்ட நிறைய இருக்கு அன்பு.



- ப.இராஜசுலோச்சனா

இதுக்கு வசமாகாத இதயம் ஒண்ணு இருந்துச் சுன்னா எனக்குச் சொல் லுங்க. இயல்பானவனை மட்டுமல்ல இறைவனை யும் வசப்படுத்தும் வல் லமை, இசைக்கு மட்டுமே உண்டு. எனவே எனக்கு இசை பிடிக்கும்.



- இரா.பரிம

- தொகுப்பு: எம்.திரவியமுருகன்

31. பைரவரும் பூபதியும்

பொன்னன் சிறிதும் சத்தம் செய்யாமல் மரங்களின் இருண்ட நிழலிலேயே நடந்து சாலையருகில் சென்று ஒரு மரத்தின் மறைவில் நின்றான்.

"சித்திரகுப்தா, எங்கே மகாப் பிரபு?" என்று மாரப்பன் கேட்டது பொன்னன் காதிலே விழுந்தது. பிறகு, பின்வரும் சம்பாஷணை நடந்தது.

"அய்யனார் கோயிலில் இருக்கிறார். என்னை இங்கே இருந்து உங்களுக்கு வழி காட்டி அழைத்து வரும்படி சொன்னார்... ஆமாம், அவன் எங்கே?"

"எவன்?"

பார்த்திபன் கனவு



"அவன்தான். பல பெயர் கொண்டவன்... இரத்தின வியாபாரி... தேவசேனன்... உம்முடைய தாயாதி... ஹிஹிஹி" என்று குள்ளன் கீச்சுக் குரலில் சிரித்தான்.

"அவனா? ஹா ஹா ஹா...!" என்று மாரப்பனும் பெருங்குரலில் சிரித்தான்.

அந்த நள்ளிரவில் அவர்கள் இருவரும் சிரித்த சிரிப்பின் ஒலி பயங்கரமாகத் தொனித்தது. மரங்களில் தூங்கிக்கொண்டிருந்த பட்சி ஜாதிகளை எழுப்பிவிட்டது. சில பறவைகள் சிறகுகளை அடித்துக்கொண்டன. வேறு சில பறவைகள் தூக்கக் கலக்கத்தில் பீதியடைந்து தீனக் குரலில் சப்தித்தன.

"அவன் பத்திரமாகயிருக்கிறான். நீ கவலைப்படாதே. அடே! அன்றைக்கு அந்த இரத்தின வியாபாரிக்கு வழி காட்டிக்கொண்டு போனாயே, அந்த மாதிரிதான் எனக்கும் வழி காட்டுவாயோ?" என்று கூறி மாரப்பன் மறுபடியும் உரத்த

குரலில் சிரித்தான்.

சித்திரகுப்தன் கூறிய மறுமொழி பொன்னன் காதில் விழவில்லை. மீண்டும் மாரப்பன், "ஓஹோஹோ! எனக்கு வழிகாட்டி அழைத்து வரச் சொன்னாரா? எங்கே? அழைத்துப் போ, பார்க்கலாம்" என்று சொல்லி, தன் கையிலிருந்த சவுக்கைச் சடீரென்று ஒரு சொடுக்குச் சொடுக்கினான். சவுக்கின் நுனி சித்திரகுப்தன் மீது சுளீரென்று பட்டது. சவுக்கு சொடுக்குகிற சத்தத்தைக் கேட்டதும் குதிரை பிய்த்துக் கொண்டு பாய்ந்து சென்றது.

குள்ளன் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே பின்னால் விரைவாகச் சென்றான். அவன் இவ்வளவு வேகமாக நடக்க முடியுமென்பதைக் கண்ட பொன்னனுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவனைச் சற்றுத் தூரத்தில் பின்தொடர்ந்து ஓட்டமும் நடையுமாக பொன்னனும் போனான். ஒரு நாழிகை தூரம் சாலையோடு கிழக்கே போன பிறகு, சாலையில் குதிரை நிற்பதும் பக்கத்தில் மாரப்பன் நிற்பதும் தெரிந்தது. சித்திரகுப்தன் மாரப்பனைப் பார்த்து, "ஏன் நிற்கவேண்டும்? போவதுதானே?" என்று கேட்க, "ஏண்டா, காட்டுப் பூனை! இருட்டு ராஜாவாகிய நீ வழிகாட்டிதான் இனிமேல் போக வேண்டும்" என்றான் மாரப்பன்.

"ஆகா! வழி காட்டுகிறேன். ஆனால், காட்டுப் பூனையிடம் நீ சற்று ஜாக்கிரதையாக இரு. விழுந்து புரண்டினாலும் புரண்டிவிடும்!" என்று சொல்லிவிட்டு, குள்ளன் சாலைக்கு வலது புறத்தில் புதர்களும் கொடிகளும் மண்டிக் கிடந்த காட்டில் இறங்கிப் போகலானான்.

பொன்னனுக்கு அவர்கள் எங்கே போகிறார்கள் என்பது இப்போது சந்தேகமறத் தெரிந்துவிட்டது. பாழடைந்த அய்யனார் கோயிலுக்குத்தான் அவர்கள் போகிறார்கள். செடி, கொடிகளில் உராய்வதினால் சத்தம் கேட்கக் கூடுமாதலால், பொன்னன் சற்றுப் பின்னால் தங்கி அவர்கள் போய் கால் நாழிகைக்குப் பிறகு தானும் அவ்வழியே சென்றான்.


நள்ளிரவில் அந்தக் காட்டு வழியே போகும்போது பொன்னனுக்கு மனத்தில் திகிலாய்த்தானிருந்தது. திகிலை அதிகப்படுத்துவதற்கு ஆந்தைகள் உறுமும் குரலும், நரிகள் ஊளையிடும் குரலும் கேட்டன. மரம், செடிகள் அசைந்தாடும் போதும், தரையில் கிடந்த இலைச் சருகுகளின் சரசரவென்னும் சத்தம் கேட்கும் போதும் பொன்னனுக்கு என்னவோ செய்தது. ஆனால், ஏதோ ஒரு முக்கியமான சம்பவம் நடக்கப்போகிறது - முக்கியமான இரகசியத்தைத் தெரிந்துகொள்ளப் போகிறோம் - என்ற ஆவலினால் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, அய்யனார் கோயில் உள்ள திசையை நோக்கிச் சென்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் தூரத்தில் ஒரு தீவர்த்தியின் வெளிச்சம் தெரிந்தது. அது அய்யனார் கோயில்தான். கிட்ட நெருங்க நெருங்க கோயிலுக்கு முன்னால் வைத்திருந்த பிரமாண்டமான வீரர்களின் சிலைகளும் மண் யானைகளும் குதிரைகளும் தீவர்த்தி வெளிச்சத்தில், கோரமாகக் காட்சியளித்தன. இந்த ஏகாந்தக் காட்டுப் பிரதேசத்தில் உள்ள பாழடைந்த கோயிலுக்

அமரர் கல்கி

குப் பட்டப் பகலில் வந்தபோதே பொன்னனுக்குத் திகிலாயிருந்தது. இப்போது கேட்க வேண்டியதில்லை. கோயிலின் வாசற்படிக்கருகில் பொன்னன் கண்ட காட்சி, அவனுடைய திகிலை நூறு மடங்கு அதிகமாக்கிற்று. அங்கே, புராணங்களில் வர்ணித்திருப்பது போன்ற கோர ராட்சஸ ரூபமுடைய ஒருவன் கையில் தீவர்த்தியுடன் நின்று கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் நெடிய கம்பீர உருவமும் வஜ்ரசரீரமும் கொண்ட மகா கபால பைரவர் நின்றுகொண்டிருந்தார். தீவர்த்தியின் சிவந்த ஒளியில் அவருடைய நெற்றி





யில் அப்பியிருந்த சந்தனமும் குங்குமமும் இரத்தம் மாதிரி சிவந்து காட்டின. அவருடைய கழுத்தில் தொங்கிய கபால மாலை பொன்னனுக்குக் குலை நடுக்கம் உண்டாக்கிற்று. அவன் நடுங்கிக்கொண்டே கோயிலுக்குப் பின்புறமாகச் சென்று கோயில் வாசற் படிக்கு அருகில் இருந்த பெரிய வேப்பமரத்துக்குப் பின்னால் மறைந்துகொண்டு நின்றான். அதே சமயத்தில், சித்திரகுப்தனும் மாரப்பனும் மகா கபால பைரவரின் முன்னால் வந்து நின்றார்கள்.



''மகாப் பிரபோ!'' என்று மாரப்பன் பைரவருக்கு நமஸ்கரித்தான்.

''சேனாபதி! மாதாவின் ஆக்ஞையை நிறைவேற்றினாயா? பலி எங்கே?'' என்று கபால பைரவரின் பேய்க் குரல் கேட்டது.

அந்தக் குரல் - மகேந்திர மண்டபத்தின் வாசலில் அன்றிரவு கேட்ட குரல் - ஏற்கெனவே பயப் பிராந்தியடைந்திருந்த பொன்னனுடைய உடம்பில் மயிர்க்கூச்சு உண்டாக் கிற்று. அடித் தொண்டையிலிருந்து - அதற் கும் கீழே இருதயப் பிரதேசத்திலிருந்து - வருவதுபோல் அந்தக் குரல் தொனித் தது. எனினும், உரத்துப் பேசிய மாரப்பனு டைய குரலைக் காட்டிலும் தெளிவாக அக்குரல் பொன்னனுடைய செவிகளில் விழுந்தது.

கபால பைரவரின் கேள்விக்கு மாரப் பன், ''மகாப் பிரபோ! பலி பத்திரமாயிருக் கிறது'' என்றான்.

''எங்கே? ஏன் இவ்விடம் கொண்டு வரவில்லை? காளி மாதாவின் கட்டளையை உதாசீனம் செய்கிறாயா, சேனாபதி!''

''இல்லை, இல்லை. மகாப் பிரபோ! இன்று சாயங்காலம்தான் இளவரசனைக் கைப்பற்ற முடிந்தது. உடனே இவ்விடம் கொண்டுவருவதில் பல அபாயங்கள் இருக்கின்றன பிரபோ! அந்த ஓடக்காரன் இங்கேதான் இருக்கிறான்...''

இதைக் கேட்டதும் மரத்தின் பின்னால் மறைந்து நின்ற பொன்னனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவனுடைய அடிவயிறு மேலே நெஞ்சுக்கு வந்துவிட்டது போலிருந்தது. மாரப்ப பூபதியின் அடுத்த வார்த்தையினால் அவனுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது.

''அவனைக் கைப்பற்ற முடியவில்லை. சக்கரவர்த்தியின் மகள் குறுக்கே நின்று மறித்தாள். மகாப்பிரபோ! குந்தவி தேவியும் இன்னும் இங்கேதான் இருக்கிறாள். இளவரசனைத் தப்புவிப்பதில் முனைந்திருக்கிறாள். ஆகையால், நாம் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் காரியம் கெட்டுப் போய் விடும்.''

மகா கபால பைரவர் இப்போது ஒரு சிரிப்புச் சிரித்தார். அந்த வேளையில் அந்தப் பயங்கரத் தொனியானது நாலா பக்கமும் பரவி எதிரொலி செய்தபோது, பல நூறு பேய்கள் ஏக காலத்தில் சிரிப்பது போலிருந்தது.

''சேனாபதி! நீதானா பேசுகிறாய்? காளி மாதாவின் கட்டளையை நிறைவேற்றப் பயப்படுகிறாயா? அதுவும் ஒரு பெண் பிள்ளைக்கும் ஓர் ஓடக்காரனுக்கும் பயந்தா?''

''இல்லை, சுவாமி, இல்லை! நான் பயப்படுவதெல்லாம் காளி மாதாவின் கைங்கரியத்துக்குப் பங்கம் வந்துவிடுமோ என்பதற்குத்தான். மகாப் பிரபோ! தாங்கள் எனக்கு இட்ட கட்டளையை எப்படியும் நிறைவேற்றுவேன். அமாவாசையன்று இரவுக்குள் பலியைக் கொண்டுவந்து சேர்ப்பேன்.''

''சேர்க்காவிட்டால்...?'' என்றது கபால பைரவரின் கடூரமான குரல்.

''என்னையே மாதாவுக்குப் பலியாக அர்ப்பணம் செய்வேன்.''

''வேண்டாம், பூபதி! வேண்டாம். உன்னால் மாதாவுக்கு இன்னும் எவ்வளவோ காரியங்கள் ஆகவேண்டும். இந்தச் செழிப்பான தமிழகத்தில் மகா காளியின் சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது நீதான் பிரதம தளகர்த்தனாயிருக்க வேண்டும்.''

''மகாப்பிரபுவின் கட்டளையையும், காளிமாதாவின் ஆணையையும் எப்போதும் சிரமேற்கொள்ளக் காத்திருக்கிறேன்.''

''மாரப்பா! மாதாவுக்கு உன்பேரில் பூரண கிருபை இருக்கிறது. மேலும் மேலும் உனக்குப் பெரிய பதவிகளை



''என்ன... அந்தப்புரத்துல அரசரை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டமா... ஏன்?!''

''அடிஷனலா அந்தப்புரம் அமைக்க, அரசர் போட்டிருந்த மெகா திட்டம், லீக் ஆயிடுச்சாம்!''

- பி.ஜி.பி.இசக்கி

அளிக்கப்போகிறாள்... இருக்கட்டும்; இப்போது எந்த இடத்தில் பலியைக் கொண்டு வந்து சேர்ப்பாய்?''

''அமாவாசையன்று முன் ஜாமத்தில் பராந்தகபுரத்தைத் தாண்டி மகேந்திர மண்டபத்துக்கு அருகில் கொண்டுவந்து சேர்ப்பேன். அங்கே சாலை வழியில் தங்களுடைய ஆட்களை அனுப்பி ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

''ஏன் அந்த வேலையை எனக்குக் கொடுக்கிறாய்?''

''மகாப் பிரபோ! இங்கே உள்ள ஆட்களிடம் எனக்கு முழு நம்பிக்கை இல்லை. சக்கரவர்த்தியின் கட்டளைப் பிரகாரம் இளவரசரை காஞ்சிக்கு அனுப்புவதாகச் சொல்லித்தான் அனுப்பப் போகிறேன். அவர்களைத் தொடர்ந்து சற்றுப் பின்னால் நான் வருவேன். தங்களுடைய ஆட்கள் வந்து வழிமறித்து இளவரசரைக் கொண்டு போக வேண்டும். ஆனால், நான் அனுப்பும் ஆட்கள் அவ்வளவு அசகாய சூரர்களாயிருக்க மாட்டார்கள். தங்களுடைய திருநாமத்தைச் சொன்னால், உடனே கத்திகளைக் கீழே போட்டுவிட்டு நமஸ்கரிப்பார்கள்.''

''அப்படியே ஆகட்டும், சேனாபதி! ஆனால், ஜாக்கிரதை! காளிமாதா அடுத்த அமாவாசை இரவில் அவசியம் பலியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள்!''

''இன்னொரு விஷயம் தெரிவிக்க வேணும், மகாப் பிரபோ!''

''சீக்கிரம் சொல்; பொழுது விடிவதற்குள் நான் ஆற்றைத் தாண்ட வேண்டும்.''

''இந்த ஒடக்கார பொன்னனைச் சில நாட்களாகக் காணவில்லை. அவன் மகாராணியைத் தேடிக்கொண்டிருக்கிறான் என்று தெரிந்தது. அவனைப் பற்றி அறிய நான் ஆள் விட்டிருந்தேன். நேற்றுத்தான் அவனைப் பற்றித் தகவல் கிடைத்தது. பொன்னனும் இன்னொரு மனிதனும் குதிரைமேல் காட்டாற்றோடு கொல்லி மலைப் பக்கம் போனதாக என்னுடைய ஒற்றன் வந்து சொன்னான்...''

''ஒடக்காரன் இங்கே இருக்கிறான் என்றாயே?''

''ஆமாம்; இன்றைக்குத்தான் இங்கே வந்து சேர்ந்தான்.''

''அவ்வளவுதானே?''

''பொன்னனுடன் போன இன்னொரு மனிதன் யார் தெரியுமா, பிரபோ?''

''யார்?''

''தங்களுக்கும் எனக்கும் ஜன்ம விரோதி தான்.''

''சென்ற முறை போருக்குச்சென்றபோது நிகழ்ந்தவை இன்னும் என் நெஞ்சை விட்டு அகலவே இல்லை!''

''சரியாகச் சொல்லுங்கள் மன்னா! நெஞ்சைவிட்டா? முதுகைவிட்டா!?''

- வீ.விஷ்ணுகுமார்





"என்ன? யார்? சீக்கிரம் சொல்!"

"பொய் ஜடாமுடி தரித்த அந்த போலி சிவனடியார் தான்."

இதைக் கேட்டதும் மகா கபால பைரவனின் முகத்தில் ஏற்பட்ட பயங்கரமான மாறுதலைப் பார்த்து பொன்னன் திகைத்துப் போனான். ஏற்கெனவே கோரமாயிருந்த அந்த முகத்தில் இப்போது அளவில்லாத குரோதமும் பயமும் பகைமையும் தோன்றி விகாரப்படுத்தின. அதைப் பார்த்து "ஐயோ!" என்று பொன்னன் அலறிய குரல், நல்ல வேளையாகப் பயத்தின் மிகுதியால் அவன் தொண்டையிலேயே நின்றுவிட்டது.

கபால பைரவரும் சித்திரகுப்தனும் மாரப்ப பூபதியும் அங்கிருந்து கிளம்பிச் சென்றார்கள். தீவர்த்தி பிடித்துக்கொண்டு நின்ற ராட்சதன், அவர்களுக்கெல்லாம் முன்னால் போனான். சற்று நேரத்துக்கெல்லாம் தீவர்த்தி வெளிச்சம் மறைந்தது. கீழ்வானத்திலே இளம்பிறைச் சந்திரன் உதயமாயிற்று.

அவர்கள் சென்ற சிறிது நேரத்துக்குப் பிறகுதான் பொன்னன் அங்கிருந்து கிளம்பினான். அவனுடைய உடம்பு மிகவும் தளர்ச்சியடைந்திருந்தாலும், மனத்தில் ஒருவித உற்சாகம் ஏற்பட்டிருந்தது.

இளவரசரை காஞ்சிக்கு அனுப்புவது போல் பாசாங்கு செய்து, மகா கபால பைரவரின் நரபலிக்கு அவரை அனுப்ப, மாரப்பன் எண்ணியிருக்கிறான்.

விக்கிரம மகாராஜாவை இந்த நரபலிக்காரர்களிடமிருந்து தப்புவிக்கும் வழி அவனுடைய மனத்தில் உதயமாகியிருந்தது. மாரப்பனுடைய தந்திரம் இன்னதென்பது அவனுக்கு இப்போது ஒருவாறு புலப்பட்டது. இளவரசரை காஞ்சிக்கு அனுப்புவதுபோல் பாசாங்கு செய்து, மகா கபால பைரவரின் நரபலிக்கு அவரை அனுப்ப மாரப்பன் எண்ணியிருக்கிறான். ஆனால், தன் பேரில் குற்றம் ஏற்படாதபடி இந்தக் காரியத்தைத் தந்திரமாகச் செய்ய உத்தேசித்திருக்கிறான். அவனுடைய தந்திரத்துக்கு மாற்றுத் தந்திரம் செய்து விக்கிரம மகாராஜாவை விடுவிக்க வேண்டும். விடுவித்து, நேரே மாமல்லபுரம் துறைமுகத்துக்கு அழைத்துப் போக வேண்டும். குந்தவி தேவியின் உதவியைக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும்... இவ்விதமெல்லாம் சிந்தித்துக்கொண்டு பலபலவென்று பொழுது விடியும் தருணத்தில், பொன்னன் தோணித் துறையை அடைந்தான்.

(தொடரும்)

"வெளியில் இருக்கிற
ஆகாசம்
ஜீவனின் இருதயத்திலும்
இருக்கிறது.
யோகிகள்
சமாதி நிலையில்
இந்த
ஹிருதயாகாசத்தை
அனுபவிக்கிறார்கள்!"



சப்தம்

எத்தனையோ கிரமத்துடன் இயங்கி வரும் இந்தப் பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது, இதையெல்லாம் செய்கிற பேரறிவு ஒன்று இருக்கவேண்டும் என்று தெரிகிறது. அந்தப் பரமாத்மாவிடமிருந்துதான் நாம் பார்க்கிற சகல வஸ்துக்களும் நாம் கேட்கிற இத்தனை சப்தங்களும் உண்டாகி யிருக்கின்றன. முதலில் சப்தப் பிரபஞ்சம் ஆகாசத்தில் உண்டான பின்தான், நாம் கண்ணால் பார்க்கிற பிரபஞ்சம் உண்டாயிற்று. ஆகாசத்தில் இந்தச் சப்தங்கள் அனைத்தும் இருக்கின்றன. வெளிப் பிரபஞ்சத்திலிருப்பதெல்லாம் மனிதனின் உடலில் இருக் கின்றன. வெளியிலிருக்கிற ஆகாசம் ஜீவனின் இருதயத்திலும் இருக்கிறது. யோகிகள், சமாதி நிலையில் இந்த ஹிருதயாகாசத்தை அனுபவிக்கிறார்கள். அப்போது உள், வெளி என்ற பேதம் நீங்கி, சகலமும் ஒன்றாகிவிடுகின்றன. இதய ஆகாசமும் வெளி ஆகாசமும் ஒன்றாகிவிடுகின்றன. இந்த நிலையில் யோகிகளுக்கு ஆகாசத்திலுள்ள சப்தங்களைக் கிரகித்து லோகத்துக்குத் தர முடிகிறது. லோக க்ஷேமார்த்தமான இந்த சப்தக் கோவைகளே வேத மந்திரங்களாகும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அருள்வாக்கு



இம்சை அரசன் மூலம் நம்மை 'கிச்சு கிச்சு' சரித்திரத்துக்கு அழைத்துச் சென்ற இயக்குநர் சிம்புதேவன், அடுத்து 'அறை எண் 305ல் கடவுள்' இருக்குமிடத்துக்கு அழைத்துச் செல்லப் போகிறார். இது பரீட்சை நேரம்! படம் குறித்த தகவல்களை அறிய, வினாத்தாள் பாணியில் ஒன்றைத் தயாரித்து அவரிடம் கொடுத்தோம். அதற்கு அவர் அளித்த விடைகள் இங்கே.

I. சரியான விடையை டிக் அடிக்கவும்:

1. 'அறை எண் 305ல் கடவுள்' தரிசனம் தரும் நாள் (ரிலீஸ்) எப்போது?

அ) ஏப்ரல் 25

✓ஆ) ஏப்ரல் 11

2. இம்சை அரசன் 23, அறை எண் 305. இப்படி பெயரோடு நம்பரையும் வைக்கும் காரணம், வழக்கமான கோடம் பாக்க செண்டிமெண்ட்தானே?

✓அ) சே! சே! எதேச்சையா அமைந்தது.

ஆ) ஹி! ஹி! ஆமாங்க!

3) 'நடிகர் பிரகாஷ்ராஜ் சரியான நேரத்துக்குப் படப்பிடிப்புக்கு வருவதில்லை' என்றொரு குற்றச்சாட்டு உலவுகிறதே... அது குறித்து?

அ) ஐயோ, ஆமாங்க!

✓ஆ) என் படத்துக்கு சரியாகவே வந்தார்.

4) கதாநாயகன் சந்தானம், 'லொள்ளு



கடவுள் பாதி காமெடி மீதி!



ஆரணி யுவராஜ்

சபா' பார்ட்டி. காமெடி வசனங்களில் அவரது சொந்தச் சரக்கும் சேர்ந்துள்ளதா?

அ) கிடையாது! கொடுப்பதைப் பேசுவதோடு சரி.

✓ஆ) அதுவா? கொஞ்சம் கொஞ்சம் இருக்கு.

5) படத்தில் 'குத்துப்பாட்டு' அல்லது 'ரீ மிக்ஸ்' அயிட்டம் ஏதாவது?

✓அ) அதெல்லாம் எதிர்பார்த்து வராதீங்க.

ஆ) போட்டு தூள் கிளப்பிட்டோம்ல.

II. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு ஐந்து வரிகள் மிகாமல் விடையளிக்கவும் :

1. படத்தின் கதை?

வேலை தேடும் இரண்டு இளைஞர்களின் யதார்த்த வாழ்க்கையில் எதிர்பாராத, நம்பமுடியாத சம்பவம் நிகழ்ந்தால் எப்படி இருக்கும் என்பதை காமெடி கலந்து சொல்லியிருக்கிறோம். புலிகேசியும் அவரது மீசையும் எப்படி குழந்தைகளைக் கவர்ந்ததோ, அதுபோல இந்தப் படமும் அவர்களைக் கவரும். உங்கள் பிள்ளைகளின் விடுமுறை டைரியில் இந்தப் படத்துக்கு தாராளமாக கால்ஷீட் ஒதுக்கலாம்.

2. சந்தானம் + கஞ்சா கருப்பு காம்பினேஷன் எப்படி?

மொக்கை (சந்தானம்), ராசு (கஞ்சா) வாகவே மாறி விட்டார்கள். காமெடி படம்தானே என்ற அலட்சியமில்லாமல் அர்ப்பணிப்புடன் நடித்தார்கள். பிரகாஷ்ராஜும் கடவுள் பாதியாவும் காமெடி மீதியாவும் கலக்கியுள்ளார்.

3. சரித்திர பாணி படமான இம்சை அரசனிலேயே இன்றைய நாட்டு நடப்பு பற்றிய நையாண்டி நிறைய இருக்கும். இதில் எப்படி?

கம்ப்யூட்டர் துறையில் வேலை செய்கிற இளைஞர்கள் பற்றிய பார்வை படத்தில் வருகிறது. பொதுவாக, எனது படத்தில் வருகிற கேரக்டர்கள், அவர்கள் பேசுகிற வசனங்கள் சீரியஸாக இருக்கும். பார்க்கிற ரசிகர்களுக்குச் சிரிப்பு வரும். இதிலும் அப்படித்தான். நீங்கள் எதிர்பார்ப்பது இருக்கும்.

4. படத்தில் நாயகிகளின் பங்கு என்ன? வழக்கம்போல் ஊறுகாய்தானா?

பெரிய விருந்தில் ஊறுகாய் என்பது ஓரத்தில் ஒதுக்கப்பட்டதாக, தேவையற்றதாக இருக்கலாம். ஆனால், பழைய சாதத்துக்கு அதுதான் அருமையான காம்பினேஷன். இந்தப் படத்தில் வருகிற மதுமிதா, ஜோதிர்மயி இருவரும் அப்படித்தான். தயிர் சாதத்துக்கு ஏற்ற ஊறுகாய்!

5. கடவுள் யார்?

அறிவியலில் சில விஷயங்களை $2/\pi$ என்று குறிப்பிடுவார்கள். இதன் பொருள் முடிவுள்ளது என்றும் சொல்ல முடியாது; முடிவற்றது என்றும் சொல்ல முடியாது. கடவுளும் அப்படித்தான். ஆன்மிகத்தாலும் சரி, அறிவியலாலும் சரி, நிரூபிக்க முடியாதவர். ஆகவே கடவுள் = $2/\pi$ என்று சொல்லலாம்!



* சிம்புதேவன்








6.4.2008 முதல் 12.4.2008 வரை

மேஷம்: அதிர்ஷ்டம் நிறைந்த வாரம். வருமானம் பெருகும். கல்வியில் மேன்மை அடைவீர்கள். வெளிநாடு செல்ல வாய்ப்பு வரும். இல்லற வாழ்வு இனிமையாக இருக்கும். உடன் பிறந்தவர்களால் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் மாறுதல் உண்டாகும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

ரிஷபம்: இடமாற்றம் உண்டாகும். கல்வியில் அக்கறை தேவை. வியாபாரத்தில் சற்று மந்தமான சூழ்நிலை நிலவும். குழந்தைகளால் மன உளைச்சல் உண்டாகும். திருமண முயற்சி பலிதமாகும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்துவர கஷ்டங்கள் விலகும்.

மிதுனம்: உல்லாசமான வாரம். வெளிநாடு செல்ல அழைப்பு வந்து சேரும். சுபநிகழ்ச்சி கைகூடும். வேலையில் உயர்வு ஏற்படும். வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைக்கும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். பரிகாரம் தேவையில்லை.

கடகம்: கல்வியில் கவனம் தேவை. இல்லற வாழ்வில் அனுசரணை தேவை. மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் கவனமுடன் செயல்படுவது நல்லது. உத்தியோகத்தில் பளு அதிகரிக்கும். ராகு / கேது / சனி / குரு வழிபட்டு வருவது சங்கடங்களைப் போக்கும்.

சிம்மம்: மனக்குழப்பம் தீரும் வாரம். திருமணக் காரியம் நிறைவேறும். பண வருவாய் பெருகும். கடல் கடந்து செல்லும் வாய்ப்பு வந்து சேரும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் கிட்டும். வழக்கு வெற்றி அளிக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். கடன் சுமை குறையும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கன்னி: திடீர்ப் பிரயாணம் வந்து சேரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். செலவுகள் கட்டுக்கடங்காது இருக்கும். மனச் சலனம் தீரும். நீண்ட காலம் முடிவு பெறாத பிரச்னை முடிவுக்கு வரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். குரு / சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

துலாம்: கனவு நனவாகும் வாரம். பணக் கஷ்டம் இருக்காது. இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். பூர்வீக சொத்து பாகப் பிரிவினை ஆகும். புதிய வீடு / மனை வாங்க உகந்த நேரம். உத்தியோகத்தில் நல்ல மாறுதல் ஏற்படும். வழக்கு வெற்றிப் பாதையில் செல்லும். ராகு / கேது / குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

விருச்சிகம்: சுபகாரியங்கள் கைகூடும் வாரம். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். எதிரிகள் விலகிப் போவார்கள். வீடு / மனை வாங்க நல்ல நேரம். கல்வி வளம் மேலோங்கும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். கடன் சுமை தீரும். ஆபரணப் பொருட்கள் சேரும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

தனுசு: பணம் குவியும் வாரம். வெளிநாடு அழைப்பு வந்து சேரும். சுப

நடக்குமென்பார்;



நிகழ்ச்சி கைகூடும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். வேலையில் நற்பெயர் உண்டாகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

மகரம்: இந்த வாரம் முழுவதும் எடுக்கும் முயற்சி, பேசும் பேச்சு, செய்யும் செயல் எல்லாவற்றிலும் மிகவும் கவன முடன் இருக்கவும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கும்பம் : ஜாலியான வாரம். பணக்கஷ்டம் விலகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். வீடு / மனை வாங்க உகந்த நேரம். நண்பர், உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். வாக்குவாதம் தவிர்க்கவும். ஆடை ஆபரணங்கள் சேரும். தெய்வ பிரார்த்தனை நிறைவேறும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

மீனம் : உல்லாசமான வாரம். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தடை விலகித் திருமணம் கைகூடும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வழக்கு வெற்றி ஏற்படும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.



நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்



“குட்டி சீசாவில்...

காசி - கன்னியாகுமரி ரோட்டில், திருநெல்வேலிக்கும் கோவில்பட்டிக்கும் நடுவில் இருக்கிற கிராமம் இடைசெவல். இந்தக் கிராமத்தோடு பின்னிப் பிணைந்த எழுத்தாளர் கி.ரா.வின் வாழ்க்கையை 'இடைசெவல்' என்கிற ஆவணப் படமாக எடுத்திருக்கிறார் புதுவை இள வேனில். இந்தப் படத் துக்காகவே கிட்டத் தட்ட பதி னெட்டு வருடங்கள் கழித்து, இடை செவலுக்குப் போய்த் திரும்பியிருக்கிறார் கி.ரா.



❋ பந்தலோ பந்தியோ இல்லாமல் திருமணம்...

கி.ரா.வின் தந்தைக்கு ஆண் குழந்தை இல்லாத காரணத்தால், கி.ரா.வின் சித்தி யையே மறுமணம் செய்துகொள்ள, அதற் குப் பிறகு பிறந்திருக்கிறார் கி.ரா. அவரு டைய திருமணம்கூட பந்தலோ, பந்தியோ இல்லாமல் மிக எளிமையாக நடந்திருக் கிறது. வந்தவர்களுக்கு வெற்றிலை, பாக்கை மட்டும் கொடுத்து அனுப்பியிருக் கிறார்கள். எட்டாம் வகுப்பு மட்டுமே படித்த கி.ரா.வின் பள்ளி வாழ்க்கை, கசப்பான ஒன்றாகத்தான் இருந்திருக் கிறது. அவருடைய இளம்வயதில் கள்ளுக்கடை மறியல் நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு இன்றுவரை, அந்த ஊரில் கள்ளுக்கடை கிடையாது. காச நோயால் மிகவும் அவதிப்பட்டிருக் கிறார். அந்த நோய்க்காகவே ஈஸி சேரில் அமர்ந்து அமர்ந்து அது பழகிப் போய்விட்டிருக்கிறது. இப் படிப் பல தகவல்களைச் சொல் கிறார் கி.ரா.

“ஊருக்குள்ள தெருவெல் லாம் சகதியா இருக்கும்; நடக்கவே முடியாது. இப்ப ஜோரா சிமெண்ட் தளம் போட்டுருக்காங்க. கூரை வீடுகள் எல்லாம் காரை வீடு களாகியிருக்கு. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஒருத்தர், பஞ்சாயத்துத் தலைவரா ஆகியிருக்காரு. நெனைச்சுப் பார்க்க முடியாத ஆச்சர்யம். மக்களு டைய வாழ்க்கைத் தரம் ஓசந்திருக்கு!'' என்கிறார்.

இரண்டு பேருக்காககூட பஸ் வீடு தேடி வரும். ஊர்ப் பள்ளிக் கூடத்துக்கு வெளியூர்களிலிருந்து

கிராமத்துக் காட்டாறு!"

வந்த வாத்தியார்களும் வாத்திச்சிகளும்தான் ஊருக்குள்ள நாகரிகத்தைப் பரப்பினாங்க'' என்று சொல்லும் கி.ரா., இடைசெவல் கிராமத்து மாப்பிள்ளைக் கல்லுக்கும் ஒரு கதை வைத்திருக்கிறார்.

''எங்க ஊருல சுந்தரம்னு ஒருத்தி இருந்தா. அவளைக் கட்டுறதுக்கு, வெளியூர்ல இருந்து மாப்பிள்ளை ஒருத்தன் வந்தான். மூணு மாசம் விருந்தை முடிச்சிட்டுக் கிளம்பும்போது, ஊர்க்காரங்க அவனைச் சுத்திப் பிடிச்சிக்கிட்டாங்க. 'தம்பி எங்க ஊரு பொண்ணைக் கட்டியிருக்கே. இளவட்டக் கல்லைத் தூக்கிப் போடு; முடியாதுன்னா இங்க இருக்கிறவங்க எல்லாருக்கும், வெத்தல பாக்கு வாங்கிக் கொடுத்துட்டுப் போ' அப்படின்னாங்க. இதுதான் ஊர் வழக்கம். அவனால முடியாது; பய முழிக்கிறான். சுந்தரம் வந்தாள். 'என்ன பிரச்னை?'னு கேட்டாள். அங்க நின்ன பெரியவர் ஒருவர், 'ஒண்ணு அவன் தூக்கிப் போடட்டும். இல்லன்னா நீ தூக்கிப் போடு'ன்னு வேடிக்கையா சொன்னாரு. உடனே, அவ அந்தக் கல்லை அப்படியே தூக்கிப் போட்டுட்டா. பெரிய நாயக்கருக்குக் கோபம் வந்துட்டுது. 'என்ன இளவட்டக் கல்லுடா செஞ்சிருக்கீங்க? பொம்பளை தூக்கி வீசுறா. முதல்ல இதைக் குழியைத் தோண்டிப் புதைச்சிட்டு, யாராலயும் தூக்கமுடியாத இளவட்டக் கல் அடி'ன்னாரு. புது கல் அடிச்சுப் போட்டாங்க; அதுக்குப் பெயர் என்ன தெரியுமா? சுந்தரம் கல்லு. அந்தக் கல்லைப் பத்தி, நான் ஒரு கதைகூட எழுதியிருக்கேன். இப்போல்லாம் இளவட்டங்க, வெத்திலை பாக்கு வாங்கிக் கொடுத்துட்டுக் கௌம்பிடறாங்க'' என்றார்.

"என்ன இளவட்டக் கல்லுடா செஞ்சிருக்கீங்க. பொம்பளை தூக்கி வீசுறா"



✱ புதுவை இளவேனில்

கி.ரா.வின் வார்த்தைகளிலேயே அவர் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளையும் படம் பிடித்திருக்கும் புதுவை இளவேனில், ''கி.ரா. என்பவர் மிகப் பெரிய ஆளுமை. குட்டி சீசாவில் கிராமத்துக் காட்டாற்றை அடைக்கிற முயற்சிதான் இந்தப் படம். ஆனாலும், ஓர் எழுத்தாளரின் பன்முகத் தன்மைகளைக் காட்டுவதற்கு இது ஒரு நல்ல தொடக்கம்'' என்கிறார்.

– பாலு சத்யா



பயோ சிப்ஸ்

இரா. முருகன்

உங்ககிட்டே பர்த் சர்ட்டிஃபிகேட் இருக்கா? பிறப்புச் சான்றிதழ். அப்புறம் பிளஸ் டூ மதிப்பெண் விவரம், பட்டப்படிப்பு, பட்ட மேல்படிப்பு சர்ட்டிஃபிகேட், வேலையில் இருந்தால் அதற்கான நியமன உத்தரவு, உங்களோட வங்கிக் கணக்கு, கிரடிட் கார்ட், டெபிட் கார்ட், டிரைவிங் லைசன்ஸ், இன்கம் டாக்ஸ் பான் கார்ட், ரேஷன் கார்ட், வாக்காளர் அடையாள அட்டை, இன்னும்...

நீங்கள் இன்னார் என்று நிரூபிக்கும், உங்களைப் பற்றிய சகல விவரமும் தெரிவிக்கிற சமாசாரங்களைப் பாதுகாத்து, அவ்வப்போது தேவைப் படும்போது எடுத்து வந்து, திரும்பக் கொண்டுபோய் வைத்து அப்புறம் எடுத்து... ரொம்பவே கஷ்டம். இதுக்கு விடிவு காலம்? 'பயோசிப் இருக்க பயமேன்' என்று அறிவியலாளர்கள் கண் அடிக்கிறார்கள்.

பயோ சிப் எனப்படுவது சின்னஞ்சிறு மைக்ரோ கம்ப்யூட்டர் சில்லு. அரிசி மணி அளவுதான் நீளம், அகலம், உயரம். அறிவியல் பரிபாஷையில் சொன்னால் **பாசிவ் டிரான்ஸ்பாண்டர்**. அதாவது சாதுவான தகவல் பரப்பி. பயோசிப்பில் லேசர் கதிரைக் கொண்டு ஏதாவது தகவலைப் பொறித்து வைக்க வேண்டியது.



இந்தச் சில்லுகளை மோப்பம் பிடிக்கும் கருவியான ஸ்கேனர் முன்னால் பயோசிப் வரும்போது, பொறித்து வைத்த தகவல் ஸ்கேனருக்கும் அங்கே இருந்து அதோடு இணைத்த கம்ப்யூட்டருக்கும் பரிமாறப் படும். உலகில் ஒரு மூலையில் இருக்கிற கம்ப்யூட்டரை இன்னொரு கோடியில் இருக்கிற மற்றொரு கம்ப்யூட்டரோடு இணைக்கறது சாத்தியமான தொழில் நுட்ப யுகம் இது என்பதால், சில்லுத் தகவல் ஒரு வினாடிக்குள் கண்டம் தாண்டி, கடல் கடந்து போய்ச் சேர வாய்ப்பு உண்டு.

இன்றைக்கு இருபத்தைந்து வருடம் முன்பு அமெரிக்காவில் வளர்ப்பு மிருகங்கள் தொலைந்துபோனால் தேட வசதியாக பயோ சிப்பில் அந்த நாய், பூனை, கிளி, கணவன் போன்ற அப்பிராணிகளைப் பற்றிய தகவல் பதிந்து வைப்பது அறிமுகமானது (சாரி, லிஸ்டில் கடைசி ஐட்டம் இப்போதைக்கு ரீல்தான்). பதினாறு இலக்க எண். ஒவ்வொரு இலக்கமும் ஒரு வரலாற்றையே சொல்லும். நாய்க்குட்டி என்ன இனம், எஜமானர் விவரம், விலாசம், இரண்டு ஜன்மங்களின் பிறந்த

நாள், வயது இப்படியான தகவல்கள் அதெல்லாம். பயோசிப்பை நாய்க்குட்டி யின் காதில் அல்லது கழுத்தில் சிரிஞ்ச் மூலம் ஊசி குத்தி விட்டால் அது பாட்டுக்கு சமர்த்தாக அங்கேயே இருக்கும். தொலைந்து போன பிராணி வேறு யார் கையிலாவது கிட்டினால், பக்கத்து வெட்ரினரி டாக்டரிடம் கொண்டு போனால் போதும். அவர் ஸ்கேனரை அதன் கழுத்தில் வருடி நாய்மூலம் கண்டுபிடிக்க, அப்புறம் பிரிந்தவர் கூடி சீக்கிரம் சுபம் போட்டுவிடலாம்.



புதிய பகுதி

நாயைக் கடித்து பூனையைக் கடித்து மனிதனைக் கடிக்க பயோசிப் வரும் நாள் தொலைவில் இல்லையாம். ஆரம்பத்திலே சொன்ன பிறப்புச் சான்றிதழில் ஆரம்பித்து மற்ற

இருக்க பயமேன்!

பயோ சிப்பில் அந்த நாய், பூனை, கிளி, கணவன் போன்ற அப்பிராணிகளைப் பற்றிய தகவல் பதிந்து வைப்பது அறிமுகமானது.

கார்ட், அட்டை, காகித விவரத்தை எல்லாம் டிஜிட்டல் தகவலாக பயோசிப்பில் பொறித்து ஒவ்வொருத்தரும் கையிலோ காதிலோ கழுத்திலோ அதை வைத்துக் கொண்டுவிட்டால் பிரச்னை தீர்ந்தது.

இது எப்படி சாத்தியம்? வெரி சிம்பிள். உங்கள் உடம்பில் வைத்த பயோசிப்பில் உங்கள் வங்கிக் கணக்கு கையிருப்பு, கடன், வரி, வட்டி, பட்டுவாடா விவகாரங்கள் (தெருக்கோடி ஓட்டல் ரவா தோசைக்கு பயோசிப் மூலம் வங்கிக் கணக்கில் இருந்து பணம் செலுத்திய விவரம் உட்பட), மற்றும் உங்கள் மருத்துவ சரித்திரம், கல்வி வரலாறு இப்படி சகலமானதும் பதிந்தி ருக்கும். ஒவ்வொரு பயோசிப்புக்கும் ஒரு தனிப்பட்ட எண் என்பதால் உங்கள் பயோசிப் தகவல் இன்னொருத்தருக் குப் போக வாய்ப்பே இல்லை. ஏடி.எம். பக்கத்தில் நீங்கள் வந்ததும் விவரம் அங்கே பறந்து அதோடு இணைக்கப்பட்ட இஷ்டமித்ர பந்துக்களான கம்ப்யூட் டர்களை அடைய, உங்களுக்கு உபயோகமான இதர தகவல்கள் ஒரு வினாடியில் சேகரிக்கப்பட்டு, அஸின் குரலில் அதெல்லாம் குழைத்துத் தரப்படும்.

ஒரே சிக்கல் - கொள்ளைக்காரர்கள் யாராவது உங்களைக் கடத்திப் போய் ஏடிஎம் முன்னால் நிறுத்தி னாலும் அந்த அசட்டு யந்திரம் உங்கள் பயோசிப் பைப் படித்து, குசலம் விசாரித்து காசு கொடுத்து விடும்.



“ரஜினி



வித்தியாசமான கதைகளைச் சொல்வதில் பஞ்சு அருணாசலத்துக்கு உள்ள திறமை அபாரமானது. அவர் ரசிகர்களின் நாடித்துடிப்பை மிக நன்றாக அறிந்தவர். அவர் சொல்லும் கதைகளே புதுமையாக இருக்கும். உதாரணமா: 'மயங்குகிறாள் ஒரு மாது', 'ஆறிலிருந்து அறுபது வரை', 'எங்கேயோ கேட்ட குரல்' போன்றவற்றைச் சொல்லலாம். வழக்க மான கதைகளைக்கூட அவர் தமது திரைக் கதை அமைப்பு உத்தியின் மூலமாக ரசிகர் களைக் கவரும் விதமாக வித்தியாசமாக அமைத்துவிடுவார். இதற்கு உதாரணமாக 'ப்ரியா', 'முரட்டுக்காளை', 'துணிவே துணை' போன்ற படங்களைச் சொல்ல லாம். அவர் ரஜினி நடிக்க, என்னுடைய டைரக்‌ஷனில் ஒரு படத்தைத் தயாரிக்க விரும்பினார். கால்ஷீட்டுக்காக ரஜினியை அணுகியபோது, அன்றைய சூழ்நிலையில் அவர் மிகவும் பிஸியாக இருந்ததால், ஒரு முழு படத்துக்குத் தேவையான அதிக நாட்கள் கால்ஷீட் கொடுக்கும் சூழ்நிலை இல்லை. இருந்தாலும், எங்கள் காம்பி னேஷனில் எப்படியாவது ஒரு படம் நடிக்க விரும்பினார். எனவே, நாங்கள் கேட்டபடி கால்ஷீட் தரமுடியாது போனாலும், ''உங் களுக்கு இருபத்தைந்து நாட்கள் கால்ஷீட் தருகிறேன். அதற்குள் எப்படியாவது அட்ஜஸ்ட் செய்து படத்தை எடுத்து முடித்துவிடுங்கள்'' என்று கூறினார்.

இருபத்தைந்து நாட்களில் ரஜினியை வைத்து ஒரு படம் எடுப்பதற்கேற்றபடி இரண்டு ஹீரோக்கள் கொண்ட கதை ஒன்றைக் கூறினார் பஞ்சு அருணாசலம். ரஜினியுடன் பிரபுவை நடிக்க வைப்பது என்று முடிவுசெய்து, பிரபுவை அணுகியபோது அவர் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். ரஜினி, பிரபு இரு வருக்கும் ஏற்றபடி, ஒரு காமெடி இழை யோடும் இந்திப் படக் கதைக்கு, திரைக் கதை அமைத்துக் கொடுத்தார் பஞ்சு அருணாசலம். அந்தப் படம்தான் 'குரு சிஷ்யன்'.

கதை ஒரு பிரம்மாண்டமான பங்க ளாவில் நிகழ்வதாக அமைக்கப்பட்டிருந்த தால், மைசூர் அரண்மனையில் படப் பிடிப்பு நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. பிஸியான ஹீரோயின் யாரையாவது ரஜினிக்கு ஜோடியாகப் போட்டால், அவரது கால்ஷீட் பிரச்னை யால் படப்பிடிப்பு தாமதமாகி விடலா மென்று புதுமுக கதாநாயகி ஒருவரை,

* குரு சிஷ்யன் படத்தில்...





எஸ்.பி.முத்துராமன்

என் உதவியாளர்!"




ரஜினிக்கு ஜோடியாக நடிக்க வைக்கவும் முடிவு செய்தோம். தெலுங்குப் பட உலகில் ஏற்கெனவே அறிமுகமான கௌதமி, ரஜினிக்கு ஜோடியாக 'குரு சிஷ்யன்' படம் மூலமாக தமிழ்த் திரைக்கு அறிமுகமானார். பிரபுவுக்கு ஜோடியாக, தமிழில் பிரபல கதாநாயகியாக இருந்த சீதாவை நடிக்க வைத்தோம்.

மைசூருக்குப் புறப்படுவதற்கு முன்பு ஒரு பாடல் காட்சியையும், வேறு சில காட்சிகளையும் சென்னையிலேயே எடுத்து முடித்துவிடுவது என்பது எங்கள் திட்டம். முதல் நாள் வி.ஜி.பி. கோல்டன் பீச்சில் ரஜினிக்கும் கௌதமிக்கும் பாடல் காட்சி. கேமரா ஓட ஆரம்பித்ததும், கௌதமிக்கு கைகள் உதற ஆரம்பித்து விட்டன. இதைக் கவனித்த ரஜினி, ''கௌதமிக்கு நடன ஒத்திகை கொடுத்து, பாடல் காட்சியை எடுக்கலாம்'' என்று கூறினார். அதனால், ரஜினி - கௌதமி சம்பந்தப்பட்ட வேறு சில காட்சிகளைப் படம்பிடிக்க ஆரம்பித்தோம். சில நாட்கள் கழித்து, கௌதமிக்குப் பயிற்சியளித்து, கேமரா பயம் போய் தைரியம் வந்ததும், ரஜினியுடனான பாடல் காட்சியை எந்தப் பிரச்னையும் இல்லாமல் படம்பிடித்தோம். முதல் நாள் முதல் காட்சியில் ரஜினி முன்னால் நடுங்கிய கௌதமி, சீக்கிரத்திலேயே தமிழின் முக்கியமான ஹீரோக்களுக்கு ஜோடியாக நடிக்கும் அளவுக்கு சிறந்த கதாநாயகியாகி விட்டார்.

மைசூரில் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்த சமயத்தில், ஒரு நாள் பிரபு-சீதா இடம் பெறும் ஒரு பாடல் காட்சியை எடுக்க வேண்டியிருந்தது. அன்றைய தினம் அந்தப் பாடலை எடுக்காமல் விட்டு விட்டால், அதன் பிறகு சீதாவின் கால்ஷீட் கிடைப்பது சிரமமாக இருக்கும் என்ற

ரசிகர் மன்ற ராஜாக்கள்



ஆட்டோ டிரைவரான ரமேஷுக்கு ரஜினியைப் பிடித்துப் போக ஆட்டோதான் காரணம். '' 'பாட்ஷா' படத்தில் ஆட்டோவை வைத்துக்கொண்டு ரஜினி நிகழ்ச்சிய ரசவாதங்கள்தான் என்னை ரஜினி அபிமானியாக்கியது. ஆட்டோ டிரைவராக இருந்துகொண்டு சகமனிதர்களை நேசிக்கும் கேரக்டரில் நடித்திருப்பது எங்களுக்கெல்லாம் பெருமை தரக்கூடிய விஷயம். மேலும், அவருடைய ஈகை குணமும், ஆன்மிகப் பண்பும்தான் அவரை இந்தளவுக்கு உயர்த்தியது. என்னைப் பொறுத்தவரை, எளிமையான பஸ் கண்டக்டராக இருந்து தமிழக சூப்பர் ஸ்டாராக உயர்ந்தது ரஜினி மட்டுமே என்று நினைக்கிறேன். அவர் பெயரில் என்னைப் போன்றோர் நல்ல காரியம் செய்ய இதுவே காரணம்'' என்கிறார் ரமேஷ். பாட்ஷா படத்தின் பாட்டில் வருவதுபோல பிரசவத்துக்கு இவர் ஆட்டோ இலவசம்.

நிலையில், ரஜினியிடம், ''உங்களுக்கு ஒரு நாள் படப்பிடிப்பு இல்லை; எனவே, நீங்கள் விரும்பினால் சென்னைக்குச் சென்று வரலாம்'' என்று சொன்னேன். ஆனால், ரஜினி, ''நான் உங்களுக்கு கால்ஷீட் கொடுத்துவிட்டேன்; எனக்கு வேலை இருக்கிறதோ இல்லையோ, நான் இங்கே இருப்பதுதான் சரி'' என்று சொல்லிவிட்டார்.

அப்போது ரஜினியிடம், ''நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்; நாங்கள் பிருந்தாவன் கார்டனில் படப்பிடிப்புக்குப் புறப்படுகிறோம்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டபோது, ''நான் இங்கே உட்கார்ந்துகொண்டு என்ன செய்வது? எனக்கு ஷூட்டிங் இல்லாவிட்டால் என்ன? நானும் உங்களுடன் ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்துவிடுகிறேன்'' என்றார். வந்தவர், சும்மா இருக்கவில்லை; எனக்கும் கேமராமேனுக்கும் உதவியாளர் மாதிரி கேமரா டிராலி தள்ளுவது உட்பட பல உதவிகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டார்!



ரஜினியிடம் இருபத்தைந்து நாட்கள் கால்ஷீட் வாங்கியிருந்தபோதிலும்கூட, இருபத்து நான்கு நாட்களிலேயே படப்பிடிப்பை முழுவதுமாக முடித்துவிட்டோம். ரஜினி ஆச்சரியப்பட்டுப் போனார்.

ரஜினி, பிரபு, ஆச்சி மனோரமா, வினுசக்கரவர்த்தி என்று எல்லோரும் படம் முழுவதும் வந்து கலகலப்பூட்டுவார்கள். 'குரு சிஷ்யன்' படம் மூலம் பஞ்சு அருணாசலத்துக்குக் கிடைத்தது நல்ல பெயர் மட்டுமல்ல; நல்ல லாபமும்தான்.

ரஜினி படம் என்றாலே அதிரடி ஆக்ஷன் காட்சிகளுக்குப் பஞ்சமிருக்காது; ஒரு படம் முழுவதுமே அதிரடி சண்டைக் காட்சிகளாகவே வைத்து, அதே சமயம் ஒவ்வொரு சண்டைக் காட்சியும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக அமைந்துவிட்டால், அது ரஜினி ரசிகர்களுக்கு ஒரு தடபுடல் விருந்துதானே? அப்படி ஒரு படம் வந்தது...

(பயணம் தொடரும்)

எழுத்து வடிவம் : **எஸ்.சந்திரமௌலி**

ஒரு பக்கத் தொடர் —— 14

புள்ளிகள்... கோலங்கள்...

படுதலம் சுகுமாரன்

"சொரணையில்லாத புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டதுக்கு என்னைக்கோ அந்தக் காரியத்தைச் செய்திருக்கணும். என்ன செய்யறது, ஒரு குழந்தைக்குத் தாயாயிருக்கேனே. மனசக் கட்டுப்படுத்திக்கிட்டேன். எந்தத் திருவிழாவுல கண்டுபிடிச்சு கூட்டிட்டு வந்தீங்க, உங்க அருமை அண்ணனை?'' இகழ்ச்சியாய்க் கேட்டாள், கோகிலா.

"உனக்கு நேரம் சரியில்லைனு நினைக்கறேன் வா... வந்து சாப்பாடு போடு...''

"உங்களுக்குதான் பொண்டாட்டி தேவையில்லையே. அண்ணிதானே எல்லாம்... போங்க அவங்க போடுவாங்க.''

"ஏன் இப்படி ராட்சஸியா இருக்கே?''

"ஆமாமாம். உங்க எல்லாரையும் முழுங்கப் போறேன்.''

"என்னை முழுங்கு... குடும்ப மானத்தை முழுங்கிடாத..''

"அதுக்குதான் உங்க அண்ணனின் அருமை மகள் இருக்காளே...''

"ஏய்...''

"போதும் நிறுத்துங்க. பொழுதுவிடிஞ்சா தெரியும் உங்க குடும்ப கௌரவம், ஹும்...'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு, படுக்கையில் போய் விழுந்தாள்.

"பாரும்மா சலேகா. நாங்க உம் மேல எவ்வளவு அன்பு வச்சிருக்கோம், பாசம் வச்சிருக்கோம்...! அடுத்த தலைமுறைக்கு இந்தக் குடும்பத்தின் பேரை விளங்க வைக்கப்போற நம்பிக்கை நட்சத்திரம்னு நான் பெருமையா நினைச்சுக்கிட்டிருக்கேன். அதனாலதான் ஒரு ஆண் பிள்ளையைப் போல உனக்கு சுதந்திரம் கொடுத்து பிஸினஸெல்லாம் கத்துக் கொடுக்கறேன். தொலைக்காட்சி தொடர்லகூட உன் இன்வால்வ்மென்ட் இருக்கணும்னு கதை விவாதத்துக்கும், ஷூட்டிங் ஸ்பாட்டுக்கும் அனுப்பறேன்...''

- இந்த அகால நேரத்தில் தன்னை அழைத்து அருகில் உட்கார வைத்துக்கொண்டு அப்பா ஏன் இதையெல்லாம் பேசுகிறார் என்று புரியாமல் விழித்தாள், சலேகா. பார்வதிக்கும் அப்படிதான் இருந்தது.



பொன்ராஜ் தொடர்ந்து,

"சலேகா, காதல் தவறுன்னோ, அது பாவம்னோ நான் பத்தாம்பசலித்தனமாய்ச் சொல்ல மாட்டேன். அது இயற்கை. ஆணுக்கும் பெண்ணுக்கும் பருவ வயதில் வர்ற கட்டாய உணர்ச்சி; தவிர்க்க முடியாதது. ஐ...நோ! நானும் அந்த வயசைக் கடந்தவன்தான். ஆனால்...''

நிறுத்தி மகளை ஏறிட்டார், பொன்ராஜ். பார்வதிக்கும் 'ஏதோ பிரச்னை' என்று மனத்தில் பட்டது. மகள் மீது சந்தேகப் பார்வை வீசினாள்.

(தொடரும்)

கூலா



சிட்டி லைஃப் என்பது மாணவர்களுக்கு நாலு மூலை தாய்ச்சி ஆட்டமாகிவிட்டது. தீப்பெட்டி மாதிரி வீடு. அதை விட்டால் பள்ளி - கல்லூரி, அங்கிருந்து டியூஷன்ஸ். கூடுதலாக ஃபாஸ்ட் புட் அல்லது சந்து புகாரி பசியாறல், மீண்டும் தீப்பெட்டிக்குள் வந்தடைந்து தொடரும் படிப்பு... காலை வீசி நடக்கவே வீட்டில் இடமில்லை எனும்போது தானாகக் கிடைக்கக்கூடிய சின்னச்சின்ன உடற்பயிற்சிகளும் இல்லாமல் போய்விடுகின்றன.



முன்பெல்லாம் பள்ளியின் மைதானங்கள் விசாலமாக இருக்கும். நடுவே சின்னதாக ஒரு கட்டடத்தில் வகுப்புகள் நடக்கும். ஆனால், இப்போது கட்டடங்கள் அதிகமாகிவிட, மைதானங்கள் சுருங்கிவிட்டன.

எல்லாவற்றையும்விடக் கொடுமை, நகரின் பல பகுதிகளுக்கும் சென்றுவரும்படி பள்ளி மற்றும் நிர்வாகம் ஏற்பாடு செய்திருக்கும் பேருந்துகள். இது வசதிதானே, கொடுமை என்றால் எப்படி என்கிறீர்களா?



இதை முதலில் எண்ணிப் பாருங்கள். வெகு தொலைவில் இருக்கும் பள்ளிக்கூடத்தைக் கூட, 'அதுதான் பெஸ்ட் ஸ்கூல்' என்று சேர்த்து விடுகிறார்கள். பொறியியல் கல்லூரி என்றால் கேட்கவே வேண்டாம். புறநகரிலும் புறநகர்! (ஒரு தந்தை, 'இன்னிக்கு காலையிலே ஐந்து நிமிஷ தாமதத்தால் என் மகன் பஸ்ஸை மிஸ் பண்ணிட்டான். என் பைக்கிலே அவனை உட்கார வைச்சு ரேஸ் கணக்கிலே வேகமாகப்போய், தாம்பரத்திலே அந்த பஸ்ஸிலே அவனை ஏத்தின பிறகுதான் நிம்மதியாச்சு' என்று போனவாரம் கூறியது நினைவுக்கு வருகிறது). இப்படி, ஒரு கல்லூரியில் என்னதான் விளையாட்டுக்கான வசதிகள் இருந்தாலும் அவற்றை மாணவர்களால் பயன்படுத்திக் கொள்ள முடியாது. கல்லூரிவிட்ட ஐந்தாவது நிமிடம் பேருந்து புறப்பட்டுவிடும் (அப்போதுதான் மாலைநேர டிராஃபிக் மேலும் அதிகமாவதற்குள் சென்றுவிட முடியும்). அந்தப் பேருந்தைத் தவறவிட்டால், வீடு வர வழி கிடையாது.



பள்ளி மாணவரோ, கல்லூரி மாணவரோ, வீட்டுக்குத்



திரும்பும்போது அம்மா இருப்பதில்லை (சம உரிமை - அவரும் பொறுப்பான வேலையில்). வீடு திரும்பியதும் களைப்பு. இந்த நிலையில் நூடுல்ஸ் ஒரு கைவந்த தீர்வு.

நூடுல்ஸ் என்பது அடிப்படையில் அரிசிதான். ஆனால், ரசாயனப் பொருள்களும் 'ப்ரிஸர்வேடிவ்களும்' அதில் கலக்கப்படுகின்றன. அசிடிக் அமிலமும் சேர்க்கப்படுகிறது. போதாக்குறைக்கு சுவைக்காக அஜினமோட்டோ உப்பும்.

சாப்பிடுங்க!

நியூ டேஸ்ட்டி ட்ரீட் - 1

எப்படியோ இன்றைய இளைஞர்கள் உலகம் காலத்தின் கட்டாயமாக நூடுல்ஸ், சிப்ஸ், பீட்ஸா, சாக்லெட், கோக், பெப்சி என்று தன் உணவுப் பழக்கத்தை நிலை நிறுத்திக்கொண்டுவிட்டது.

கிராமங்களிலும் இதே ஸ்டோரி லைன் தான். அதை அடுத்து வரும் வாரங்களில் சொல்கிறேன். இருபத்தைந்து வயது இளைஞனுக்கு மாரடைப்பு என்றால் அதை ஒரு அதிசயமாக நாங்கள் நினைத்த காலம் மலையேறிவிட்டது.

'அதற்காக பழகின 'நாகரிக' உணவுகளையெல்லாம் விட்டுவிட முடியுமா?' என்று கேட்டால், விடவேண்டாம். ஆனாலும் இவை தொடர்பான சில விவரங்களை அறிந்துகொள்வதுடன் இவற்றினால் ஏற்படக்கூடிய விபரீதங்களை வேறு விதங்களில் சமன் செய்து கொள்ளலாம். முதல் காரியமாக, பிரேக் ஃபாஸ்டை பிளந்து கட்டுங்க - பழைய சோறு பச்சை வெங்காயம்னாலும் சரி, சீரியல் - பால் கலவைன்னாலும் சரி... வயிறு நிறையட்டும்... பாதி கிண்ணம் சோறு, மீதி கிண்ணம் கலவையான காரட், தக்காளி, வெங்காயம் - இந்த இயற்கை உணவு சாயந்திரம் சாப்பிடப்போற கெமிக்கல் சமாசாரங்களைச் சமன் செய்துடும். சமைக்க அம்மா வேண்டாம்; யாரும் தானே செய்துக்கலாம். விவரமா அடுத்த வாரம் சொல்றேன் - அதுக்கு முன்னாடி ஒரு எச்சரிக்கை - காயை நல்லா உப்புத் தண்ணியில ஊற வைக்கக் கழுவணும், ஸாலட் செய்யறதாயிருந்தா. வாயை மவுத்வாஷ் போட்டுக் கொப்பளிக்கணும் பச்சை வெங்காயம் சாப்பிட்டா...!

(தொடரும்)

எழுத்து வடிவம் :
ஆதர்ஷ்



- டாக்டர் எம். ராஜேந்திரன்

கடைசிப் பொத்தான்

ஈரோடு தமிழன்பன்

கடலில் மூழ்கிப்போன
தீவுப் பகுதிகள்
மூழ்கும் முன்
மிச்சமான மேட்டு நிலத்திடம்
என்ன சொல்லிப்
போயிருக்க முடியும்?
ஆழத்துக்கு வாழ்க்கைப்பட்ட
அது தன்னைக் காணுமா?
தண்ணீரில்
தன்னைக் கரைக்குமா?
இல்லை
ஓர் அத்துவத் தத்துவத்தில்
காணாமல் போய்க்
கரையேறுமா?

இதோ
இந்தச் சட்டையில்
கடைசிப் பொத்தான்
கழன்று விழும் காலம்
வந்துவிட்டதாகவே தெரிகிறது
இருந்த பொத்தான்கள்
சட்டையிடம்
என்ன சொல்லிப்
போயிருக்குமோ
தெரியவில்லை
கடைசிப் பொத்தான்
கன்னத்தைத் தொட்டுவிட்டுத்
தோதான துளையிடம்
காலம் சொல்வது
விடுதலைச் செய்தியா?
விடுகதைப் புதிரா?

சட்டை துறக்கச்
சாத்தியமாகும் நிர்வாணத்தில்
நான் இருப்பது
இயலுமெனில்
நிர்வாணம்
நிர்ணயமாவது எப்படி?

பொத்தானைப் பொருத்தவரை
அது
பொத்தியிருந்த பொழுதுகளைத்
திறந்துவிட்டது
பொழுதுகளைப் பொருத்தவரை
அது
என்னைத் திறந்து விட்டிருக்கிறது

தனக்கும் தெரியாமல்
சட்டைக்கும் தெரியாமல்
கடைசிப் பொத்தான்
கழன்று விழுந்தது

தியானத்தில் மூழ்கியிருந்த
புத்தன் உதட்டில்
அவருக்கும் தெரியாமல்
ஒரு புன்னகை
என் சட்டையின்
கடைசிப் பொத்தானோ
அது?





ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை. பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம். சென்னை - 63. போன் : 22760612, 22762299
City Office No.7, முதல் மாடி. வேலு தெரு. மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 19 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற, மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

“நட்சத்திரங்களின் தாய் வீடு!”







* நந்தினியின்... * ... பாசறையில் ... * ... உருவான மாடல்கள்

உடையழகு... நடை பழகு!

மீடியா! கனவுகளின் தலைமை பீடம். அதுவும் இன்றைய இளைஞர்களுக்கு, மீடியாவில் மாடலிங் என்பது அல்டிமேட் கனவு! அது சினிமா நட்சத்திரங்கள் உருவாகும் நாற்றங்கால்! நடித்துக் களைத்த பின் அவர்கள் திரும்ப வர விரும்பும் தாய் வீடு! இத்தனை கனவுகளையும் நனவாக்கித் தருவோர் மாடலிங் கோ-ஆர்டினேட்டர்ஸ். அவர்களுள் முன்னணியில் இருப்பவர் நந்தினி. இதோ நந்தினி மேடமின் அனுபவக் கடைசலில் எழுந்து நிற்கும் அட்வைஸ் வெண்ணெய் :

1. ஆசையிருந்தால் போதாது... அழகு முக்கியம்; அறிவு அதி முக்கியம்!

2. உடைக்கு எழில் கூட்டு; நடைக்கு மிடுக்கூட்டு!

3. புரோக்கர்களைப் புறந்தள்ளு!

4. ‘ஸ்க்ரீன் டெஸ்ட்’டில் பிளந்து கட்ட பயிற்சி எடு.

5. சரியான நபரிடம் சான்ஸ் கேள்!

6. வாய்ப்பு பெற கௌரவத்தை விலை கொடுக்காதே!

7. இன்றைய காம்ப்ரமைஸ் நாளைய சோகம்!

8. உண்மை பேசினாலும் 'உர்'ரென்று பேசாதே!

9. நட்சத்திரமாய் இரு; உதிர்ந்துவிடாதே!

10. பிரபலம் ஆனதும் புரொமோட்டரை மறந்துவிடாதே!

– மாசி



✱ நந்தினி



'உலக ஒற்றுமை. சகோதரத்துவம். அமைதி. இந்த மூன்று உயர்ந்த பண்புகளையும் இந்த ஒலிம்பிக் ஜோதி பிரதிபலிக்கிறது. ஒரே கூரையின் கீழ் இந்த உலகம் ஒன்றுபட வேண்டும். ஒரே உலகம். ஒரே கனவு' முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லாமல் குரலில் எந்தவிதத் தடுமாற்றமும் இல்லாமல் சிற்றுரை ஆற்றி முடித்திருக்கிறார் சீன அதிபர் ஹூ சிங்தாவ்.

கிரீஸில் இருந்து ஒலிம்பிக் ஜோதியை விமானத்தில் எடுத்து வந்திருந்தார்கள். பீய்ஜிங்கில் உள்ள தியனான்மென் சதுக்கத்தில் ஒரு

பரவும்



சிறிய விழா. அப்போது அதிபர் உதிர்த்த நம்பிக்கை வாசகங்கள்தான் நாம் மேலே பார்த்தவை. அதிபர் பேசி முடித்ததும் ஜோதியை லியு ஜியாங்கிடம் புன்னகையுடன் ஒப்படைத்தார். லியு ஜியாங் தங்கப் பதக்கம் பெற்ற ஒலிம்பிக்ஸ் வீரர்.

லியு ஜியாங்கைச் சந்திக்கும் ஆர்வத்துடன் ஒரு சீனப் பெண் தன் குழந்தையுடன் வந்திருக்கிறார். ஆனால் அவரால் உள்ளே நுழைய முடியவில்லை. வாயிலில் தடுத்து நிறுத்திவிட்டார்கள். 'இல்லை அம்மணி, எல்லோருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்தாயிரம் பேருக்கு மட்டுமே சிறப்பு அனுமதி. நீங்கள் டி.வி.யில் பார்த்துக்கொள்ளுங்கள்'. 'விழாவை பார்க்க முடியாவிட்டால் பரவாயில்லை. லியு ஜியாங்கை மட்டுமாவது பார்த்துவிட முடியுமா?' என்று கேட்டிருக்கிறார். அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. வாசலிலேயே காத்திருந்துவிட்டு வீடு போய்ச் சேர்ந்திருக்கிறார்.

பெரிய அரங்கம்தான். சந்தேகமேயில்லை. கூடுதலாகப் பலரை அனுமதித்திருக்கலாம். ஆனால் எப்போது, எங்கே, யார் மூலமாகப் பிரச்னை வெடிக்கும் என்று சொல்ல முடியாது. தொலைக்காட்சிகளில்கூட நேரடி அஞ்சல் கிடையாது. ஒரு நிமிட இடைவெளி விட்டே ஒளிபரப்பினார்கள். எதற்கு வம்பு? யாராவது கோஷம் போட்டு, கறுப்புக் கொடி காட்டி நிகழ்ச்சியை உருக்குலைத்துவிட்டால்? நேரடி ஒலிபரப்பு ஆபத்தானது. உண்மையை உலகுக்கு உணர்த்திவிடக்கூடும்!

நீண்ட பயணத்துக்குத் தயாராகிவிட்டது ஒலிம்பிக்ஸ் ஜோதி. சீனாவில் இருந்து கஜகஸ்தான். அங்கிருந்து உலக நாடுகளுக்கு. ஏப்ரல் 17ஆம் தேதி இந்தியா. இங்கு எப்படி இருக்கும் வரவேற்பு? கையை விரித்துவிட்டார் பைசிங் பூட்டியா. 'மன்னிக்கவும், என்னால் ஒலிம்பிக்ஸ் ஜோதியைக் கையால்கூடத் தொட முடியாது. நான் பௌத்தத்தை மதிப்பவன். சீனாவின் நடவடிக்கைகளில் எனக்குத் திருப்தியில்லை.' தாய்லாந்தில் இருந்தும் ஒருவர் இதே காரணத்தைச் சொல்லி மறுத்திருக்கிறார்.

'நான் ஒலிம்பிக்ஸ் போட்டியைப் பார்க்க வரமாட்டேன்' என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார் ஜெர்மன் சான்சிலர் ஏஞ்சலா மெர்கெல். ஒலிம்பிக்ஸ் வேண்டாம் என்று மறுப்பு தெரிவித்த முதல் உலகத் தலைவர் இவரே. போலந்து நாட்டு முதல் மந்திரியும் செக் குடியரசின் அதிபரும்கூட ஒலிம்பிக்

ளைப் புறக்கணித்திருக்கிறார்கள். ஆஸ்திரியா, பிரான்ஸ் இரண்டும் பெண்டுலம் மனநிலையில் உள்ளன.

ஆரம்பத்தில் மிகுந்த ஆரவாரத்துடனும் கொண்டாட்டத்துடனும்தான் இருந்தது சீனா. 'யாருக்கும் கிடைக்காத அற்புத வாய்ப்பு. உலகமே கொண்டாடப்போகும் களிவிழாவைக் காண ஓடி வாருங்கள்!' ஓடியோடி வரவேற்றுக் கொண்டிருந்தவர்கள்தாம். இப்போது கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள்.

பாஸ்போர்ட், விஸா, பாலிடிக்ஸ்!

போட்டிகளைப் புறக்கணிப்பதில் பயன் எதுவும் இல்லை. ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் புறக்கணிப்பது ஒரு விளையாட்டை அல்ல. சீன மக்களை. அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்'- அமெரிக்காவின் நிலைப்பாடு இது.

''நீங்கள் ஏன் தலாய் லாமாவுடன் ஒரு வார்த்தை பேசக்கூடாது'' என்கிறார் ஜார்ஜ் புஷ். உங்களுக்கும் அவருக்கும் ஏதோ தகராறாமே? ●

நெருப்பு!



சீனாவின் அதிகாரபூர்வ ஏடான தி பீப்பிள்ஸ் டெய்லி தமது தலையங்கத்தில் இப்படி எழுதுகிறது : நாட்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன. நாம் எச்சரிக்கையுடனும் பாதுகாப்புடனும் இருக்க வேண்டிய சமயம் இது. எங்கிருந்து பிரச்னைகள் வெடிக்கக்கூடும் என்பது பற்றி ஒரு தெளிவான முன் யோசனை நமக்கு இருக்க வேண்டும். அவற்றை முறியடிப்பதற்கான வழிமுறைகளையும் இப்போதே தயார்ப்படுத்தி வைக்க வேண்டும்.'

'சீன அரசின் நடவடிக்கைகள் பற்றி நமக்கு வேறு விதமான அபிப்பிராயம் இருக்கலாம். ஆனால், அதற்காகப்

'நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. சீனா, எச்சரிக்கையுடனும் பாதுகாப்புடனும் இருக்க வேண்டிய தருணம் இது.'

மருதன்



● **சீர்காழி சாமா, தென்பாதி**

மனைவியின் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் திணறும் நீங்கள், வாசகர்கள் கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் அளிக்கும் ரகசியத்தைக் கூறுவீரா...?

நான் வீட்டுல கேள்வி; வெளியில பதில். அது சரி, நான் வீட்டுக்காரி கேள்விகளுக்குத் திணறுவேன் என்பதை நீங்கள் எப்படிக் 'கேள்வி'ப்பட்டீர்கள்? இதற்குப் 'பதில்' சொல்லுங்கள்.

● **என்.சண்முகம், திருவண்ணாமலை**

வீட்டுல வெளியில

வெற்றியின் முதல் படி தோல்வி தானே?

எல்லா படிகளுமே ஏதோ ஒரு விதத்தில் தோல்விதான். படிப்படியாகத் தோல்விகளை ஏற்றுத் துவளாமல் இருக்கும் பக்குவமே பரிபூரண வெற்றி.

● **ஆர்.ஆர்.தமன், சென்னை**

'அவன் செத்துச் சுண்ணாம்பாயிட்டான்' என்று சொல்லும் நாம், 'அவன் வாழ்ந்து வெற்றிலையாகிவிட்டான்' என்று ஏன் சொல்வதில்லை?

வாழ்ந்து வெத்து இலையானவன், வேறு வழியில்லாமல் செத்துச் சுண்ணாம்பாவான். வெந்த இலைல சுண்ணாம்பைத் தடவி வெறுப்பேத்தாதீங்க சாமி.

● **மீனா ரெங்கனாதன், சென்னை**

உங்களுக்குக் கவிதை எழுத வருமா..?

கவிதை ஓர் இயற்கை அழைப்பு. எழுதும்போது வராது; வரும்போது எழுதித்

தான் ஆகவேண்டும்!

கேள்வி... பதில்!

இப்படிச் சொல்லி அசத்துவீங்கன்னு நான் நினைக்கல சார்!

● **ஆர். கோபாலன், மேற்கு மாம்பலம்**

கல்யாணத்துக்கு முன், கல்யாணத்துக்குப் பின், இதில் எது 'சுந்தர காண்டம்'?

கல்யாணத்துக்கு முன் ஆண், பெண் இருவருக்குமே 'சுதந்திர காண்டம்'. கல்யாணத்துக்குப் பின் கணவன் துஷ்டனாக மாறினால், மனைவிக்கு 'அயோக்கியா காண்டம்'. கணவன் தண்ணியில்லா காட்டுக்கு டிரான்ஸ்ஃபரானால், இருவருக்கும் 'ஆரண்ய காண்டம்'. பெற்ற பிள்ளைகள் ரெட்டை வால் ரெங்குடுவாக இருந்தால் 'கிஷ்கிந்தா காண்டம்'. மாமியார் - மருமகளுக்கு சண்டை வந்தால் 'யுத்த காண்டம்'. 'இதுங்க அடிச்சுக்கறதைப் பாக்கறதுக்கு, பேசாம தூக்குல தொங்கலாம்' என்று கணவன் விரக்தியடைந்து அடிக்கடி உத்தரத்தைப் பார்த்தால், 'உத்தர காண்டம்'. இதன் பின் கணவனின் வாழ்க்கை மெக்கானிக்கலான 'எந்திர காண்டம்'!

● **பி.சிவா, பாளையங்கோட்டை**

பிச்சை எடுப்பது குற்றமா, பிச்சை இடுவது குற்றமா?

அதிகாரமாகப் பிச்சை எடுப்பது அகங்காரம். அகங்காரத்துடன் பிச்சை இடுவது அதிகாரம். 'ஐயமிட்டு உண்' என்று அவ்வையார் சொன்னதுபோல், தேடிச் சென்று தானமளித்து பிச்சை எடுப்பதைத் தவிர்ப்பது தர்மம். அதே போல் யாரிடம், எதை வேண்டுகிறோம் என்பதைப் பொறுத்து, எடுக்கும் பிச்சை ஏற்றமுடையதாகிறது. 'ஞான வைராக்கிய சித்தயர்த்தம் பிக்ஷாம் தேஹிச பார்வதி' என்று ஞானத்தையும், வைராக்கியத்தையும், அன்னபூரணியிடம் பிக்ஷையாகக் கேட்ட ஆதிசங்கரரை நினைத்து நெகிழ்ந்தாலே நாம பாதி சங்கரராகி விடுவோம். 'திருவண்ணாமலையில் ஒரு வீட்டில் இட்ட ஒரு கவளம் சோற்றைக் கையேந்தி வாங்கிச் சாப்பிட்டு, பிறகு அதே கையைத் தலையில் துடைத்துக்கொண்டபோது, I felt like a king' என்கிறார் பகவான் ரமண மகரிஷி. எடுப்பதும் குற்றமல்ல, இடுவதும் குற்றமல்ல, பிச்சை என்று ஒன்று இருப்பதுதான் குற்றம். ●





நடுங்கி ஓடிய நாற்பது லட்சம்!

கடன் சுமை தாள முடியாத பயத்தில் தற்கொலை செய்துகொள்ளும் விவசாயிகள் பற்றித்தான் அதிகம் கேள்விப்படுகிறோம். ஆனால், வங்கியில் தான் வாங்கிய பத்து லட்ச ரூபாய் கடனையும் முப்பது லட்சம் வட்டியையும் நடுங்கி ஓடச் செய்துள்ளார் கோவை விவசாயி சுப்பையன்! எப்படி...? இதோ அவரே சொல்கிறார்:


கோவை அத்தப்பக்கவுண்டன் புதூர் கிராமத்தைச் சேர்ந்த சுப்பையன் என்ற விவசாயி, இந்தச் சாதனையைச் செய்து இருக்கிறார். அவரைச் சந்தித்தோம்.

''எனக்கு ஒரு விபரீதமான ஆசை வந்தது. இங்கேயிருந்து கர்நாடகா போய், இருபத்தஞ்சு ஏக்கர் தோட்டம் குத்தகைக்கு எடுத்தேன். காய்கறி பயிரிட்டேன். அப்பவும் வாரம் ஒருநாள் கோவை வந்து சொந்த சாகுபடி பார்த்துட்டுப் போனேன். என்னோட போறாத காலமோ என்னவோ, அப்பப்ப கர்நாடகாவுல காய்கறி விலைகள் சரிய ஆரம்பிச்சது. கொஞ்சம் கொஞ்சமா கடனாளி ஆனேன். மூணு வட்டி, நாலு வட்டின்னு தனியாளுங்ககிட்டே கடன் வாங்கினேன். சொந்த ஊர்லயும் சரியா விவசாயத்தைக் கவனிக்க முடியலை.

நாலு வருஷத்துல பத்து லட்ச ரூபாய்க்குக் கடனாளி ஆயிட்டேன். மாசம் நாற்பதாயிரம் ரூபாய் வட்டி கட்ட எங்கே போவேன்? வட்டி கட்ட, கடன் பத்து லட்சம் வாங்கினேன். இப்படியே கடன் பத்து லட்சம், வட்டி கட்ட வாங்குன கடன் முப்பது லட்சம்னு நாற்பது லட்சமாக மலை மாதிரி உசந்து போச்சு. ஒரு கட்டத்துல கர்நாடகா குத்தகை தோட்டத்தைக் கை கழுவி விட்டுட்டு, ஊருக்கு வந்து சேர்ந்தேன். எனக்கு என்ன செய்யிறதுன்னே தெரியலை.''

''பிறகு எப்படிச் சமாளித்தீர்கள்? வேறு மாற்று முறையில் சாகுபடி செய்தீர்களா?'' என்றோம்.

''ஆமாம். ஆறு ஏக்கர் தோட்டத்தைக் கலப்புப் பண்ணையா மாத்தினேன். ரெண்டு ஏக்கர்ல கால்நடைத் தீவனமா டெலிகாஸ் புல்லு. மீதி மூணு ஏக்கர்ல





✱ சுப்பையன்



✱ குழந்தைவேல்

ஊடுபயிரா பாக்கும் தென்னையும், முன்னூறு மரம். மலேசியன் ஆரஞ்சு எனப்படும் குட்டைத் தென்னை வேறு. இளநீரின் சுவை அலாதியானது. நாட்டுத் தென்னை அறுபது வருஷத்துல தர்ற வருவாயை, இந்தக் குட்டைத் தென்னை முப்பது வருஷத்துல நமக்குத் தந்துடும்.

டெலிகாஸ் புல்லை, மூணு வருஷத்துக்கு தினம் வெட்டிக்கிட்டே இருக்கலாம். தினமும் பணம் வந்தது! அப்புறம் மூணு ஏக்கர்ல கறிவேப்பிலைத் தோட்டம். அது பலன் தர ஆரம்பிச்சுட்டா, முப்பது வருஷத்துக்கு கறிவேப்பிலை பறிச்சிக்கிட்டே இருக்கலாம். மீதி ரெண்டு ஏக்கர்ல கீரைத் தோட்டம். எல்லாக் கீரையும் போடுறோம். குதிரை மசால்னு கால்நடை மற்றும் குதிரைகளுக்கான தீவனப் பயிர். இப்படிக் கலப்புப் பண்ணையால, பணம் தினசரி வந்து சேர்ந்திச்சு. மொத்தக் கடனையும் எப்படி அடைச்சோம்னு எங்களுக்கே வியப்பாக இருக்கு'' என்கிறார் சுப்பையன்.

இவரின் மகன் குழந்தைவேல் பட்டதாரி. இவரும் அப்பாவோடு விவசாயம் செய்கிறார்.

''தோட்டத்துல விளையற எதையுமே மொத்த வியாபாரிகிட்டே நாங்க விக்கறது இல்லே. கீரையோ, புல்லுக்கட்டோ, தேங்காயோ, இளநீயோ எதுவா இருந்தாலும் சரி, எங்க ஆளுங்க டெம்போவுல ஏத்தி கடைக்குக்கடை போட்டுட்டு வந்திடுவாங்க.

எங்க தோட்டம் முழுவதும் இயற்கை விவசாயம்தான். மண் புழு உரம், மாட்டுச் சாணம்தான். கீரை வகை மட்டுமே ஒரு நாளைக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு வெளியே அனுப்புறோம். கறிவேப்பிலை ரெண்டாயிரம் ரூபாய்க்கு. தினசரி இருநூறு தேங்காய்...'' என்று சாதனைப் பட்டியலை வாசிக்கிறார் குழந்தைவேல்.

செய்தியும் சித்திரமும்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு




ஆன்மிக அதிசயம்!



கும்பாபிஷேக அழைப்பில் 'ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்' என்று இருப்பதைப் பார்த்து, ''இதற்கு என்ன பொருள்?'' என்று ஒரு சமயம் நண்பரிடம் கேட்டேன். ''பழைய கோயிலைப் புதுப்பித்து நடத்துவது ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம். ஜீர்ணம் என்றால் காலப் போக்கில் நிகழும் உருக்குலைவு. நாம் உண்ணும் உணவு ஜீரணமாகிவிடுவதில்லையா? அதைப் போல! அதனை மீண்டும் புதுப்பிப்பது உத்தாரணம். புதிய ஆலயமாக இருந்தால் 'நூதன ஆலயம்' என்று வரும்'' என்றார். ''சரி, 'அஷ்டபந்தனம்' என்றால் என்ன?'' ''அடுத்த வாரம் நடக்கும் கும்பாபிஷேகத்துக்கு முதல் நாளே கோயிலுக்கு வா, சொல்கிறேன்'' என்றார்.

நான் போனபோது இரண்டு பேர் மாறி மாறி உரலில் உலக்கை கொண்டு, அரிசி குத்துவதுபோல இடித்துக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்த களி மண் உருண்டையைப் போல சிவந்த பொருளை எடுத்துக் காட்டினார் நண்பர். ''இதுதான் அஷ்டபந்தனம். எட்டு மருந்துப் பொருட்களின் கலவை. புதிய விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்யும்போதும் பழைய விக்கிரகத்தைச் சுத்தம் செய்த பின்னும்

அறிவோம்



இந்த அஷ்டபந்தனத்தைச் சார்த்துவது கும்பாபிஷேகத்தின் முக்கியமான அம்சம். பீடத்தையும் விக்கிரகத்தையும் ஒன்றாகப் பிணைப்பது எட்டு மூலிகைக் கலவை - ஆகவே அஷ்டபந்தனம் என்று பெயர் பெற்றது'' என்றார்.

''இது எங்கே கிடைக்கிறது?''

''பழைமையான நாட்டு மருந்துக் கடைகளில். ஆனால், இப்படிமிருதுவான உருண்டையாகக் கிடைக்காது. வெல்

த.கி. நீலகண்டன்



அஷ்டபந்தனம்!

லக் கட்டி மாதிரி தருவார்கள். அதைப் பதப்படுத்தி உபயோகிக்க வேண்டும். மற்ற பொருட்களைப்போல், இதிலும் கலப்படம், போலிகள் மலிந்துவிட்டன. பெரும்பாலும் செங்கல் தூளைக் கலந்து கட்டியாக்கி உருட்டி விற்கிறார்கள். அதனால், ஒரு பயனும் இல்லை! கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் விஷயம். அத்தனை வருஷம் போலிகளால் தாக்குப்பிடிக்க முடியாது. சிமென்டுக் காரை போல் வாயைப் பிளந்துவிடும்! விக்கிரகமும் ஆட்டம் கண்டுவிடும். இப்படி பிரதிஷ்டை செய்யப்படும் விக்கிரகங்களில் சான்னித்யம் போய்விடும். அதற்குரிய முறையில் செய்வதுதான் அஷ்டபந்தனத்துக்குச் சிறப்பு'' என்றார்.

''அந்த முறைதான் என்ன?'' என்று கேட்டேன். பழைய கும்பாபிஷேக மலர் ஒன்றிலிருந்து ஒரு கட்டுரையை பிரதி எடுத்து அனுப்பிவைத்தார் நண்பர். அதில் கிடைத்த தகவல்கள்:

கொம்பரக்கு, கக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன்மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டு பொருட்களின் கூட்டுக் கலவையே அஷ்டபந்தனம். அந்த வகையில், முதல் ஐந்து பொருட்களும் சிமென்ட், மணல், ஜல்லி இவற்றுக்குச் சமமானவை. செம்பஞ்சு இரும்புக் கம்பி வலைக்கு ஈடானது. எருமை வெண்ணெய் இந்த கான்க்ரீட்டுக்குத் தண்ணீர் போன்றது. அஷ்டபந்தனத்தைத் தயாரிக்கும் முறையில் பொருள்களின் தரம், அளவு, அவற்றைக் கலந்து இடிக்கும் கால அளவு இவை மூன்றும் மிக முக்கியம்.

கொம்பரக்கு ஒரு வகை மரப்பிசின். கொம்பில் (மரத்தில்) கிடைக்கும் அரக்கு என்பதால் கொம்பரக்கு. சுக்கான் தூள் வெள்ளை நிறத்தில் இருக்கும். வெறும் வாணலியில் போட்டு வறுத்தால் வெடிக்கக் கூடாது. அந்த வகை சுக்கான் தூள்தான் உகந்தது. குங்கிலியம் என்பது சாம்பிராணி போன்ற ஒரு பொருள். கட்டிக் கட்டியாக இருக்கும். கற்காவி, செம்மண் போன்றது. செம்பஞ்சு பீகார் மாநிலத்தில் கிடைக்கிறதாம். அங்கு இதற்கு 'கோந்தி' என்று பெயர். சாதிலிங்கம், இரும்பைப்போல கனமான, ஆனால் எளிதில் பொடியாகக் கூடிய பொருள். எட்டு பொருட்களில் இதன் விலையே அதிகம் என்பதால் இதன் அளவைக் குறைத்துவிடுகிறார்கள். அப்படிச் செய்வது தவறு. தேன்மெழுகு தேன் அடையிலிருந்து எடுக்கப்படும் மெழுகு.

வெண்ணெய் தவிர்த்த ஏழு பொருள்

களையும் ஒவ்வொன்றாக எடுத்து அளவான முறையில் சேர்த்து உரலில் போட்டு இடிக்க வேண்டும். கல் உரல் இதற்கு உகந்ததல்ல! மர உரலில்தான் இடிக்க வேண்டும். ஏழு பொருட்களையும் சேர்த்து இடித்தானதும் சிறிது சிறிதாக எருமை வெண்ணெயையும் சேர்த்து மீண்டும் இடிக்க வேண்டும்.

எருமை வெண்ணெயில் நீர்ச்சத்து அறவே நீக்கப்பட வேண்டும்.



அஷ்டபந்தனத்தை நகத்தால் கிள்ளி வீட்டுக்கு எடுத்து வருவது மகா பாவம்

எப்படி? காலி மண்பானைகளைக் கவிழ்த்து வைத்து, அதன் மீது வெண்ணெயைத் தடவி, வெப்பம் தாக்காத இருண்ட அறையில் மூன்று நாட்கள் வைக்க வேண்டுமாம்! மண்பானை அத்தனை தண்ணீரையும் உறிஞ்சிக்கொண்டு விடுமாம்! இந்த வெண்ணெயை எடுத்து உபயோகிக்க வேண்டும்.

வெண்ணெய் கலந்து இடிக்கப்பட்ட பொருட்கள் பக்குவமாகி, ஒன்று சேர்ந்து உரலில் ஒட்டாமல் வருமாம்! அவற்றை உருட்டியெடுத்து மீண்டும் மீண்டும் எட்டு முறை இடிக்க வேண்டுமாம். ஒவ்வொரு முறைக்கும் இரண்டு நாள் இடைவெளி விட்டு இடித்தால் அஷ்டபந்தனம் தயார்.

சரி! இந்த எட்டு பொருட்களின் கலவையில் அப்படி என்ன தெய்வீகத் தன்மை இருக்கிறது? பந்தனா சக்திகள் என்று எட்டு சக்திகள், எட்டு பொருளுக்கும் உரிய தேவதைகள் இதில் உள்ளனர். இடிக்கும் உரலில் பிரம்மாவையும் உலக்கையில் மகாவிஷ்ணுவையும் ஆவாஹனம் செய்து பூஜித்த பிறகே இடிக்கத் தொடங்குவார்கள். அப்போது சிவசிவா, நாராயணா என்று அந்தந்த தெய்வங்களின் நாமாவை உச்சரித்துக்கொண்டே இடித்தால் அஷ்டபந்தனத்தின் புனிதத் தன்மை கூடுமாம்!

இப்படி மிகுந்த சிரமத்தோடும் சிரத்தையோடும் தயாரித்த அஷ்டபந்தனத்தைச் சாத்தினால், அடுத்த பன்னிரண்டு ஆண்டுவரை அந்த விக்கிரகத்தில் சக்தி இருக்குமாம்.

இவ்வளவு கஷ்டப்பட்டுத் தயாரிக்கும் அஷ்டபந்தனத்தில் ஊதுவத்தியைச் செருகி வைப்பதும், மிக அருகில் கற்பூரம் ஏற்றி வைப்பதும் அஷ்டபந்தனத்தை உருக்கிவிடும் என்று தெரிந்துகொள்ளுங்கள். யாரோ சொன்னார்கள் என்று சிறிதளவு அஷ்டபந்தனத்தை நகத்தால் கிள்ளி வீட்டுக்கு எடுத்து வருவதும் மகா பாவம் என்பதையும் புரிந்துகொள்ளுங்கள்.

நன்றி : கம்பனடிப்பொடி சா.கணேசன்

பூசை சு.அருணவசந்தன்

● ஆர்.வஸந்தா, சென்னை - 28

? மாநில செக்ரடேரியட்டில் புகை பிடிக்கத் தடை என்ற விதியை ஏற்பதற்கில்லை என்றும் தாம், தமது அலுவலக அறையில் புகைபிடிப்பது தொடரும் என்றும் மே.வங்க முதல்வர் பேசியிருப்பவை பொறுப்புள்ள சொற்கள் தானா?

! விதிமுறை யோசனை அளவிலேயே இருக்கிறதா? சட்டமாகிவிட்டதா என்பது ஒரு புறம் இருக்க, பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டியவர்கள் தவறான முன்னுதாரணங்களாக அமைவது ரொம்ப வருந்தத்தக்கது.

நீங்கள் கேட்டவை தராசு




* விடுத்த வேண்டுகோள்!

● எம்.சம்பத், வேலாயுதம் பாளையம்

? ஒரிசா சபாநாயகர் மகேஷ்வர் மொகந்தி மீது, சபைக் காவலர் காயத்ரி பாண்டா, பாலியல் புகார் தெரிவித்திருப்பது பற்றி..?

! இந்தக் குற்றச்சாட்டு ஒரு 'செட்-அப்' என்பதாகக் கருதப்பட்டு ஒரு அமைச்சரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. இருப்பினும் பாண்டா பதவி விலகியிருப்பது வரவேற்கத்தக்கதே. இது போன்ற பொய்யும் மெய்யுமான புகார்கள் பொதுவாழ்வில் இருப்பவர்கள் பேரில் அதிகரித்து வருவது வருந்தத்தக்கது.



* புகையும் விவகாரம்!

கம்யூனிஸ்ட் - காங்கிரஸ் உறவு எப்படி?

● ரஞ்சனிப்ரியன், பள்ளிபாளையம்

? 'பழைய வெள்ளச் சேதத்துக்குக் கேட்ட பணமே இன்னும் வரவில்லை...' என்று மத்திய அரசு மீது முதல்வர் குற்றம் சாட்டியுள்ளாரே?

! கூட்டணி கட்சிங்கிறதால 'ப்ரஷர்' கொடுத்து கூடுதல் தொகைக்கு 'சாங்ஷன்' வேண்டுமானால் வாங்கிக்கொள்ளலாம். பணத்தை வாங்குவது கஷ்டம்! சட்டியிலிருந்தாதானே ஆப்பையிலே வரும்!



* மறந்த விஷயம்!

● லலிதா செல்லப்பா, சென்னை-75


? 'நவநாகரிக சூப்பர் மார்க்கெட்டில் கீரை வாங்குகிறீர்கள் என்றால், நீங்கள் உங்கள்

தெருவில் கீரை விற்கும் ஏழைப் பெண்ணின் ஒரு வேளை சாப்பாட்டைப் பிடுங்கிக்கொள்கிறீர்கள்' என்று பத்திரிகையாளர் சாய்நாத் சொல்வதன் லாஜிக் என்ன?

! ஐந்து ரூபாய் கீரையை ஏ.ஸி. கடையில் ஏழு-எட்டு ரூபாய் கொடுத்து வாங்க நமக்குக் கட்டுப்படியாகலாம். ஆனால், அந்த ஐந்து ரூபாய் இழப்பு, ஏழை உழைப்பாளியான -அன்றாடங்காய்ச்சியான கீரைக்காரிக்குக் கட்டுப்படி ஆகாது. லாஜிக் சிம்பிள்தான். ஆனால், பிரச்னை சிக்கலானது. தீர்வும் சிம்பிள் இல்லை.



* ப்ரஷர் பாலிடிக்ஸ்!



* விரட்டும் வருத்தம்!

● தி.வி.கிருஷ்ணமூர்த்தி, மும்பை-5

? நம் நாட்டில் ஒவ்வோர் ஆண்டிலும் 58,000 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்கள் வீணாகின்றன. இத்தனைக்கும் உலகின் காய்-கனி உற்பத்தியில் முறையே 11 சதவிகிதமும் 15 சதவிகிதமும் இந்தியாவில் விளைபவைதான். ஆனால், உலக ஏற்றுமதியளவில் 1.7 சதவிகிதம் 0.5 சதவிகிதம் மட்டும்தான் இந்திய காய்-கனிகள் இடம் பெறுகின்றன. ஏன் இப்படி?

! விவசாயம், கல்வி போன்ற இன்றியமையாத துறைகளில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக மத்திய - மாநில அரசுகளின் கவனம் சிதறுகிறது. இதைத்தான் இப்புள்ளி விவரம் உணர்த்துகிறது. விவசாய உற்பத்தியை அதிகரிப்பதுடன் அதனைப் பக்குவப்படுத்தி, கவர்ச்சிகரமாக விற்பனைக்கும் ஏற்றுமதிக்கும் உரு மாற்றும் துறையில் தீவிர ஈடுபாடு காட்ட வேண்டும்.

● கே.வி.ராமன், சென்னை - 73

? பங்களாதேஷ் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன் நம் நாட்டைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டாராமே?

! கருத்துச் சுதந்திரத்தை மதித்து, அந்த எழுத்தாளருக்கு இந்திய அரசு இங்கே அடைக்கலம் தந்ததுடன் நிற்க முடியவில்லையே! அவர் பாதுகாப்புக்கு ஓர் அரணும் உருவாக்கிய நிலையில், அவர் சிறைப்பட்டது போன்ற உணர்வை அனுபவித்து, மன நலமும் பாதிக்கப்பட்டிருக்கிறார். இந்தச் சூழலில் அவர் அயல்நாடு சென்றதே நல்லது.

● ச.நாகரத்தினம், திருப்பூர்

? சம்பள உயர்வில் திருப்தியின்றி மத்திய அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்துவது சரியா?

! உயர்மட்ட ஊழியர்களுக்குத் திருப்திதான். கீழ் மட்டங்களில் இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு, ஆறாவது ஊதிய கமிஷன் நியாயம் செய்யவில்லை என்றுதான் போராடுகிறார்கள்.

● சி.கார்த்திகேயன், சாத்தூர் ★

? உண்மையில் கம்யூனிஸ்ட் - காங்கிரஸ் கட்சியின் உறவுகள் எப்படி உள்ளன?

! எண்ணெயும் தண்ணீரும் இணைய emulsifier தேவை என்பது ரசாயனம். இங்கே அது missing.

● கே.ஏ.காளிமுத்து, இராணிப்பேட்டை ☐

? உலகிலேயே இந்தியாவில்தான் மருத்துவச் செலவும் மருந்துகள் விலையும் குறைவு என்கிறாரே அன்புமணி?

! அது சரி, ஆனால், நோயாளிகள் இங்கேதான் அதிகம் என்று சொல்லாமல்

☐ ரூ.100 பரிசு பெறுபவர் :
கே.ஏ.காளிமுத்து, இராணிப்பேட்டை

விட்டுவிட்டாரே! அதிலும், அன்புமணி குறிப்பிடும் குறைந்த செலவைக்கூட ஏற்க முடியாத ஏழை நோயாளிகள்!

● **ஜோ.பன்னீர்செல்வம், சென்னை - 12**

? 'தே.மு.தி.க. தொண்டர்கள் வரதட்சணை கேட்கக்கூடாது' என்று தலைவர் விஜயகாந்த் வேண்டுகோள் விடுத்துள்ளது பற்றி...?

! வரதட்சணை மட்டுமென்ன... வேறு எந்தவிதமான சமுதாயக் கொடுமையிலும் சுகாதாரக் கேட்டிலும் தே.மு.தி.க. தொண்டர்கள் ஈடுபடக் கூடாது என்று அவர் பட்டியலே போடலாம். ஆனால், வேண்டுகோளாகத்தான் இருக்கும்; நிபந்தனையாகாது - கட்சியின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதால்.

● **லெ.நா.சிவகுமார், சென்னை - 33**

? செல்ஃபோன் இணைப்புகளின் எண்ணிக்கையில் இந்தியாவும் சீனாவும் அமெரிக்காவை முந்திவிட்டனவாமே?

! ஆச்சர்யமென்ன? இவ்விரண்டு நாடுகளிலேதானே மக்கள்தொகை மிக அதிகம்! அதிலும் அமெரிக்காவைக் காட்டிலும் மிக அதிகம்!

● **ஜே.வி.ஜே. கண்ணன், திருச்சி - 8**

? தமிழ்நாடு அரசின் சேமிப்புக் கிடங்குகளில் 2557 மெட்ரிக் டன் அரிசி அதிகாரிகளின் மெத்தனத்தால் கெட்டு வீணாகிவிட்டதாமே?

! இதுபோல் பல முறை நடந்த பிற்பாடும் நமது மத்திய - மாநில அரசுகள் பாடம் கற்கவில்லை. ரயில்வேயில் தனியார் துறையைப் புகுத்தியதுபோலத் துணிந்து காரியம் செய்தால், உணவுப் பொருள் பாதுகாப்பு - வினியோகம் சீர்படும். கொள்கை குறுக்கே நிற்கிறதே!

● **கே.எஸ்.சுந்தரம், பெங்களூரு**

? 200 எபிசோட்களுக்குள் ஒரு டீ.வி. சீரியலை முடிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வரலாமே?

! ஆசைப்படறதுதான் படறீங்க, 20 வார சட்டத்துக்கு ஆசைப்பட மாட்டீங்களோ! நிற்க... அப்படி ஒரு சட்டம் கொண்டுவர முயன்றால், அதை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டு 'ஸ்டே' வாங்கிவிடுவார்கள்! நீதிமன்றத்தில் 200 வருட இழுபறிதான் நீடிக்கும்.

● **ஜி.பொன்ராஜ்குமார், இராஜபாளையம்**

? அண்ணாவின் வளர்ப்பு மகன் பரிமளம் தற்கொலை செய்துகொண்டது பற்றி..?

! அவருக்கிருந்த உடல் உபாதையைத் தாங்கும் மன வலிமை தளர்ந்து போனதன் வருத்தத்துக்குரிய அடையாளம். அண்ணாவின் வளர்ப்பு மகனுக்கு அது நேர்ந்தது கூடுதல் வருத்தம்.

● **கே.எல்.சுபாக்கனி, மேலகிருஷ்ணன்புதூர்**

? 'தமிழுக்கு வடமொழி செய்த கெடுதலை ஆங்கிலம் தமிழுக்குச் செய்யவில்லை' என்கிறாரே அமைச்சர் அன்பழகன்?




★ இதமளிக்கும் இடப் பெயர்வு



★ கூடுதல் வருத்தம்!

! எந்த மொழியும் தமிழுக்குக் கொடுமை இழைத்துவிட முடியாது. வடமொழியையும் வரித்துக்கொண்டு, ஆங்கிலத்தையும் அரவணைத்துக் கொண்டு தமிழ், ராஜபாட்டையில் பவனி வருகிறது. தொலைக்காட்சி தொகுப்பாளினிகள் கூட அதைக் கொலை செய்ய முடியாது! தமிழுக்கு வந்து சேர்ந்து கலந்துபோன சொற்களை அன்னியமாக எண்ண ஆரம்பித்தால்தான் கஷ்டம்!

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
சி.கார்த்திகேயன், சாத்தூர்







குட்டை சொல்லும் குஜராத்!

சிரஞ்சீவித் திட்டம் : கர்ப்பிணிகளின் காட்ஃபாதர்!

நாடக மேடையின் திரையில் 'குஜராத் நிஜ நாடக இயக்கம்' என்ற பெயர் பளிச்சிடுகிறது. 'சீக்கிரம் ஆரம்பிங்கப்பா' என்று அரங்கத்தில் குரல்கள் எழுகின்றன. ஒரு கண்ணியமான இளைஞர் மேடையில் தோன்றுகிறார்.

இளைஞர்: பொதுமக்களுக்கு வணக்கம். எங்கள் நிஜ நாடக இயக்கம், சமூக அவலங்களையும், மக்கள் பிரச்னைகளையும் விளக்கி, பல நாடகங்கள் போட்டிருக்கிறது. ஆனால், தீர்வு அரசின் கையில்தான் இருக்கிறது. அரசாங்கத்தால் எடுக்கப்படும் நல்ல நடவடிக்கைகளை, மக்கள் முன் எடுத்து வைப்பது எங்கள் கடமையென்று கருதுகிறோம். நமது கிராமத்துப் பெண்கள் பேறுகாலத்தில் ஆயாவிடம் பிரசவம் பார்த்துக் கொள்வதும், அதனாலே நிறைய பெண்கள் அல்பாயுஸில் சாவதும் நமக்குத் தெரியும்! அப்படியே தாய் தப்பித் தவறிப் பிழைத்தாலும், பிறக்கின்ற குழந்தை மரணத்தைத் தழுவும். இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று குஜராத் மாநில அரசு, 'சிரஞ்சீவி' திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இந்தத் திட்டத்தின் வெற்றியை விளக்கும் நாடகம்தான், **'அம்மா நான் சௌக்கியம்; நீ சௌக்கியமா?'** இதோ நாடகம்.

(திரை மூடி, திறக்கிறது).

இடம்: *கட்ச் மாவட்டம், செடாட்டா கிராமம். பள்ளிவாசலுக்குப் பக்கத்து வீடு. கர்ப்பிணியான மருமகள் ஆயிஷா, கதவோரம் சாய்ந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவரது மாமனாரும் மாமியாரும், கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு, காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

மாமனார் : *(தமது மனைவியிடம்)*

ஆயிஷாவுக்கு நாள் நெருங்குதே. ஊர்மிளா பெண்ணிடம் சொல்லிட்டியா? அவள் சமயம் பார்த்து வெளியூர் போயிடப் போகிறாள்.

மாமியார் : பிரசவமாக இன்னும் இரண்டு மாசம் ஆகுமாம். ஆனா நேற்று நம்ம டீச்சர் ஷரீன் வந்திருந்தாங்க. 'ஆயாக்களிடம் பிரசவம் பார்த்து ஏன் ரிஸ்க் எடுக்கறீங்க? ஏழைகள், டவுன்ல இருக்கிற தனியார் மருத்துவமனை யிலேயே இலவசமாகப் பிரசவம் பார்த்துக்க, நம்ம முதல்வர் மோடி திட்டம் கொண்டு வந்திருக்கார். அதைப் பத்தி புஜ்ஜுக்குப் போன போது விசாரிச்சேன்னாங்க. டாக்டர் பாதர்கா, இந்தத் திட்டப்படி இலவசமாகப் பிரசவம் பார்க்கிறாராமில்ல. அங்கேயே ஆயிஷாவுக்கும் பார்த்துக்கலாம்'னு ஷரீன் சொன்னாங்க.

மாமனார்: அவசரத்துக்கு நாம டவுனுக்குப் போக முடியுமா?

மாமியார்: போக்குவரத்துக்கு 200 ரூபாயும், கூட உதவி செய்ய வருபவருக்கு 50 ரூபாயும் அரசே கொடுக்குதாமில்லே!

மாமனார்: அட.... ஆச்சரியமாக இருக்கே!

(திரை மூடி விலகுகிறது)

இடம்: புஜ் டவுன், டாக்டர் பாதர்காவின் மருத்துவமனை.

ஷரின்: டாக்டர், செடாட்டா கிராமத்தில் இருக்கிற எனக்குத் தெரிஞ்ச பொண்ணு ஆயிஷாவுக்கு நீங்க இலவசமாகப் பிரசவம் பார்க்கணும்.

டாக்டர்: அதுக்குத்தானம்மா நாங்க இருக் கோம். அரசாங்கத்தோட சிரஞ்சீவித் திட்டத்துல சேர்ந்திருக்கோம். தொடர் மருத்துவ கண் காணிப்பு இல்லாம, மருத்துவமனைகளில் பிர சவம் பார்த்துக்க வாய்ப்புக் கிடைக்காமலும், பிரசவத்தின்போது கிராமத்துத் தாய்மார்களும், பிறக்கும் குழந்தைகளும் பரிதாபமா சாகறது நம்ம மாநிலத்தில் ரொம்ப அதிகமா இருந்தது. அந்த நிலையை மாத்தணும்னு ஆரம்பிச்சது தானே சிரஞ்சீவித் திட்டம். மகப்பேறு மருத்துவ நிபுணர்களும் அரசு மருத்துவமனைகளில் போதிய அளவு இல்லை. எனவேதான், எங் களைப் போன்ற தனியார் மருத்துவர்களை இணைச்சுக்கிட்டு அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துது.





* டாக்டர் பாதர்கா...









ஷரின்: கருவுற்ற துவக்கத்திலிருந்தே உங்களிடம் செக் - அப் செய்துக்க வரணுமில்லே.

டாக்டர்: தாராளமா வரலாம்... செய்து கொள்ளலாம். மருந்து, வைட்டமின் மாத்திரைகள் இலவசமாகக் கொடுப்போம். எல்லாம் இலவசம். இதுவரை நானே இந்தத் திட்டப்படி 2000 பிரசவம் இலவசமா பார்த்திருக்கிறேன்.

ஷரின்: உங்களுக்கு எப்படிப் பணம் கிடைக்குது டாக்டர்?

டாக்டர்: அரசு எங்களிடம், எந்தச் சமயத்திலும் இந்தத் திட்டத்துக்குச் செலவழிக்க 30,000 ரூபாய் இருக்கும்படியாக நிதி வசதி செய்து கொடுத்திருக்கு. நூறு பிரசவம் பார்த் தால், எங்களுக்கு சுமார் ஒரு லட்சத்து எண்ப தாயிரம் ரூபாய் ஊக்கத்தொகை மாதிரி அரசு கொடுக்கும். பிறந்து இறக்கும் தருவாயிலிருந்த பல குழந்தைகளையும் பிரசவ சிக்கல்களால், இறக்கவிருந்த பல தாய்மார்களையும் என்னால காப்பாத்த முடிஞ்சிருக்கு. இந்தத் திட்டம் இல்லாவிட்டால் பல இறப்புகள் நடந்திருக்கும். கட்ச் மாவட்டத்தில் மட்டும் 25 தனியார் டாக்டர்கள் இதில் பங்குகொண்டிருக்கோம். மாநிலம் முழுவதும் 1800 டாக்டர்கள் அரசோடு இணைஞ்சு செயல்பட்டு வர்றாங்க.

ஷரீன்: கேட்கவே சந்தோஷமா இருக்கு டாக்டர். இந்த உயிர் காக்கும் திட்டத்தாலே உங்களுக்கும் திருப்தியும் சந்தோஷமும் அதிகமாகுமில்லே...

டாக்டர்: நிச்சயமாக!

(காட்சி மாறுகிறது)

இடம்: *பாதர்கா மருத்துவமனை ஆயிஷாவின் கைகளில் அவளது குழந்தை!*

ஆயிஷாவின் மாமனார்: டாக்டர்! உங்களுக்கு நன்றி சொல்வதா அல்லது நம்ம முதல்வர் மோடிக்கு நன்றி சொல்வதா?

டாக்டர்: முதல்ல கடவுளுக்கு நன்றி சொல்லுங்க; அப்புறம் அரசுக்கு நன்றி சொல்லுங்க. நீங்க பண்ண வேண்டியதெல்லாம், உங்களால் முடிந்த அளவு, இது போல திட்டம் இருக்கிறது என்று செய்தியைப் பரப்புறதுதான்... அதுதான் நீங்க செய்து தரக்கூடிய பெரிய நன்றி.

ஆயிஷா: டாக்டர்... எங்கக் கிராமத்தி



லேருந்து கர்மா என்ற தோழியும் அட்மிட் ஆகியிருக்கா?

டாக்டர்: அவளுக்கும் சுகப்பிரசவம் தாம்மா. உன்னைப் போலவே அவளுக்கும் பெண் குழந்தை.

ஆயிஷா: டாக்டர் ஒரு சந்தேகம். சுகப்பிர சவம் என்றால் பிரச்னையில்லை. சிக்கலாகி சிசேரியன் என்றால் பணம் கூடுதலா செல வாகுமோ?

டாக்டர்: ஆயிரம் ரூபாய் மயக்க மருந்து டாக்டருக்கும் இரண்டாயிரம் ரூபாய் அறுவை சிகிச்சை நிபுணருக்கும் செலவாகும். அவ் வளவுதான்.

ஆயிஷா: அப்ப நாங்க கிளம்பறோம்.

டாக்டர்: மறக்காம, சாப்பிட வேண்டிய மருந்து, மாத்திரைகளை வாங்கிட்டுப் போம்மா!

(திரை மூடி விலகுகிறது. மேடையில் முதலில் தோன்றிய இளைஞர் மீண்டும் தோன்றுகிறார்)

இளைஞர்: சிரஞ்சீவித் திட்டம் அமல்படுத் தப்பட்டதால் பிரசவத்தின்போது தாய்மார்கள் இறப்பும் மற்றும் பிறந்த குழந்தை இறப்பும் குஜராத்தில் மிகக் குறைந்துவிட்டது. 2005ல் துவங்கிய இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு லட்சம் குழந்தைகள் பிறந்திருக்கின்றன! இந்தத் திட்டம் மட்டும் செயல்படுத்தப்படாமல் இருந்திருந்தால், குறைஞ்சபட்சம் இதில் 600 தாய்மார்களையும் 4000 குழந்தைகளையும் நாம இழந்திருப்போம். இப்போ அந்த பழைய, பயமுறுத்தும் புள்ளி விவரங்களுக்கு குட்பை சொல்லியாச்சு குஜராத்!

எனவே, பொது மக்களே! நீங்கள் உங்கள் கிராம நிர்வாக அதிகாரியைச் சந்தித்து, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பதற்கான அடையாள கார்டு வாங்கிக் கொள்ளுங்கள். சிரஞ்சீவித் திட் டத்தின் பலனை அனுபவியுங்கள். பெண் குழந்தை பிறந்து விட்டதே என்று கவலைப் படாதீர்கள். அதைப் படிக்க வைக்க நிதி உதவி செய்ய வித்யாலட்சுமி என்ற திட்டம் இருக்கிறது. அதைப் பற்றி அடுத்த நாடகத்தில் சொல்கிறோம். வணக்கம்!

(திரை)



* ஆயிஷா...







* சாம்பசிவம்



வீட்டுக்குள் தமிழ்... வெளியே குஜராத்தி..!

தமிழகத்தைக் கலக்கிய சோழப் பேரரசர் ராஜராஜனுக்கும், குஜராத்துக்கும் எந்த வகையில் தொடர்பு இருந்திருக்க முடியும்? சோழர்களுக்குப் பின்னர் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்கள் நாயக்கர் மற்றும் மராட்டிய மன்னர்கள். அந்தக் காலகட்டங்களில் தஞ்சை பெரிய கோயிலில் கை கூப்பியபடி பஞ்சலோக ராஜராஜன் சிலை ஒன்று இருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில், மராத்திய மன்னர்களின் வாரிசுகளின் பொறுப்பில் தஞ்சை பெரிய கோயில் இருந்தது. (இன்றும் அதே நிலைதான்). ஆனால், அப்போது நடந்த அவர்களது குடும்பக் குழப்பத்தில், பஞ்சலோக ராஜராஜன் விலை போய்விட்டார். பல கைகள் மாறி, இப்போது அகமதாபாத் கௌதம் சாராபாய் அருங்காட்சியகத்தில் வந்தோரை வரவேற்கும் விதமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார். அந்தச் சிலையை தமிழகத்துக்கு மீண்டும் கொண்டுவர வேண்டுமென்பது, சரித்திர ஆர்வலர்களின் விருப்பம். கோகுல கிருஷ்ணன், குஜராத் மாநிலத்தில் தலைமை நீதிபதியாக இருந்த போது ராஜராஜனை தமிழகத்துக்கு கொண்டுவர முயற்சி செய்தார். ஆனால், நடக்கவில்லை.

குஜராத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் நிறையவே தொடர்பு உண்டு. ஆட்சிப் பணியில் அமர்ந்து குஜராத்தை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்லும் தமிழ் அதிகாரிகள், நம்மைத் தலைநிமிர வைக்கிறார்கள். இந்தியாவின் மான்செஸ்டரான அகமதாபாத்தில் சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு வரை கூட, பஞ்சாலை, நூற்பாலை மற்றும் துணி ஆலைகளில் உழைக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தவர்களில் நாற்பது சதவிகிதத்தினர் தமிழர்கள். ஆனால், இடையில் டெக்ஸ்டைல் துறையே ஆடிப்போய் பல

ஆலைகள் மூடப்பட்டன.


''ஒரு காலத்தில் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் தமிழர்கள் இருந்த அகமதாபாத்தில், இன்று இரண்டு லட்சம்பேர் இருந்தால் அதிகம். ஆனால், அகமதாபாத் மாநகராட்சி, மேனிலைப் பள்ளி உட்பட ஏழு தமிழ் மீடியம் பள்ளிகளை நடத்தி வருகிறது. அங்கு படிக்கும் மாணவ, மாணவிகளுக்குத் தமிழக அரசிடமிருந்து இலவச பாடப் புத்தகங்களைப் வாங்கிக் கொடுக்கிறோம். குஜராத் அரசும் குஜராத்தி மொழியிலிருந்து தமிழில் மொழிமாற்றம் செய்து புத்தகங்களை வழங்குகிறது. ஆனால், தமிழ் தொழிலாளர்கள் எண்ணிக்கை கணிச மாகக் குறைந்துவிட்ட நிலையில், தமிழ்ப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. இதன் விளைவாக, மாநகராட்சியின் முழுக்கவனம் இல்லாமல் ஒரு தொய்வு நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிகளைத் தாங்களே ஏற்று நடத்தலாமா என்கிற யோசனை பரிசீலனை யில் இருக்கிறது'' எனச் சொல்கிறார் சாந்த்கேடா தமிழ்ச் சங்கத்தின் தலைவரான சாம்பசிவம்.

பிழைப்பை முன்னிட்டு தமிழகத்திலிருந்து வெளியேறி, குஜராத்தில் தடம் பதித்ததன் காரணமாக, குஜராத்தியைக் கற்றுக்கொண்டு, உள்ளூர் மக்களுடன் இரண்டறக் கலக்கிறார்கள் தமிழர்கள். வீட்டுக்குள் தமிழும், வெளியில் குஜராத்தியும் பேச வேண்டியிருக்கிறது. எனவே, தமிழர்களின் குழந்தைகளுக்குத் தாய் மொழி தமிழாகவும் தந்தைமொழி குஜராத்தி யாகவும் ஆகிப் போனதில் வியப்பில்லை. தமிழ்ச்சங்கம் தன் பங்குக்கு ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள், பொங்கல் விழா என்று அசத்துகிறது. அரசின் உயர் மட்டத்தில் உள்ள தமிழ் அதிகாரிகளின் ஆதரவு தாராளமாக இருப்பதால், சங்கப் பணிகளுக்கு ஓர் உந்து சக்தி கிடைக்கிறது. அகமதாபாத் தவிர, பரோடா, ராஜ்கோட், சூரத் ஆகிய நகரங் களிலும் கடைத் தெருக்களில் தமிழைக் கேட்கக் கூடிய அளவுக்குத் தமிழர்கள் இருக்கிறார்கள். மற்றபடி, தமிழ்நாட்டுத் தமிழர்களைப்போல இவர்களுக்கும் தமிழுடனான தொடர்பு என்பது தொலைக்காட்சி சீரியல்களுக்குள் அடங்கி விடுகிறது.













மோடி காணாத கனவு!

–இல.கணேசன் பேசுகிறார்

“முழு நேர தேசப்பணி ஆற்ற வேண்டும் என்பதற்காகவே, தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர் நரேந்திர மோடி. அவர் பதவி ஆசையோடு அரசியலுக்கு வந்தவரில்லை; ஆர்.எஸ்.எஸ். அமைப்பால், அரசியல் பணி செய்ய அனுப்பி வைக்கப்பட்டவர். ஆர்.எஸ்.எஸ். பிரசாரகராகச் சிறு கிராமங்களுக்கும் சென்று சாதாரண மக்களுடன் தங்கிப் பணியாற்றியவர். எனவே, அவருக்குத் தேசம் தெரியும்; தேசத்தின் அடித்தட்டு மக்களின் அடிப்படைப் பிரச்னைகள் என்னவென்று தெரியும். அவரேகூட, ஒரு நாள் குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக வருவோம் என்று கனவு கண்டிருக்க மாட்டார். ஆனால், ஆண்டவன் அருளால், அப்படி ஒரு வாய்ப்புக்

“இன்றைய அரசியலில், மதவாதம்- மதச் சார்பின்மை என்பதெல்லாம் போலித்தனமான வார்த்தைகள்!”

கிடைத்தது. அதைப் பயன்படுத்தி குஜராத் மக்களுக்குப் பல நன்மைகள் செய்துகொண்டிருக்கிறார் மோடி.

கடந்த தேர்தலின்போது, நான் அவரது மணி நகர் தொகுதியில் வசிக்கும் தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரத்துக்குச் சென்றிருந்தேன். தமிழ் வாக்காளர்களிடம், 'நான் சென்னையிலிருந்து வந்திருக்கிறேன். நரேந்திர மோடிக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும்' என்று கேட்டபோது, பலரும், 'இதுக்காகவா நீங்க இவ்வளவு தூரம் வந்தீங்க? நீங்க கேட்டுக்கொள்ளணும்னு அவசியமேயில்ல... நாங்க அவருக்குத்தான் வாக்களிப்போம்' என்ற



குஜராத் டுடே *Exclusive*

னர்! நான் அவர்களிடம், 'நீங்கள் ஏன் மோடிக்கு வாக்களிக்க விரும்புகிறீர்கள்?' என்றேன். அதற்கு அவர்கள், 'தண்ணீர்ப் பிரச்னை தீர்ந்து, வீட்டுக் குழாயிலேயே தண்ணீர் கிடைக்கிறது; காங்கிரஸ் ஆட்சியாளர்களால் வளர்க்கப்பட்ட குண்டர்கள் ராஜ்ஜியம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு

"மனத்தில் பட்டதைத் துணிச்சலுடன் சொல்லிவிடும் மோடியின் குணத்தைத்தான் குஜராத் மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள்!"

விட்டது' என்றார்கள். கண்கூடாகத் தெரியும் முன்னேற் றங்கள்தான் மோடியின் வெற்றி ரகசியம்''

''அவர் மீது மதவாதி என்ற முத்திரை பலமாக விழுந்திருக்கிறதே?''

''கோத்ரா சம்பவம் நடந்த அன்று, பாராளு மன்றத்தில் பா.ஜ.க., சிவசேனை, அ.தி.மு.க. தவிர வேறு எந்த அரசியல் கட்சியுமே கண்டனக் குரல் கொடுக்கவில்லை. கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்த சம்பவங்களால் குஜராத்தில் சூழ்நிலை மாறியதும், மற்ற எல்லாக் கட்சிகளும் அதைப் பற்றிப் பேசி னார்களே தவிர, முந்தைய நாள் நடந்த கோத்ரா சம்பவத்தைக் கண்டிக்கவே இல்லை. கோத்ரா மற்றும் அதனைத் தொடர்ந்த சம்பவங்களின் போது, மோடி மிகத் திறமையாகச் செயல் பட்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டினார். அதற்கு முன் குஜராத்தில் கலவரங்கள் நடந்த போது, அப்போதைய முதலமைச்சர்களால் செய்ய முடியாததை, மோடி சிறப்பாகச் செய்து முடித்தார். கொள்கைப் பிடிப்பு மிகுந்தவர் மோடி, அவர்மீது பலவிதமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டபோது, உறுதியுடன் இருந்தார். மனத்தில் பட்டதை, பளிச்சென்று துணிச் சலுடன் சொல்லிவிடும் அவரது குணம், மக்கள் மத்தியில் அவருக்குப் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றைக்கு குஜராத்தில் இருக்கும் ஒரு கிறிஸ்தவரோ, முஸ்லிமோ






* அல்லயன்ஸ் ஸ்ரீநிவாசன்

ஃப்ரீ' போஸ்டுக்கு சி.டி. பரிசு!

விரைந்து வரும் 'குஜராத் டுடே' பற்றிய முதல் இரண்டு விமர்சனங்களுக்கு, துக்ளக் ஆண்டு விழாவில் மோடி ஆற்றிய உரையின் சி.டி. பரிசு!

சென்ற வார குஜராத் டுடே குறித்த விமர்சனங்களுக்கு சி.டி. பரிசு பெறுவோர்:

ஆர்.நாகராஜன், சென்னை - 117
டி.ரவி, ஈரோடு - 1



நரேந்திர மோடி முதலமைச்சராக இருப்பதால் எனக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா? இன்றைய அரசியலில், மதவாதம், மதசார்பின்மை என்பதெல்லாம் போலித்தனமான வார்த்தைகள்''என்கிறார்.

மோடியின் ஏழு புத்தகங்களைத் தமிழில் வெளியிட ஏற்பாடுகள் செய்து வரும் அல்லயன்ஸ் உரிமையாளர் ஸ்ரீநிவாசன் பேசுகிறார்:

தமிழ் நாட்டில் பல கட்சிகள் 'காமராஜ் ஆட்சியை மீண்டும் கொண்டு வருவோம்' என்று மேடைக்கு மேடை சொல்லிவருகின்றன. ஆனால், உண்மையிலேயே காமராஜ் ஆட்சியை மீண்டும் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியிருப்பவர் நரேந்திரமோடிதான் என்பது என் உறுதியான கருத்து. சொல் - செயல் - சிந்தனை என்று மூன்றும் ஒருங்கே சேர்ந்து செயல்படும் தலைவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்களில் ஒருவர் மோடி. எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒரு முனைப்புக் காட்டி, வெற்றிகரமாக முடிக்கிறார். ஓட்டு வங்கியை வேட்டையாடுவதற்கு வசதியாக தம் முடிவுகளை ஒருபோதும் அவர் மாற்றிக்கொண்டதில்லை. எந்த ஒரு சேவைக்கும், ஒரு கட்டணம் உண்டு என்று மக்களைப் பழக்கப் படுத்தியிருக்கிறார். இப்போது குஜராத் மக்கள் இலவசம் என்றாலே எரிச்சலடைகிறார்கள். அவர் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் செட்-அப் செய்யப்பட்டவையே!''

குஜராத் பயணம், பார்வை, படைப்பு:

ப்ரியன், எஸ்.சந்திரமௌலி

(பயணம் தொடரும்)

பட்டுப் புடைவை பரிசுத் திட்டம்!

ஆறு வார அதிரடி!

'குஜராத் டுடே' பக்கங்களில் அடங்கியுள்ள ஒரு முக்கியமான பெயரைக் கண்டுபிடித்து எழுத, அருகிலுள்ள கட்டங்களை நிரப்புங்கள். வட்டமிட்ட எழுத்துகளை வரிசைப்படுத்தி, கடைசி கட்டங்களை நிரப்புங்கள். கூப்பனையும் நிரப்பி, **'ஆறு வார அதிரடி – 5' கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை – 600 032 என்ற முகவரிக்கு 16.4.08க்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.** சரியான விடையை எழுதும் ஒரு வாசகருக்கு, **பாலம் சில்க்ஸ் வழங்கும் பட்டுப் புடைவை பரிசு!** ஒன்றுக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியாக எழுதினால், குலுக்கல் முறைதான்! ஆசிரியர் தீர்ப்பே இறுதி! போட்டி-3 மற்றும் 4-ன் முடிவுகள் அடுத்த இதழில்.

'ஆறு வார அதிரடி – 5'

பெயர் : ....

வயது : ....

முகவரி: ....

....

....

....

கல்கியில் விரும்புவது : ....

....

கல்கி -பாலம் சில்க்ஸ் வழங்கும் போட்டி-5

1. மேடையின் திரையில் பளிச்சிடும் 'நிஜம்'!

2. இந்த தமிழ்ச் சங்கத் தலைவர் சாம்பசிவம்

3. இந்தியாவின் மான்செஸ்டர்

4. மோடி போட்டியிட்ட தொகுதி

5. ராஜராஜன் உள்ள அருங்காட்சியகம்

6. பிரசவம் பார்க்கும் உள்ளூர்ப் பெண்.


7. 'ஒரு..........கிட்டத்தட்ட ஐந்து லட்சம் தமிழர்கள்

முதலில் கடவுளுக்கு நன்றி சொல்லப் பணித்தவர்!

கூட இருந்தே

விலைவாசி உயர்வைக் கண்டித்து வீதியில் இறங்கிப் போராடுவோம்' என்று ஹைதராபாத்திலும் கோவையிலும் நடந்த மாநாடுகளில் முறையே வலது - இடது கம்யூனிஸ்ட் கட்சிகள் குமுறித் தீர்த்திருக்கின்றன.
இதற்கு மாறாக காங்கிரஸோ, 'பொருளாதார முடிவுகளிலும், விலைவாசி உயர்வைக் குறைக்கவும் ஆலோசனை சொல்லாமல் வீதியில் இறங்கிப் போராடுவோம் என்பது பொறுப்பற்ற செயல். காம்ரேட்டுகள் கூட இருந்தே குழிபறிக்கிறார்கள்' என்று முணுமுணுக்கிறது.
கம்யூனிஸ்ட்களின் நிலைப்பாடுதான் என்ன? அதன் தலைவர்களைச் சந்தித்தோம்...

“எழுச்சியோடு நடந்த எங்கள் ஹைதராபாத் மாநாட்டில் எடுத்த முடிவுகளில் மிக, மிக முக்கியமானது, காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க.வுக்கு மாற்றாக மூன்றாவது அணியை மக்கள் முன் நிறுத்துவது என்ற தீர்மானம்தான். காங்கிரஸ் கட்சிக்கும், பா.ஜ.க.வுக்கும் முதலாளித்துவ ஏகபோகக் கொள்கைகளில் எந்த வேறுபாடும் கிடையாது. காங்கிரஸ், மதச்சார்பற்ற சக்தி என்ற முக்கியமான காரணத்துக்காகவே அதன் தலைமையிலான கூட்டணிக்கு இதுவரை எங்கள் ஆதரவைத் தொடர்ந்து கொடுத்து வருகிறோம். ஆனால், அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் இந்தியாவின் இறையாண்மையை, அமெரிக்காவின் காலடியில் வைக்க ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டோம். மூன்றாவது அணி என்பது தேர்தலை மையப்படுத்தி கட்டப்படுவது அல்ல. உழைக்கும் மக்களின் கைகளில் அதிகாரத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சி இது. விலைவாசி விவகாரத்தில், பல யோசனைகளைச் சொல்லியிருக்கிறோம். குறிப்பாக, ஆன்-லைனில் செய்யப்படும் 'ஊக' வியாபாரத்தைத் 'தடை செய்ய வேண்டும்' என்று



* நல்லகண்ணு

கலகம் செய்யும் காம்ரேட்கள்!

யோசனை சொன்னோம். இறக்குமதி செய்யப்படும் குரூட் ஆயிலுக்கு, கஸ்டம்ஸ் தீர்வையை ரத்து செய்தால், பெட்ரோல்-டீசல் விலை குறையும்; இதன் காரணமாக மற்ற பொருட்கள் விலையும் குறையும். பொது விநியோகத்தைப் பலப்படுத்த வேண்டும். ஆனால், சிதம்பரம் இதைப் பற்றி கண்டுகொள்வதாகத் தெரியவில்லை'' என்று ஆவேசமாகச் சொல்கிறார்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்கள் நல்லகண்ணுவும் தா.பாண்டியனும்.



* உ.ரா.வரதராஜன்

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த பிரமுகரும் தேசிய குழு உறுப்பினருமான உ.ரா.வரதராஜன், ''இந்த அறுபது வருட காலத்தில் எல்லா ஆட்சிகளையும் பார்த்துவிட்டோம். எந்த ஆட்சியும் மக்களின் அடிப்படையான பிரச்னைகளுக்குத் தீர்வு காணவில்லை. உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றால் டிக்டேட் செய்யப்படும்

குழி..?

கொள்கைகளைத் தவிர்த்த சுயேட்சையான பொருளாதாரக் கொள்கை தேவை. இந்தக் கொள்கை, உருவாக்கப்பட்டு, செயல் வடிவம் பெறவேண்டுமென்றால், காங்கிரஸ் - பா.ஜ.க.வுக்கு மாற்றாக மூன்றாவது சக்தியை மக்கள் முன்பு நிறுத்தவேண்டும். காங்கிரஸ், கூட இருந்தே குழி பறிக்கிறோம் என்ற குற்றச்சாட்டை எங்கள் மீது வைக்க முடியாது. காரணம், மத அடிப்படைவாதிகளான பா.ஜ.க.வை, அதிகார பீடத்திலிருந்து தள்ளி வைக்கவே, நாங்கள் காங்கிரஸ் கூட்டணியை ஆதரித்துக்கொண்டிருக் கிறோம். ஆனால், காங்கிரஸ் கூட்டணி தனது மோசமான செயல்பாடுகள் மூலம், மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வர வழி செய்துவிடக்கூடாது என்பதிலும், விழிப்பாக இருந்து அவ்வப்போது எச்சரிக்கை செய்கிறோம்; அது எங்கள் கடமை. காங்கிரஸ் கூட்டணியை ஆதரிப்பதால் எங்களுக்கு லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை. இப்போது தேர்தல் வைத்தால் ஜெயிக்கக்கூடிய இடது சாரிகளின் எண்ணிக்கை குறையும் என்ற கருத்துக் கணிப்பை நம்பத் தயாராக இல்லை. தேர்தலின் போது நாங்கள் வலுவாக உள்ள இடங்களில் காங்கிரஸ் - பா.ஜ.க. இரண்டையும் எதிர்ப்போம். மற்ற மாநிலங்களில் இந்த இரு கட்சிகளையும் தவிர்த்து, மற்ற கட்சிகளுடன் கூட்டு சேர்வோம்'' என்கிறார்!



* தா.பாண்டியன்



– ப்ரியன்


HAPPY HOLIDAY SPECIAL!
FULL OF PICTURES, INFORMATION AND ACTIVITY
- ENJOY THE HOLS!
Mini GOKULAM SUMMER FUN!
Now on the Stands
GOKULAM
APRIL 2008 Rs.10/-
THE Magazine for Children


Born Babies®
LITTLE KIDS™
New Mom & Mom to be
Baby Clothes ★ Clothing Accessories ★ Feeders ★ Feeding Accessories
Cosmetics ★ Cradle ★ Beds ★ Toys ★ Furniture ★ Pram ★ Food ★ Maternity Products
CHENNAI
.LOKESH TOWERS
·DAMBAKKAM HIGH Rd
NGAMBAKKAM
IENNAI - 34
·4 - 2825 0067
3291 3654
334/2, 2nd Avenue,
Anna Nagar West,
(Opp. to Nilgiris)
Chennai - 600 040.
044 - 32422255,
32422266
COVAI
69, T.V SAMY ROAD
R.S PURAM EAST
COIMBATORE - 02
0422 - 254 1626
436 6455
COCHIN
RUBICON BUILDING
SOUTH OVER BRIDGE
VALANJAMBALAM
COCHIN - 16
0484 - 235 8818
403 0220
Call us today Complete Checklist for Every New Mum & Mum-to-be On yr doorstep within 2 days.
www.littlekids.in
Customer Care 24 x 7 : 99419 11120,

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

